933

12.12

ஒன 3,63

ஓம்

சுத்த சக்தி

# பெரியார் வரலாறு

I. ஆசிய விளக்குகள்

II. கிரேக்கப் பெரியார்

சென்னை 145

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது.

உலவுழயிர் சிற்றுலகாம்; உள்ளத் தவிசில்
இலதும் பேரியான் இறை.

திருவண்ணாமலை, ஸ்ரீரமணாஸ்ரமம், சர்வாதிகாரி
நிரஞ்ஜனானந்த சுவாமிகளால்
பிரசுரிக்கப்பெற்றது
1934
விலை அணா ஆறு

64873
200.92

1790

*All rights reserved*
*by*
*the publisher.*

# பெரியார் வரலாறு

---

## அட்டவணை


| விஷயம் | பக்கம் |
|---|---|
| போற்றி ! | 5 |
| பதிப்புரை | 7 |
| முன்னுரை | 9 |
| **மாலை I. ஆசிய விளக்குகள்** | |
| 1. கௌதம புத்தர் | 15 |
| 2. கொன்புத்ஸன் | 23 |
| லவோத்ஸன் | 27 |
| 3. ஜாரதுஷ்ட்ரன் | 36 |
| 4. ஏசுகிறிஸ்துநாதர் | 49 |
| 5. கிறிஸ்துமத தியாகிகள் | |
| பிரான்ஸிஸ் முனிவன் | 59 |
| கிறிஸ்டாபர் முனிவன் | 67 |
| உருசூலா | 64 |
| காதரைன் | 65 |
| பெனிதிக்து முனிவன் | 66 |
| கிறிஸ்பன் முனிவன் | 68 |
| [illegible] முனிவன் | 69 |
| 'அகாதா' என்னும் பெண்மணி | 70 |
| செஸிலியா | 71 |

விஷயம் பக்கம்

6. முகம்மது நபி ... .... .... 72

7. ஸூபி ஸாதி ... .... .... 80

8. அப்துல் பஹாய் ... .... .... 8[illegible]

மாலை II. கிரேக்கப் பெரியார்

9. மஹாத்மா ஸொக்ராத்தன் .... .... 92

10. ப்ளாத்தன் ... .... .... 103

11. அரிஸ்தோதலன் ... .... .... 106

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 22 | 4 | தாம் | தம் |
| 47 | 28 | பொறு | பொரு |
| 52 | 20 | ஏசு, | ஏசு. |
| ,, | 28 | யடிமை | அடிமை |



உள்ளபொரு ளுள்ளத்தி லுள்ளபடி யுள்ளதனை
யுள்ளுறவி னாலே யுணர்.

# போற்றி!

எல்லாரு மின்புறுத லென்னின்ப மாக்கினை
யெனதியா னென்ப தறவே
யென்னுட் கலந்தவா றெங்கிலும் விளங்கினை
யியல்பா யிருந்த படியே!
தோல்லுலக முன்னுனை யாடலாய்த் தோற்றினை
தோற்றியதை மாற்றி மாற்றித்
தொழில்களெண் பதுகோடி சோர்வற வியற்றியுந்
தொழிலறு சமர்த்த னுனய்!
சொல்லரிய தூரியமெய் விண்ணொளிக் கப்பாற்
றுலங்கிடும் வெட்ட வெளியே!
துதிக்கத் துதிக்கத் தித்திழத் தமிழெனச்
சொக்குஞ் சுகப் பெருக்கே!
இல்லையென் பாருளு மிருக்கிறே ளிங்கென்னு
மேல்லையறு தில்லை யறிவே!
எச்சமய மும்பணிந் தேத்தரிய பொதுநடத்
தெந்தையே போற்றி போற்றி!

—சுத்தானந்த பாரதி.

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

# பதிப்புரை

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளின் ஒப்புயர்வற்ற சரித்திரத்தை ஸ்ரீ ரமண விஜயமென்னும் பெயரால் உலகுக் களித்து இசைபெற்றுள்ள ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அப் பொன்னூலின் தொடர்பாய், பெரியார் வரலாறு என்னு மிவ்வரும்பெரும் நூலை இன்று தமிழுலகுக் களித்துள்ளார். அதிற் காணும் பெரியார் வரலாறுகளை இதிற் காணலாம். கல்வி கேள்விகளில் முதிர்ந்தவராய்த் தமிழ்த்தாய்க்குப் பற்பல துறைகளிலும் தொண்டாற்றித் தவத்துறையேகிய ஆசிரியர், ஆன்மாக்களின் அறிவுப் பெருக்கமே அருட்பணியென உணர்ந்து, அந்நோக்கத்துக்கிணங்க, தம் ஏகாந்தத்திலிருந்து இன்றும் தமிழ்த்தாய்க்குத் தொண்டாற்றுவதை நம்மவர் நன்கறிவர்.

பெரியார் வரலாறு என்னும் இந்நூல், நம் நாட்டுப் பெரியார் சரித்திரங்களை மாத்திரம் விளக்கப் புகாமல், நானு மதங்களையும் கொள்கைகளையும் தழுவிய ஏனைய நாட்டுப் பெரியார்களின் வரலாறுகளையும் விளக்கி, வேதாந்திகள், சித்தாந்திகள், பௌத்தர், ஜைனர், கிறிஸ்தவர், முகமதியர் முதலிய யாவருக்கும் பயன்படுமாறு பொதுநோக்கத்தோடு அமைந்திருப்பதால் சமரஸ பாவத்தையும், சகோதர

உணர்ச்சியையும். தமிழ்மக்களிடம் விருத்திசெய்யுங் கருவி களிற் சிறந்து விளங்குமென்பதில் ஐயமில்லை.

மற்றும், சிறியார் மனத்தைத் தூய்மையாக்கிப் புத்தியைக் கூர்மைப்படுத்தப் பற்பல பெரியார்களின் சரிதை யைப் போன்ற பெருந்துணை யொன்றின்று. அதனால் இந் நூல் படிப்பார்க்கு நல்லுணர்வூட்டிப் பேருவகையளிப்பது திண்ணம். இதன் தமிழ்நடை உரைநடை பேண மாண வர்க்கு உதாரணமாம்.

மாணவர் பகுதியாகத் தனியே பதிப்பித்த இப்புத்த கம், ஆசிய விளக்குகள், கிரேக்கப் பெரியார், வெண்ணாட் டறிஞர், மஹாகவிகள், பாரதமணிகள், தென்சுடர்கள் என் னும் ஆறுமாலைகளடங்கிய பேரியார் வரலாற்றின் முன்னிரு மாலைகளாம். முழுநூல் வேறேயுளது.

இத்துணை நன்மை பயக்கும் இவ்வரும் இலக்கியத்தைத் தமிழ்நாடு அன்புடனேற்றுப் பயனடையுமாறு திருவருள் துணைபுரிவதாக !

பதிப்பாசிரியர்.



" இயல்பான உன்னை யியல்பா யறிந்தாங்
கியல்பாகி யின்புற் றிரு."

ஓம் சுத்த சக்தி

# முன்னுரை

எல்லா வுலகிற் கிறைவ னொருவன்
எல்லா வுடலும் இறைவ னாலயமே

## க. மனிதனுள் மனிதன்

அன்பர்களே!

இத்திருவுடல் மாளிகைக்குள் கொலுவீற்றிருக்கும் மன்னனைத் தேடுமின்; அவனே உள் மனிதன், உண்மை மனிதன், புருஷன், ஆன்மா, உம்முட் கோயில் கொண்ட சாமி. நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள்! ஒரு ஜீவசாட்சி எப்போதும் உம்மை அழைத்துக்கொண்டேயிருக்கிறது. அதன் அழைப்பென்ன? "மனிதா! இதோ இருக்கிறேன்; உலகெங்கும் இருப்பதுபோலவே உன்னுள்ளும் இருக்கிறேன். நானே உண்மை நீ. புறத்தே புந்தியைவிடுத்து ஏன் கவலைசுமந் தலைகிறாய்? சித்தப் புயலில் சுழன்று திசை தெரியாதலையும் ஜீவனே! இதோ என்னைப்பற்றித் துறை சேர். இதோ நான் உள்ள இடமே உள்ளம்; அதுவே உன்னிடம்; நானே நீ."

ஒவ்வொருவருள்ளும் ஓங்கும் பெரியோன் இந்த ஆன்மாவே. இப்பெரியோனின் விளக்கமே பெரியார் வரலாறு. பேரறிவாளர், பேரன்பர், அருட்புலவர், வெற்றி வீரர், அற்புதச் செயலாளர், அனைவருள்ளும்—அறிவும், அன்பும், புலமையும், வீரமும், ஆற்றலுமாயிருப்பது இந்த

உள்மனிதனே. அவனின்றி புறமனிதனுக்கு இருப்பில்லை; இயக்கமில்லை; இன்பமில்லை. உடல் ஒரு சிற்றுலகம்; அதற்கு மன்னவன் உயிர்க்குயிரான பரமாத்மா; அவனே ஒவ்வொருவருடலிலும் உள்ளத்தான்; அவனே உலகத்தான். பிண்டத்திலுள்ளவனே அண்டத்திலும்; இவ்வுணர்வே ஆன்மநேய வொருப்பாட்டுரிமையின் ஆணிவேர். இவ்வுணர்வில் ஒன்றுபட்டால் பிறகு பல சாதி மதப் பேச்சே உலகில் இராது. இவ்வாறு மனித சமுதாயம் முழுதும் ஆன்மவொற்றுமையுடன் முன்னேறுவதற்குரிய வழிகளையே அருட்பெரியார்கள் வாழ்விலும், வாக்கிலும் விளக்கினர்.

வாருங்கள் என்னவர்களே! கடவுளன்பு, அறிவு, உறுதி, பொதுநல ஊழியம், அருட்புலமை, தூயவாழ்வு முதலியவற்றிற்குஅரிய உதாரணங்களாக விளங்கிய பெரியார் வாழ்வை யெல்லாம் தொடர்ந்து ஆராய்வோம். முடிவில் அத்தனை மேலோர் வாழ்வையும், வாக்கையும் சீர்தூக்கிப் பார்த்து மனித சமுதாயம் முழுதும் பற்றிநின்று பயன்பெறும் ஒரு இன்பவழியைக் காண்போம்.

உலகிற்போந்த தீர்க்கதரிசிகள், கர்மவீரர், தர்மவீரர், மஹாகவிகள், அருட்புலவர், அறிவாளிகள், சமரசச் சுடர்கள் இவர்கள் வரலாறும், திருவாக்குகளும் நமது வாழ்விற் பதியச் செய்வோம். அடியிற்காணும் சில மொழிகளைக் கருத்தில்வைத்துப் பிறகு பெரியார்களை வணக்கமுடன் காண்போம்.

## உ. அருளிறைவன்

ஒரே கதிரவன் உலகிற்கெல்லாம் ஒளி தருகிறான்; ஒரே அருளிறைவன் ஒவ்வொருவரிடமும் ஆன்மவொளி

யாகப் பரவுகிறான். ஆன்மாவே உள் மனிதன்; அதன் நிழலே தூலமனிதன்; பரமாத்மா ஒருவன்; தனது அருட் சக்தியால் அவன் எங்கும்பரவி எல்லாமியற்றுகிறான். அவன் ஸத் (உண்மை) சித் (அறிவு) ஆனந்தம் (இன்பம்). அவ னொளியாலே இரவி யொளிர்வது; அவன் கனலாலே அனல் கனல்வது; அவனே அவனிக் கான்மா; அவனே உயிரி லுணர்வு; எங்கும் நிறைவு; சிறிதிற் சிறியன்; பெரிதிற் பெரியன்; அவனின்றி யாதுமில்லை; அவனே யனைத்தும்; அனைத்தும் அவனே. சித்த அலைகளை நிறுத்துமின்; புறத்தே ஓடும் மனத்தை உள்ளே திருப்பி அமைதியாக நிற்கும் ஒவ் வொருள்ளத்தும் பரமான்மா பளிச்சென விளங்குகிறான். உள்ளமே கைலை, வைகுண்டம், வானரசு; அதில் பரமாத்மா விளங்குகிறான். அவனை உள்ளே காணாதான் உலகிற் காணான். தன்னுட் கோயில்கொண்ட கடவுளைக் கண்ட பிறகுதான் மனிதன் மனிதனாகிறான். தன்னுள் விளங்கும் இறவாப் பொருளை அடைந்தபின் மனிதன் சாவை வெல்லு கிறான். கடவுளுணர்வால் மனிதன் மனிதக்கடவு ளாகிறான். மனித ஜாதி முழுதும் கடவுளுணர்வில் வாழ்வதால் தேவ ஜாதியாகிறது. தன்னுள் உள்ள வானைக் கண்டவன் வானோன்; தன்னுள் விளங்கும் தெய்வத்தைக் கண்டவன் தேவன். உடலே கோயில், சுத்தான்ம நிலையம்; அதை வலியுறச் செய்.

## ௩. உன்னையறி

உன்னை நீ ஆர்ாய்; உன்னுள் ஒரு அற்புத உலகம் உள் ளது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம், பொறிபுலன் கள், நாடிநரம்புகளெல்லாம் அதில் வசிப்போர். அனைத்திற் கும் அரசன் ஆன்மா. அவனே நீ; உள்ளாழ்ந்து உன்னை

யறி. மனக்கதவைத் திறந்தால் உன்னுள் உள்ள மஹானைக் காணலாம். "உன்னையறி" என்பதே உயர்ந்த உபதேசம்.

தன்னை யறிந்தவன் அன்னியங் காணான்; தானாகவே உலகைக் காண்பான். அவன் குணதொந்தங்களிற் பற்றான். தற்காட்சியே சர்வான்மக் காட்சி தரும். ஒளியை விரும்பு, இருள்விலகும்; உண்மையைப் பயில், பொய்விலகும்; ஆன்மாவில் உறுதிகொள், அச்சம் ஒழியும்; அன்பை வளர், பகைவிலகும்; பேராசைப் படாதே, பேரமைதியெய்தும்.

## ச. ஆன்மவெற்றி

புறவிழிகளுக்குத் தூலபலமே பெரிதாகக் காண்கிறது; ஆத்மபலம் ஆயிரம்மடங்குபெரிது; அது அசுரனைப்போல உலகை அழிக்காது, அனைவரையும் அன்பாலும் அருளாலும் வெல்லுகிறது. ஆத்மவீரன் உண்மையின் தூதன்; அவன் வாட்படையின்றி, ஆட்படையுமின்றி, ஒருவனாக நின்றே உலகை உண்மைக்கு வெல்லவல்லவன். மனிதா! ஆத்மதீரனாக இரு; உன்னுள்ளிருக்கும் நுண்ணுலகை மன உறுதி கொண்டு வெல்; உனக்கு நீ மன்னனாயிரு; புறவுலகை நீ பம்பரம்போல் ஆட்டலாம்; அது உன்முன் வணங்கி நிற்கும்; உன்னை நீ வெல்.

## ரு. உள்ளாராய்ச்சி

தன்னறிவே பொன்னறிவு; மெய்யறிவு; அதன்முன் நூலறிவு மிகவும் அற்பமானது. உயர்ந்த நூல்களை, அருட்புலவர் வாக்குகளைச் சிலகாலம் ஆராய்; அதன்பிறகு படிப்பற்றுக் கேள்வியற்று உன்னையே உள்ளே ஆராய். பிறகு நீயே உனக்கு வானினும் விரிந்த வேதநூலாவாய். அரிசி வேண்டியோன் உமியை நீக்குவதுபோல, உண்மைவேண்டி

யோன் தன்னையே பற்றுக; புறவிவகாரங்களை உமிபோல் ஒதுக்குக. தன்னுள் உள்ள கடவுட்செல்வத்தை அடையாதவன், தன்வீட்டுட் புதைந்துள்ள தங்கநிதியை எடுத்தாளாது இழிவாகப் பிச்சைவாங்குவோனுக்குச் சமானமாகும். அறிவு, அன்பு, அருட்பணி இம்மூன்றும் கடவுட்பேற்றிற்கு வழியாகும். இம்மூன்றும் இணைபிரியாது வாழ்வில் விளங்க வேண்டும்.

## ௯. நல்லோர் உறவு

கற்றறிந்ததை அமைதியாகச் சிந்தித்துத் தெளிந்துநில்; நல்லறிஞர் உறவு நல்லறிவைத் தூண்டும்; கனியோடு சேர்ந்து காயும் பழுக்கும்; அறிஞரை வணங்கு; அவர்களிடம் அளவளாவு; அவருரை கேட்டு உன் அறிவைப் பெருக்கு; எவரிடம் பழகினாலும் நல்லதைப் பேணிப் பொல்லதை விலக்கு; ஒவ்வொரு நாளும் உனது குறைகளை ஆராய்ந்து விலக்கி நிறைபெறமுயல்; பெரியோர் உதாரணங்களையும், திருமொழிகளையும் நினை; சிற்றினஞ் சேரேல்; சேர்க்கைபோல வாழ்க்கை; மாசற்ற பூரணனை நம்பு; அவனடிபணி; அவனை குருவாகக்கொள்; அவன் மொழிகளை உள்ளே ஆராய்; பெரியோர் ஒளிகாட்டுவர்; நீ வழிநடந்து இன்பத்துறை சேரவேண்டும். குருட்டு நம்பிக்கையும், காலத்தால் உளுத்துதிர்ந்த பழக்கவழக்கங்களும், மூடப் பிடிவாதங்களும் பற்றி உன்வாழ்வைப் பாசிபிடிக்கச் செய்யாதே; வாழ்வாறு புதுப்புது ஊற்றுநீர் பெருகி சுயேச்சையாக ஓடச்செய்; ஒவ்வொன்றையும் நன்றாக அறிவால் ஆராய்ந்து, பெரியோரைக் கேட்டறிந்து, சோதித்து, நல்லதாயின் உனதாக்கிக்கொள்; எப்போதும் மனம் விழித்திரு; கவனமாயிரு; எந்த நலனையும் நிறைபெறச் செய்; எத்தீமையையும்

அறவே யொழி; உன்மனச்சாட்சியைத் தொட்டுப்பார்; அது எப்போதும் உண்மையே பேசும்; வாய் பொய்பேசினு லும், மனச்சாட்சி 'அடபயலே! என் பொய் பேசுகிருய்?' என்று சவுக்கடிகொடுக்கும்."

## ஏ. உலக வாழ்வு

உலகை அஞ்சாதே; சத்யதர்ம வீரனுக உலகை வெல். சிறுமதியாளரும், பொருமைக்காரர்களும் தூற்றுவர்; துடுக்குப்பேசுவர்; கோளேற்றுவர்; அப்போதுதான் நீ இன் னும் உறுதியாக உனது மனச்சாட்சியைப்பற்றி அமைதி யாக, உண்மையாக நடக்க வேண்டும். உலகின் தூற்றலுக் கும் போற்றலுக்கும் செவி கொடாதே; உன் மனச்சாட் சிக்குச் செவிகொடு; அதன்வழி துணிந்து செல். உலகில் நாம் காணுவதெல்லாம் மாறி மங்கி மறையும்; உலகே ஒரு நாள் ஊழி வெள்ளத்தில் ஒழியும்; இவ்வுடல் ஒருநாள் விழுந்தே தீரும்; இவ்வுடல் கொண்டு உலவியது எது? அது ஆன்மா; அது உண்மைப் பொருள்; அதுவே உண்மை நீ; அதையே பற்றி நில்; அதில் அன்பு வை; அதுவாக அனைத்தையும் பார்; அதுதான் அனைத்துமானது; அதனையே அனைத்திலும் விரும்பு; அதுவே இன்ப நிறைவு. இவ்வின்ப நிறைவை எல்லோரும் பெறலாம். இதைப் பெறவே மஹான்கள் முயன்றனர். உலக மஹான்கள் எவ் வாறு இவ்வின்பம் பெற்று இன்பவழி காட்டினர்களென் ருராய்ந்து அன்னுர் வாழ்வுரை மணிகளை இந்நூலிற் கோத்து, இதோ! உலகமே தானுக நம்முன் விளங்கும் அருளாண்ட வனுக்கு மாலையாகச் சூட்டுவோம்.

சுத்தானந்த பாரதி.

ஓம் சுத்தசக்தி

# பெரியார் வரலாறு

## 1. கௌதம புத்தர்

சுத்தோதனன் மனங்குளிர்ந்தது; சித்தார்த்தன் மலர் விழியும், யசோதரையின் கயல் விழிகளும் பொருந்தின:—"பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ!" — "என் செல்வனே! இவ்வாறாயினும் உன்மனம் உலகின்பால் திரும்பிற்றே. என்குல மணிவிளக்கே, வாழ்வின் இளவேனிற் காலத்தில் இலையுதிர் காலம்போல உன்மனம் துறவை நாடியது. என தருமைத் துணைவி அழகும், திருவும், அன்பும், கற்பும் நிறைந்த மாயாதேவி இந்த ஒளிமைந்தனைப் பெற்றேனென்னும் பெரு மகிழ்வுடன் ஏழாநாளே துசிதமடைந்தாள். திருமிகு வரதனே! என் மரபை நீ பெருமைப்படுத்துவாய் என்னும் மகிழ்வில் அத்துயரை மறந்தேன். நீ உலகையெல்லாம் ஒளிபெறப் புரப்பாய் என்று கணிகளும் மொழிந்தனர். ஆயினும் பிஞ்சிலேயே நீ உலகம் துன்பம், கனவு, என்று புழுவிற்கும், கிழவர்க்கும், சிற்றுயிர்களுக்கும் உளங்கரைந்திரங்கி வைராக்கியம் பேசியது என் மனத்தில் பகீரென்றது. ஐயனே! இன்றாயினும் உன் கண்கள் என் கண்குளிரக் காதலைக் கண்டனவே" என்று சுத்தோதனன் தனது ஏறுரிளஞ் செல்வனைப் போற்றித்தழுவினன். "தந்தையே! நாங்கள் முற்

பவத்திற் சேர்ந்து வாழ்ந்தோம்; இன்று இயலுணர்வால் கண்கருத்தொன்றினோம்" என்றான் சாக்கியர் குலக் கொழுந்து. சுத்தோதனன் சுப்ரபுத்தனிடம் (யசோதரையின் தந்தை) தூதனுப்பிப் பெண் கேட்டான். சுப்ரபுத்தன் தன் மகளை ஒப்பற்ற வீரனுக்கே தரவிரும்பி, "அர்ஜுனன், நந்தன், தேவதத்தன் முதலிய வீரர் அவள் கரத்தைக் கோருகின்றனர். சித்தார்த்தன் வழவழ வேதாந்தி. உலகைத் துன்பக்கனவென நினைப்போன். இவனிடம் என்ன வீரம் இருக்கும்" என்று இழுத்தாற்போலச் சொன்னான். ஆயினும் ஒருவீரப் போட்டிவைத்து அதில் வென்றவனுக்கே தன்மகளைத் தருவதாக வாக்களித்தான். "தந்தையே! எனது நரம்பில் ஓடும் நினது வீரக்குருதியின் செழுமையை அச்சுப்ரபுத்தன் அறிக; இதோ போட்டிக்குத் தயார்" என்று பதினெண் வயது வாலிபன் தீரக்கனல் பறக்க உரைத்தான். அவ்வாறே பந்தயமேடை தயாரிக்கப்பட்டது. வில், வாள், தேர், கரி, பரி அனைத்திலும் சித்தார்த்தன் தனது எதிரிகளை சுப்ரபுத்தன் வியக்கும்படி வென்று யசோதரையின் பூங்கரத்தை யடைந்தான்.

* * *

இயலழகும் செயலழகும் குலுங்கும் விஸ்ராமவனத்தின் இன்பத்தை ரோகிணியாறு இசைத்துத் தவழ்கின்றது; மரகதப் பசுஞ்சோலையில் பொன்னும் செம்பும்போன்ற கனிகளையுண்டு புட்கள் பாடுகின்றன; எங்கும் கமகமக்கும் நாண்மலர்களில் தேனுண்ட வண்டுகள் முரல்கின்றன. தாமரைத் தடத்தில் அன்னங்கள் உலாவுகின்றன. மயில்கள் தோகை விரித்தாடுகின்றன. மான்களும் கன்றுகளுந் துள்ளிக் குதிக்கின்றன. பசும் புல்லையுண்டு பசுக்கள் மடுசொரிகின்றன.

தவ்விளஞ் செல்வியர் யாழுங்குரலும் தென்றலுக்கு இசை விருந்தூட்டுகின்றன. உலகின் துயரே நுழையாது காதலும், இளமையும், அழகும், பாட்டும், பரதமும், யாழும்; குழலும், விருந்தும், விநோதமும், அமுதுகுக்கத் தந்தையமைத்த இந்த சித்திரச் செல்வ மாளிகையில் சுத்தோதனன் மாயாதேவியுடன் இல்லறம் வகித்தான். ஆனால் இந்த உலகின்பச்சிறை அவன் மனத்தைக்கட்ட முடிந்திலது. இல்லறக்கனியாக இராகுலன் பிறந்தான்; "கட்டின்மேற் கட்டு வந்ததே" என்றான் மனத்துறவி. துயிற்சுவை, தோட்சுவை, அயிற்சுவை, செயற்சுவைகள் எத்தனை மயற்சுவை மினுக்கினும், இவற்றையெல்லாம் ஆடிப்பாடி யமரும் ஒரு நாடகக்கனவென நினைத்தான்; உலகமாயையின் வலையிற் சிக்கவைக்கத் தந்தை ஜோடித்த இன்பத்தோற்றங்களுடும் உலகின் துன்ப இருள் சித்தார்த்தனுக்கு இயல்பாகவே தோன்றியது. வாடிய மலரைக்கண்டு வாழ்வுமலரும் இப்படித்தானே தோன்றி, வாடி வீழ்ந்து மண்ணாகுமென வாடுவான்; வீடிய தழையைக்கண்டு விழியுகுப்பான்; சேடியர், மனை, மக்கள், திரு, செல்வமென மினுக்கும் இன்பமெல்லாம் நாடகமாடி நமன் வாய்ப்படுமென வுணர்ந்தான். "விழி, எழு, துற, அறி, ஒளிர்" என்று காற்று தன்காதில் ஓதுவதுபோலுணர்ந்தான். இந்த இன்பவனத்திற்கு வெளியே 'உலகம் எப்படியிருக்கிறதெனக் காணவிரும்பித் தந்தைக்கறிவித்தான். தந்தையும் அவ்வாறே இசைந்தான்.

* * *

கபிலவஸ்து இந்திரலோகம்போல விளங்குகிறது; எங்கும் அழகு, இளமை, பசுமை, செல்வத் திரு, இன்பம். பிணி, இடும்பை, மூப்பு, பிறவித்துயரம் அணுவும் அவ்வழி

யனுக்கக்கூடாது;—அரசன் ஆணை. எங்கும் மணமும், பசப்பும் வனப்பும்,அணியுந் தோரமும் ஆரமும், உலகம் இன்பம் என்று திசையதிரும் ஆரவாரங்களும், கணிகையர் பாட்டும் ஆட்டமும் ;—இவற்றிடையே சித்தார்த்தன் பொன்னணி நெடுந்தேரில் பவனி வருகிறான். சுற்றிலும் அழகிளம் புன்னகை தன்னை வரவேற்கின்றது. இங்கு காண்பது, கேட்பது எல்லாம் இன்பம் என்றே கருதினான் அரசிளங்குமரன்.

திடீரென கூனிக்குறுகி நரைத்துத்திரைத்துக் கோல் பிடித்து சாவை வணங்கி நிற்கும் ஒரு கிழவன் முன்னே தோன்றினான். சேவகர் அவனை அப்புறம் தள்ளினர். சித்தார்த்தன் தடுத்தான்; தேரைவிட்டிறங்கினான். கிழவனைக் கண்டு பேசினான்; இளமையும், செழுமையும் இவ்வாறே முதுமையடைந்து சாவிற்கிரையாகுமென்றறிந்தான்; கிழவனுக்கு இன்னுரை கூறி, வேண்டியதீந்து மீண்டும் தனது போலியின்பச் சிறைக்குத் திரும்பினான். மற்றொருநாள் வணிகன் போல மாறுவேடம் பூண்டு தனது தேர்ப்பாகன் சின்னனுடன் ஊர்முழுதும் சுற்றி உலகியல்பை மனத்தில் படம்பிடித்தான். வறுமையுந் துயரும், வன்பிணி மூப்பும், சண்டையும் சழக்கும், குடியுங் கூத்தியும், சூதுங் கொலையும், பொய்யுந் திருட்டும், காமமும் சினமும், கலக்கமும் சாவும் உலகை வருத்துவதை நேரே கண்டான். நாலால் தவழ்ந்து, இரண்டால் நடந்து, மூன்றால் தள்ளாடி, ஏணியேறி எமலோகம் போகும் இவ்வுயிரை வெறுத்தான். உலகின் துன்பத்திற்கு ஒரு மருந்துதேடிப் பரபரந்தான்.

* * *

நள்ளிரவு; யசோதரை இராகுலனுடன் பக்கத்தில் உறங்குகிறாள். இடையிடையே ஏதோ கனவுகளால் அச்-

சுற்று நாதனைத் தழுவுகிறாள். சித்தார்த்தன் அவளுக்கு அமைதி கூறித் தானும் சற்று கண்ணயர்ந்தான். கனவில் ஒரு கிழவன் தோன்றி "இது வேளை, இது வேளை! சித்தார்த்தா! அரசாட்சி வேண்டுமா? அருளாட்சி வேண்டுமா? பின்ன தாயின் முன்னே துற; வழிதிறக்கப்பட்டுள்ளது; விழி, எழு, அறி, ஆசை விலங்கை அறு!" என வாழ்வின் துயரை யுறுத்திச் சென்றான். எழுந்தான் சித்தார்த்தன்; வீரத் துணிவணைந்தான். அச்சமொழிந்தான்; ஆழ்ந்துறங்கும் தனது அருமைக் காதலியிடம் மௌனவிடை பெற்றான்; மகனை இறுதியாக ஒரு முத்தமிட்டான்; "உறங்கும் விழிகாள்! உறங்குமின்; யான் மோகவிலங்கை யுதறி உயிர்களுக்கு ஒரு இன்பந் தேடிச்செல்லுகிறேன்!" என்று அடியெடுத்து முன்னே சென்றான்; சின்னனை மெல்ல எவினான்; கண்டகன் மீதேறி வெகு விரைவாக இராஜக்கிரகக் காட்டையடைந்தான். தனது அரசணிகளை அழுக்கென நீத்தான்; குடுமியை வாளால் அறுத்து வீசினான். வீர சுதந்திரத்துடன் காட்டிற் புகுந்தான்.

* * *

நமது வீரத்துறவி நகரில் பிச்சை புகுந்துண்டு அருகிலுள்ள காட்டுக்குகையில் ஹடராஜயோகிகளுக்கிடையே வசித்தான். ஒருநாள் இராஜக்கிரக நகருக்குப் போம் வழியில் சில ஆடுகளைக் கண்டான்; அவற்றில் ஒன்று நொண்டிக் குட்டி. அதைப் பரிவுடன் குழந்தைபோலத் தோள்மேலேற்றிக்கொண்டு, யாகத்திற்காக அவை செல்வதறிந்து பின் தொடர்ந்தான்.

பிம்பிசாரன் எஜமான்; அந்தணர் ஆட்டுயாகம் புரிகின்றனர்; கத்தியெடுத்து ஆட்டை வெட்டப்போகுந் தருணம்;

"நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்று சித்தார்த்தன் முன் வந்து தடுத்து உயிரிரக்கத்தை வலியுறுத்தினுன்; "உயிரை யெடுப்பவர் உயிரைக் கொடுக்கமுடியுமா? பாலும் போர்வை யும் தரும் இந்த இன்னுயிரை என் கொலைபுரிவீர்? வேதம் என்ருல் அறிவு; தன்னை யறிவதே யறிவு; ஆசையாணவங் களை அறிவுத் தீயில் வாட்டி யொழிப்பதே யாகம்" என்று அறிவுறுத்தவே மன்னன் மனம் விழித்தான். யாகக்கொலை நின்றது; ஊனுணவும் ஒழிந்தது. பிம்பிசாரன் இவ்விளந் துறவியைப் போற்றிப்பணிந்து தன் மகளை மணந்து தனது அரசின் அறவிளக்காக விளங்கும்படி வேண்டினுன். "அரசுஞ் சீரும் அரிவையரின்பமும் கண்டு தோய்ந்திளைத்தேன்; ஆரு யிர்கள் படுந்துன்பத்திற்கு ஒரு மருந்து தேடியே கானகம் வந்தேன்." என்று விடைபெற்று சித்தார்த்தன் உருவலங் காடு சேர்ந்தான். அங்கே ஐந்து அருமறைப் புலவரிடம் வேதவுண்மைகளைக் கேட்டான். அவையும் அமைதிதந்தில. அதன்பின் கயாவிற்குச் சென்று உதிர்கனிகளை யருந்திச் சுடச்சுட நோற்ருன். ஒருநாள் கௌதமன் உடல்வற்றிச் சோர்ந்து வெய்யிலில் விழுந்து கிடந்தபோது ஒருஆட்டிடை யன் வாயில் பால் வார்த்தபின் தெளிந்தெழுந்தான்.

ஒரு மரத்தடியில் சித்தார்த்தன் தவச்சுடர்போல விளங்குகிருன். சுஜாதை யெனும் பெண்மணி பாலடிசில் கொண்டு தனக்கு மகப்பேறீந்த வனதேவதையை வழிபட வருகிருள்; இதோ இதுவே நான் வேண்டியதெய்வம் என்று சித்தார்த்தனுக்குப் பாலடிசிலூட்டிப் பணிகிருள். தவ ராஜன் அந்நல்லாளை வாழ்த்தி, "அம்மையே! யான் காட்டுத் தெய்வமல்லேன்; அரசுஞ் செல்வமும், மனையுந்துறந்து ஆரு யிர்களுக் கொருமருந்துதேடி யிங்குவந்தேன். அம்மையே!

உனக்கு மனைவாழ்வு இன்பந்தருகிறதா ?" என வினவினன். "பெரியோய்! இன்பமாகவே யிருக்கிறேன் ; அனைத்திடமும் அன்புபூண்டு, முடிந்தமட்டும் அறவினையாற்றி, பற்றற்று, எனது கடமையைச்செய்து எனது ஆருயிர்க்காதலனுடன் இன்பமாகவே இல்லறம் வகிக்கிறேன்" என்று சுஜாதை விடைபெற்றுக் கொண்டாள்.

"அற்றது பற்றெனின் உற்றது வீடு" என்னும் உண்மை பளிச்சிட்டது. அதையே நினைந்து ஒரு அரசமரத் தடியில் புத்தன் உறுதியாக அமர்ந்து சிந்தித்தான்.

சித்திரைப் பூரணை. முழுநிலா பால்வெள்ளமாகப்பொழிகிறது. சித்தார்த்தன் தன்னுள் ஆழ்ந்துள்ளான். திடீரென மாரன் தனது ஆசாபாசப் படைகளுடன் தோன்றித் தவவுறுதியை வேண்டுமட்டும் சோதித்து வீணாகி மறைந்தான். நிசியின் பெரிய மோனத்திடையே அறிவு மலர்ந்தது; முற்பவக்காட்சிகளும், உலகங்களின் காட்சிகளும், தோன்றின. கௌதமன் மண்வாழுயிர்களுக்கு மருந்தைக் கண்டான் ; புத்தனானன் ; அறிவுச்சுடர்மலைபோ லெழுந்துநின்றான் ; பற்றறுத்து இன்புறும் தனது அறிவு நெறியை அனைவர்க்கும் ஓதினன். புத்தசங்கம் தழைத்தது. தனது மனைவியும் மகனும் அடியாராயினர். தனது துறவைச் சினந்த தந்தைக்கும் அமைதி கூறி அறிவுறுத்தினன் புத்தன். அருளாழியந்தணன் மகதநாடெங்கும் தனது அறவழியைப்பரப்பி, அறிவமுதருத்தி எண்பது ஆண்டுகள் அருட்பணிபுரிந்து குசிநகரத்தில் பரிநிர்வாண மடைந்தான்.

புத்ததர்மம் இன்று வேதாந்தமதத்துடன் இணையறுது கலந்துள்ளது. அசோக மன்னன் புத்த மதத்தை விரிவாகப் பரப்பினன். இன்று இந்திய புத்தர் மிகச் சிலரே

னும், சீனம், ஜப்பான், பர்மா, எகிப்து, யவனம், உருசியா முதலிய நாடுகளில் புத்த தருமம் போற்றப்படுகிறது. "ஓம் நமோ தஸ்ஸபகவதோ அரஹதோ ஸம்மாஸம் புத்த : ஸ : புத்தாம் சரணம் கச்சாமி. தர்மம் சரணம் கச்சாமி. சங்கம் சரணம் கச்சாமி" என்பது புத்த மதத்தினர் வழிபாட்டு மந்திரம். புத்தர் மௌன சுபாவமுள்ளவர். முதல் முதல் ஆயிரக்கணக்கான அன்பர் ஆவலாக அமுத மொழிகளை எதிர்பார்த்த கூட்டத்தில் அவர் நெடுநேரம் பேசாதிருந்தார். சபையோர் பேசும்படி வேண்டினர். ஒரு கனியைக் காட்டினார். மக்கள் அறிந்திலர்; முடிவில் "இதுவே நான் பேசவேண்டியது; வாழ்வு அன்பலர்ந்து அருட்பணி கனிக" என்றார். புத்தர் சீடரில் முதன்மை பெற்றவர் ஆனந்தர். அவரே புத்தோபதேசங்களைத் தொகுத்து வைத்தார். பொது மக்கள் அக்கால மறிந்த பாலி மொழியிலே புத்தர் பேசினார். சீலம் (சீர்மை, தூயசெயல்), சமாதி (தியானம், ஆருயிரிரக்கம், நிர்வாண சிந்தனை), ப்ரஜ்ஞானம் (ஆத்மஜ்ஞானம்) இதுவே பூரணத்வம் அடைய புத்தர் காட்டிய மூவ்வழி(திரிபிடகம்). தோற்றப் பொருள்கள் அநித்யம், துக்கம், அனாத்மம் என்பது புத்த மத தத்துவத்தின் அடிப்படை. நற்காட்சி, இன்மொழி; நல்லொழுக்கம், நன்னினைவு, நற்செயல், தியானம், ஆன்ம வெற்றி, ஈகை, தன்னை மறவாமை இவை முதன்மையான புத்தோபதேசங்கள். "தானம், சீலம், சாந்தி, வீர்யம், ஆராய்ச்சி இவற்றால் உறுதியின்பம் எய்தும்; உறுதியால் வைராக்கியம் எய்தும்; சிரத்தையால் வெற்றியெய்தும்; ஞானத்தால் தூய்மை ஒளிரும். வன்மையை மென்மையால், தீதை நலத்தால், கடுமையைக் கனிவால், கருமீயை ஈகையால், பொய்யை மெய்யால் வென்று திருத்துக.

அவன் என்னை அடித்தான், வைதான், திருடினான், இழித்தான் என்று எண்ணுவோர் சாந்தராகார். சினப்பவனுக்கு என் மொழி பலிப்பதில்லை. அன்பு, பொறுமை, அடக்கம், அமைதியுறுக" என்று தம்மபதம் உபதேசிக்கிறது. திருட்டு, பொய், குடி, ஆகாவுணவு, புலனைக்கவரும் பாட்டு, கூத்து, காட்சி, பூண், மணம், பணம் இவை புத்தத் துறவிகளுக்கு விலக்கு என்று திகநிகாயம் சொல்லும். "ஆனது அழியும்; அழியா ஆன்மாவை யடைய ஆர்வங்கொள்மின்": என்பது புத்தரின் இறுதி மொழி.

## 2. கோன்புத்ஸன் (Koung-fou-tseu)

(கி. மு. 551-479)

சீன நாடு பழமையில் நம் நாட்டை யொத்தது. அது பதினாயிரம் ஆண்டுகளாக நீண்ட மதில் கட்டி வளரும் தன் சொந்த நாகரிகத்திலேயே நிலைத்துப் புற நாடுகளை எதிர்பாராது கலைகளையும், நடையுடைகளையும், அறக் கோட்பாடுகளையும், அரசாட்சியையும் தனக்கேற்றவாறு தானே அமைத்துக் கொண்டுள்ளது. சீனர் அறிவிலும், முயற்சியிலும், அறநெறியிலும், தொழிலிலும், கலையிலும் சிறந்தவர்கள். தொன்றுதொட்டே சீனர் பட்டு, காகிதம், வெடி மருந்து, அச்சுப்பொறி, திசைக் கருவிகள், கண்ணாடி முதலிய பல கைத்தொழில்களில் முதன்மை பெற்றிருந்தனர். சித்திர வேலைகளில் சீனர் பேர்போனவர்கள். உலகத்திலேயே மிகப்

பெரிய பேரகராதி (Encyclopædia) சீனாவில்தான் முதன் முதல் எழுதப்பட்டது. பழைய சீனர் இயற்கையையும் தங்கள் முன்னோர்களின் உருவங்களையும் வணங்கினர். இன்றும் சீனத்தரசன் அரண்மனையில் காலஞ்சென்ற துறவிகளுக்கும், அரசர்களுக்கும், அறிஞர்களுக்கும் மலைகளுக்கும், நதிகளுக்கும், வயல்களுக்கும், எல்லாவற்றிலும் உயர்ந்ததும் பழைமையுமான வானத்திற்கும்,வழிபாடுகள் செய்யப்படுகின்றன. சீனர் நாகரிகத்தைச் சிறப்புறச் செய்தது சமயவுணர்வே. சீனாவில் மூன்று சமயங்கள் உலவுகின்றன. அவற்றுள் கொன்புத்ஸன் சமயமே (கண்பூசி மதம்) முதன்மையானது. இதற்கும் பழமையான ஆனால் சிறு பான்மையோரே வழிபடும் சுத்த அத்வைதமாகிய லவோத்ஸன் மதம் (தவோ மதம்) இரண்டாவது ; மூன்றாவது புத்த மதம். சீனர் புத்தரை 'போ' என்று அழைப்பார்கள். இம் மூன்று மதங்களுக்குள் சீனத்தின் ராஜ மதமாகிய கொன்புத்ஸன் மதத்தையும் வரலாற்றையும் ஆராய்வோம்.

சீனத்தில் ஒரு புதிய விழிப்பை யுண்டுபண்ணிய கொன்புத்ஸன் புத்தருக்குப் பிறகு, கிறிஸ்துவுக்கு 551 ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறந்த மன்னர் மரபிற் பிறந்தான். லூ என்னும் சீன மாகாணத்தில் வேலை பார்த்த தனது தந்தையை கொன்புத்ஸன் மூன்றாவது வயதில் இழந்தான். ஒரு தகப்பனின் கவலையும் சேர்த்து தாய் அவன்பால் செலுத்தினாள். கொன்புத்ஸனுடைய அன்னை கற்றறிந்த நல்லாள். ஒரு தர்ம வீரனுக்கேற்ற சீரியதாய். வீரர் சரிதைகளைச் சொல்லி உணவோடு வீரவுணர்வையும் குழந்தைக்கு ஊட்டினாள். நமது கொன்புத்ஸனும், தாயாரிடம் நாட்டின் முன் வரலாறுகளையும், தற்கால நிலைமையையும் பற்றி அடிக்கடி வினவுவான்.

பெரியோர் சென்ற அற நெறிகளை ஊக்கமாகக் கேட்டறிந்து சிந்தித்தொழுகுவான்.

கல்விப்பசி மிகுந்துகொன்புத்ஸன் சீனநாட்டின் பழைய அற நூல்களை யெல்லாம் கற்றறிந்தான். பூஹி என்னும் பண்டைய அறிஞரின் சிறந்த அற நூல்களை மனப்பாடம் செய்தான். இந்தப் பூஹி என்பவரே சீனரின் மனுவாக விளங்குகிறார். ஒரு பெரிய ஊழி வெள்ளத்தினின்று இவர் எழு தோழருடன் தப்பி எழுந்ததாகவும், பிறகு மணம் புரிந்து மூன்று ஆண் மக்களையும் மூன்று பெண் மக்களையும் பெற்று அவர்களுடைய கலப்பினுலேயே உலகம் முழுதும் புத்துயிர் பெற்றெழுந்ததாகவும் சீனர் கூறுவர். இந்தப் பூஹியினிடம் கொன்புத்ஸனுக்கு வணக்கம் மிகுதி. கொன்புத்ஸன் பதினைந்து வயதிற்குள் பற்பல அறிவு நூல்களை ஆர்வமுடன் கற்றுப் பேரறிஞனுன்; கற்றவழி நின்று தன் வாழ்வை ஒவ்வொரு நாளும் உயர்த்தினுன். அவன் தாயினிடம் அளவற்ற அன்பு பூண்டான். அன்பு, பொறுமை, விடாமுயற்சி, துணிவு, பெருந்தன்மை முதலிய தூய தன்மைகள் பொன்னும் மணியும், மலரும் மணமும் போல் அவன் வாழ்வோடு பொருந்தின. வாழ்வு நிலத்தைப் பண்படுத்தி அறப்பயிர் விளைத்தான்; தனது வாழ்வு ஒரு அரியபெரிய பொதுநல வினைக்காகவே வந்ததென் றறிந்து அதற்காகத் தன்னைத் தயாராக்கிக்கொண்டான். நமது வீரனுக்குப் பத்தொன்பது வயதிலேயே திருமணம் நடந்தது. குடும்பச்சுமை தன் புயங்களை அழுத்தியது. அதைத் தாங்கப் போதுமான பொருளை ஈட்டுவதற்குப் பல முயற்சிகளில் ஈடுபட்டான். முன்னே முழுமையாயிருந்த அவனது சிந்தனை குடும்பக் கவலையாற் சில்லறையானது. இருப்பினும் கொன்புத்ஸன் மனது அடிக்

கடிதனது. நாட்டின் நிலையை எண்ணியது. அக்காலத்தில் சீனசமூகம் அறங் குன்றி அழிந்துகொண்டிருந்தது; பல சில்லறை அரசுகளாக வகுக்கப்பட்டிருந்தது. சிற்றரசர் கட்சி கட்டி ஒருவருக்கொருவர் போர்புரிவதிற் காலங் கழித்தனரே யன்றி நாட்டின் நலங் கருதிலர். போர்முரசுடன் பகையுங் கொலையும், கொள்ளையும் கூக்குரலிட்டுக் குதித்தன. நல்லோர் மனம் பதைபதைத்தது. செல்வர் மாளிகைகள் அழிநடன சாலைகளாயின. ஏழைகளின் விழிநீர் ஆறாய்ப் பெருகிற்று. முன்னோர் சென்ற நன்னெறிகளின்மீது மறதி யிருள் மூடியது. சீரும், செல்வமும், பழமையும், கலையும் விளங்கிய நாட்டில் போரும் வறுமையும் பொய்யும் நிறைந்தன. இத்தகைய தலைவிரி கோலத்துடன் தன்னெதிரே நிற்கக் கண்ட தாய்நாட்டை நோக்கி வீரன் மனமுடைந்து அழுது புலம்பினான். நாட்டைக் காக்கும் வழியைப் பழைய நூல்களில் இடைவிடாது தேடினான்.

கொன்புத்ஸன் இருபத்துமூன்றாவது வயதில், பல மன்னர் சபைகளுக்குச் சென்று மன்னறம், நாட்டறம், மக்களறம் முதலியவற்றை வேண்டுமட்டும் எடுத்துறுத்தினான். நல்லொழுக்கமே அரசாட்சியின் அடிப்படை என்று வற்புறுத்தினான். இது சிலருக்குப் பிடிக்காது, நல்லது சொல்லும் அறிஞனுடன் வாது புரிந்தனர். யூ என்னும் அரசன் காலத்தில் சீன நாடு செல்வச் செழிப்புடன் விளங்க அடிப்படையாயிருந்த அறங்களைக் கொன்புத்ஸன் அரசர்களுக்கு எடுத்துரைத்தான்; ஒன்றும் பலிக்கவில்லை. அரசாங்கத்திற்கு அரசாங்கம் பலவகையான பதவிகள் வகித்து அமர்ந்திருந்தான். அங்கே பணக்காரரின் விருந்துகளும், களியாட்டங்களும், வேலைக்காரரின் கோளும், பொறாமையும், பெரும்

யும், புகைச்சலுங் கண்டு திடுக்கிட்டான். எங்கே அமர்ந் தாலும் கொன்புத்ஸனின் நன்னெறி கூட இருந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. பகைவர் கட்சிகட்டிக்கொண்டு சதியாலோ சனை செய்து அவ்விடத்தை விட்டு அவனைக் கிளப்பி வந்தார் கள். இவர்களால் இப்பெரியோன் பட்டபாடு கொஞ்சநஞ்ச மில்லை. கொன்புத்ஸனுடைய புண்பட்ட மனம் ஒரு பெரும் ஆறுதலைத் தேடித்திரிந்தது.

## லவோத்ஸன்

அக்காலத்தில் லவோத்ஸன் அறிவொளியாக விளங்கினர். இவர் கிறிஸ்து பிறப்பதற்கு 604 ஆண்டுகளுக்கு முன் பிறந் தவர். கொன்புத்ஸனைவிட 53 ஆண்டு முதியவர். சீனர் லீ என்று சொல்லும் திராட்சை மரத்தடியில் பிறந்ததனல் இவ ருக்கு லவோ என்று பெயராயிற்று. பிறக்கும்போதே இவர் மண்டை முற்றும் நரைத்திருந்ததாம். ஆதலின் இவரைக் 'கிழட்டுப்பையன்' என்று அனைவரும் அழைப்பர். லவோத் ஸன் ஸோ என்னும் அரசாங்கத்தில் கணக்குக் கட்டுகளை மேல் பார்த்துக்கொண்டிருந்தான். அத்துடன் அரண்மனை யில் காவலனகவும் இருந்தான். ஆனல் லவோத்ஸனுடைய மனம், தவோ என்னும் தத்துவப் பொருளின் தியானத்தி லேயே ஆழ்ந்திருந்தது. உலகப் பற்றை நீத்தான். மௌனங் காத்தான். சங்கம் வெறுத்தான். சிந்தை தெளிந்தான். தன்னை அறிந்தான். பேரின்ப மடைந்தான். இந் நிலையி லிருக்கும் லவோத்ஸனின் புகழ் மெல்லப் பரவிற்று. இதைக் கேள்வியுற்ற நமது கொன்புத்ஸன் இப்பெரியோனைக்கண்டு ஆறுதலெய்தவென்று வந்து, வணக்கமுடன் தன் சந் தேகங்களைத் தெரிவித்துத் தன் நாட்டினர் முன்னேற்றம்

வழியைக் கேட்டான். முற்றிலும் மௌனத்தையே விரும்பும் லவோ, "தம்பி! பேசுகிறவர்கள், இறப்பவர்கள். அறிவுசான்ஞேர் அடக்கமா யிருப்பர். நீ ஏன் பிறருக்கு வலுவில், பெருமையுடன் உபதேசிக்கிருய்? உன் இளமையின் துடிப்பையும் ஆசையையும் அடக்கு. மனிதன் வெளியே சீர்திருந்திஞல் போதாது. உள்ளுணர்வு வேண்டும். உள்ளே மாசு நீங்க வேண்டும். உள்ளே ஆராய்ந்து உன்னையே நீ அறி. உலகை இயற்கையின் வழியில் விட்டு விடு. மனித விதிகளால் மக்களை நெருக்கியாள முயலுவது கொடுமை. உள்ளறிவு பெருகப் பெருகவே குற்றங்கள் குறையும். செல்வர் புன்சிரிப்பைத் தேடி யலையாதே. உள்ளே இலகும் தவோவை அறிய தியானம் செய். உன்னை நீ வெல்லு. மௌனத்திஞல்தான் ஞானவளர்ச்சி ஏற்படும். அடக்கம், எளிமை, அமைதி, ஆன்ம வாராய்ச்சியால் உண்மையை யறிந்து உட்களிப்பெய்து" என்று லவோத்ஸன் எடுத்துரைக்கவே தனது கொள்கைகளுக்கும், இவ்வுரைகளுக்கும் ஒட்டாதெனக் கொன்புத்ஸன் விடைபெற்றுக்கொண்டான். லவோத்ஸனும், உலகின் அறியாமையையும் முதன்மையாக ஸோ அரசாங்கத்தின் குறைகளையும் கண்டு பொறுக்காது, 'அமைதியை நாடித் தனியிடந்தேடித் தவஞ்செய்யத் தீர்மானித்து வெளியேறிஞன். அப்போது தனக்கினிய ஒரு நண்பன் வழிமறைத்து, "ஐயனே, தாங்கள் மோனத்தனிமையில் ஆழ்ந்து விடின், தமதுள்ளிலகும் அறிவுச்சுடர் உலகிற்குப் பயனுகாது போம்: அது மனிதருக்குப் பெரிய நட்டமாகும். ஆதலின், தமது அறிவுத்திரளை ஒரு அரிய நூலாக எழுதித்தாருங்கள். பிறகு வேண்டுமென்ருல் தனித்தவம் நாடலாம்" என்று வணங்கி வேண்டிஞன்.

லவோத்ஸன், தனது அறிவுண்மையை விரித்து 5000 சீன எழுத்துக்களில் தவோ தே கிங் என்ற இரு புத்தகங்கள் எழுதிக்கொடுத்து எங்கே சென்றானென்று எவரும் சொல்ல முடியாது. பிறகு அவன் வாழ்க்கையின் மேல் ஒரு மறைதிரை விழுந்துவிட்டது. தனியே எண்ணி, தனியே வாழ்ந்து, தானே தானானான் லவோத்ஸன். அவன் சீடனான சாங்த்ஸன் சீடரைச் சேர்த்துத் தன் குருவின் மாண்பையும், மொழியையும் சீனமெங்கும் போற்றச் செய்தான்.

நமது கொன்புத்ஸன் லவோத்ஸனை மதித்து வணங்கினான். எனினும், தன் கொள்கைகள் அவனது தனிமைக் கொள்கைகளினின்று முற்றிலும் மாறுபடக் கண்டான். எண்ணிறந்த மீன்களும், கதிரும், மதியும், கனலும் விண்ணகத்தின்கீழ் விளங்கும் உலகு பொய்யல்ல. மலைகள் மனிதனுடைய மனதை உயர்த்தி நிமிர்ந்து பெருமையுடன் ஓங்குகின்றன. நீண்டு அகன்று பாயும் மஞ்சளாறும், ஹோயாங் ஹோ நதியும் இன்பமாகப் பாடி, பல பயிர்களை யூட்டி முடிவில் ஆழியில் அமைதி சேர்கின்றன. எண்ணிறந்த சோலைகளும், காடுகளும், வனங்களும், மரங்களும், கண்குளிரப் பசுங்கோட்டைபோல் இங்குமங்கும் செழித்தோங்குகின்றன. பல பல வுயிரினங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உண்மையை விளக்கி, உலகில் உலவுகின்றன. அழகு மணியினரும், ஆண்மைவீரரும், பிஞ்சிளங் குழந்தைகளும் அருமையான் படைப்பன்றோ! இவ்வியனுலகையும், மாந்தரையும், விடுத்து எப்படித் தன்னந்தனியே சென்று எவ்வாறு இன்பமடைவது. அதற்காக மனிதன் பிறக்கவில்லை! உலகை மனிதன் அனுபவிக்கவேண்டும். மேலான அறிவுடைய மனிதன் மனிதருக்கு அருட்பணி புரிவதே நல்வழி யெனத் தீர்

மானித்துக் கொன்புத்ஸன் பொதுநல வூழியத்திற் புகுந்தான். கடுமையான கட்டுப்பாடுகளால் தன் வாழ்வைத் திருத்தி யுயர்த்திக்கொண்டான். "15-வது வயதில் என்மனது கல்வியில் ஈடுபட்டது. 30-வது வயதில் நான் நன்னெறியில் ஊன்றிக்கொண்டேன். நாற்பதாம் ஆண்டில் மயக்கறுந்தேன். 60-ம் ஆண்டில் என் காதுகள் உண்மைப்பொருளை யூன்றியறிந்து போற்றின. 70-ம் ஆண்டில் என் மனம் சிறுமையின்பாற் செல்லாது, பெருமையான எண்ணங்களிலும் செய்கைகளிலும் நிலைத்தது" என்று தன்னைப்பற்றித் தானே கொன்புத்ஸன் சொல்லுகிறான். அவன் படிப்படியாகத் தன்னைச் சீர்திருத்திக்கொண்டு தனது சமூகத்தையுஞ் சீர்திருத்தினான். "நல்ல தன்மைகளை வளர்க்கத்தவறுதலும், கற்றதைப் பகுத்தறிந்து வாழாமையும், பெரியோர் வழிகாட்டியும் அதன்படி நடக்க முயலாமையும், பிழைகளை வருந்தித் திருத்திக்கொள்ளாமையும், எனது துயர்களுக்குக் காரணமாயிருந்தன." என்று கொன்புத்ஸன் உரைக்கின்றான்.

தனது அறிவுத்திறனால் கொன்புத்ஸன் சங்து என்ற ஊருக்கு நியாயாதிபதியாகி அவ்வூரை நீதிநெறியில் கருத்தூன்றி யாண்டான்; ஏழைகளுக்குவேண்டிய உதவிகளைச் செய்தான். கல்வி, சுகாதாரம், தொழில் முதலியவற்றிற்காக வேண்டிய் பொருள்கொண்டு பொதுநலம் புரிந்தான். மக்களை அறவழியிற் பயிற்றினான். தான் வாழ்விற்கண்ட அரிய உண்மைகளைப் பலருக்கும் எடுத்தோதினான். 'அவனுடைய தூயவாழ்வும், விரிந்த அறிவும், பரந்த உள்ளமும் மாந்தருள்ளத்தைக்கவர்ந்தன.

கொன்புத்ஸன் தனது 50-வது வயதில் லூ என்ற அரசாங்கத்திற்கு அமைச்சனாகி அதை வெகு திறமையுடன்

நடந்தினன். ஆயினும் தன்னைச் சுற்றியுள்ள ஊழியரும், மன்னர் உறவினரும், செய்யும் அட்டூழியங்களை அவனால் தாங்கமுடியவில்லை. அவர்களுடைய களியாட்டங்களும், இடம்பங்களும், வீண் ஆடம்பரங்களும், பகட்டுகளும், பகல் வெளிச்சமும், நமது பெரியோன் விழிகளில் முட்கள்போலத் தைத்தன. அவை தன் வாழ்வையும் கெடுத்துவிடும்; பட்டம் பதவி இவற்றினும் தூய வாழ்வே மேல் என்று எண்ணிக் கொன்புத்ஸன் மந்திரி வேலையை எள்ளித் தள்ளித் தான்வந்த வினையே கண்ணுயினன்.

கொன்புத்ஸனை இப்போது கடுமையான வறுமை கௌவிக்கொண்டது. உலகின் இடர்களும் ஒருங்கே அவன்மேற் பாய்ந்தன. தன் உயர்ந்த உரைகளை யொருவரும் மதிக்கவில்லை. கவலையால் மனம் உடைந்துபோய் கொன்புத்ஸன் பலவிடங்களைச் சுற்றிச்சென்ருன். எங்கும்சுற்றி உலகின் இன்பதுன்பங்களைக் கண்டு மன மோய்ந்து கொன்புத்ஸன் திரும்பினன். அக்காலத்து மன்னர் அவனை வேதாந்தக்குடுக்கையென எள்ளி நகைத்தனர். தன்னைப்பழிக்கும் மாந்தரிடையே அவன் பஞ்சை போலானன். ஆ கொன்புத்ஸன்! உன் கல்வியும், அறிவும், பெருமையும் எவ்வளவு பெரிது! உன்னை உலகு எவ்வளவு சிறுமையுடன் மதித்தது! அந்தோ உலகே! கொன்புத்ஸனுடைய வாழ்வையும் துயர்ப்படுத்தினையே! இதுவோ வுன்னியல்பு! அறியாவுலகு பெரியோரை மதியாது.

கொன்புத்ஸன் தன்னைச்சுற்றிலும் இகழ்ந்து நிற்கும் கால நிலையால் மனங் குலையவில்லை. தான் தனிமையாகச் சிந்தித்து உண்மையுரைகளை எழுதுவதற்கு அதுவே வாய்ப்பெனக்கொண்டான்; முன்னோர் அற நூல்களை ஒழுங்கு

செய்து சமூகச் சீர்திருத்தத்திற்கு வேண்டியபடி குறைத்தும் கூட்டியும் அரிய நன்னூல்களை எழுதியமைத்தான். அந் நூல்கள் இப்போது சீனாவில் ஒவ்வொருவராலும் ஓதப் படுகின்றன. அவன் கோத்த பழைய நூல்கள் ஐந்து. அவற்றுள் ஈகிங் என்பது முதன்மையான நீதிகளைப்பற்றிச் சொல்வது ; ஷு கிங், யோ என்னும் அரசன் நாள் முதல் கொன்புத்ஸனுடைய நாள்முடிய நிகழ்ந்த நாட்டுவரலாறு. ஷீகிங் என்பது 311 நீதிச் செய்யுள்களும், மற்றும் பெரிய வீரரைப்பற்றிய பாக்களும் அடங்கியது. லீகிங் என்பதில் சீனரின் சடங்குகளும், நடையுடை பாவனைகளும் நாகரிகமும் அடங்கியுள்ளன. சன் சூ என்பது கொன்புத்ஸனின் சொந்த ஆராய்ச்சி. இதில் சீனத்து சரித்திரம் முழுதும் அடங்கியுள்ளது. சன்சின் (வஸந்தமும் கிரீஷ்மமும்) என்ற இனிய நூலையும் கொன்புத்ஸன் எழுதினான். இவ்வரிய நூல்களினால் கொன்புத்ஸன் சீனத்திற்கு அரிய தொண்டு செய்தான். இவற்றினின்றே சீனரின் கொள்கை, வாழ்வு, ஆட்சிமுறை முதலிய அனைத்தும் பிறந்தன. இவற்றைத் தொழாத சீனன் கிடையாது. இவற்றின் மூலமாகச் சீனம் தன் மஹானை அறிந்து கொண்டது.

விண்ணையே பெரிய சக்தியாயும் பெரும் பொருளாயும் கொன்புத்ஸன் தொழுதான். பெரியோர் வழிபாடு, பெற்றோர்க்குப் பணிவு, ஆருயிரன்பு, அறநெறி முதலியவற்றைக் கொன்புத்ஸன் வற்புறுத்தினான். "பூரணம்பெறுக; நல்லன நினைக; நல்வினை புரிக; வாழ்வை நாடோறும் உயர்த்துக; எல்லாரிடமும் வணக்கமுடனும், அன்புடனும் பழகுக; நாணும், அடக்கமும், இன்சொல்லும், தன்னைப்போன்று பிறரை மதித்தலும், தன்னுறுதியும், பொறுமையும், உணவு

உறக்கம் பேச்சு முதலியவற்றில் மிதமும், எளிமையும் இடம்ப மின்மையும், போற்றுக" என்று கோன்புத்ஸன் தன் சீடருக்குச் சொன்னான். சில இளைஞர்வாழ்வில் இவ்வுரைகள் வேரூன்றின. அவன் காலத்திலேயே சுமார் 3000 சீடர்கள் தன்வழிப்பட்டனர். அரிஸ்தோதிலன், பிளாதன், மோசே போன்று பெரிய ஆசானாக விளங்கிப் பலரை நல்வழிப் படுத்தித் தன் வாழ்வாலும், நூலாலும், சொல்லாலும், பல்லாற்றானும், மாந்தர்க்கு வழிகாட்டி 75-வது வயதில் கோன்புத்ஸனுடைய ஆவி மின்னென மறைந்தது. பின்பே அவனுடைய அருமையை மாந்தர் உணர்ந்தனர்; அவனை அருட்பெரியோன் எனப் பணிந்தனர். "கோன்புத்ஸன்! கோன்புத்ஸன்! நீ எவ்வளவு பெரியவன்! அறிஞன்! கோன்புத்ஸனுக்கு முன் ஒரு கோன்புத்ஸன் இருந்ததில்லை! பின்னும் இருக்கவில்லை!" என்று ஒவ்வொரு சீனன் உள்ளமும் இன்று நன்றிகூறும். கோன்புத்ஸன் இன்னும் புகழுடலில் உலகில் உலவுகிறான். கி. மு. 240-ம் ஆண்டில் கோன்புத்ஸனுடைய நீதி நூல்களை ஒரு கொடுங்கோல் மன்னன் எரிக்கும்படி உத்தரவுசெய்தான். கோன்புத்ஸனுடைய சீடரைக் கொடுமையாக நடத்தினான். அவர்களை 1200-மைல் நீளமுள்ள சீனச்சுவரைக் கட்டுவதில் ஏவினான். ஆனால் இவனுக்குப்பின் கோன்புத்ஸன் அரசரால் ஏற்று வணங்கப்பெற்றான். அவன் ஆலயங்கள் எங்கும் நிரம்பின. அவனுக்காக ஜனங்கள் திருவிழாக் கொண்டாடினார்கள். அவனுடைய பேரனான தூசிதசன் கோன்புத்ஸன் திருமொழிகளைத் திரட்டிப் பெருநூலாகச் சேர்த்தான். இன்னும் பலரும் அம்மாதிரி செய்தனர்.

கோன்புத்ஸன் புதிய மதத்தை உபதேசிக்கவில்லை. மனிதன் எப்படி சமூகத்தில் வாழவேண்டியது என்பதையே

காட்டினன். அறிவையும் அறத்தையும் ஆன்மவுணர்வையும் பெரியோர் வணக்கத்தையும் அவன் தூண்டினன். கடவுளைப் பற்றி அவன் ஒன்றும் சொல்லவில்லை. வானுலகைப்பற்றி மட்டும் இங்கு மங்கும் தன்நூல்களில் குறிப்பிடுகிறான். ஆகாயத்தைப்பெரிய சக்தியாக வர்ணிக்கிறான். கொன்புத்ஸன் நாஸ்திகனல்ல. தான் அறிந்துகொள்ள முடியாத விஷயத்தைப் பிறருக்குச் சொல்வது சரியல்லவென்று எண்ணினன். தன் மனித சக்திக்கு அதிகமாயுள்ள பரம்பொருளை அறிந்துவிட்டதாக வெளியிற்சொல்லிக்கொள்ள அவன் விரும்பவில்லை. இனி கொன்புத்ஸன் உள்ளத்திற்பூத்த சில நறுமலர்களை நுகர்வாம்:—

உனக்குத்தெரிந்ததைத் தெரியுமென்று ஒப்புக்கொண்டு தெரியாததைத் தெரியாதென உரைத்தல் சால்புடைத்து.

நியாயம் இன்னதென்றறிந்து அதைச் செய்யாதிருப்பது கோழைத்தனம்.

நீ கும்பிடும் தேவதை உன் முன் நிற்பது போல எண்ணித் தொழு.

என் மனது வழிபாட்டில் நிற்காவிடின், நான் வழிபட்டதாகவே ஆகாது.

வெறும் சோறும், தண்ணீரும், தலையணிக்குப் பதிலாகக் கையும் கொண்டு ஆனந்தமடையலாம். ஆனல் நற்குணமின்றி செல்வமும் கீர்த்தியும் காற்றால் சிதறிப்போகும் மேகங்களைப்போல் எனக்குத் தோன்றுகின்றன.

மனிதருக்கு உன்னைத் தெரியவில்லையென வருந்தாதே: உனக்கு மனிதர்களைத்தெரியவில்லையென்றும் வருந்தாதே.

நல்ல மனிதன் எப்போதும் பெருந்தன்மையோடிருக்கிறான். கெட்டவன் எப்போதும் பயத்தால் பதுங்கியிருக்கிறான்.

சிறிது நற்குண முள்ளவிடத்தும் வணக்கமும் இன் சொல்லு மிருக்கும்.

ஒரு முறை தன் சீடர், "போதகரே! தாங்கள் எம் மோடு பேசாவிடின் நாங்கள் எதைக்கற்பது?" என்றனர். கோன்புத்ஸன் "ஆகாயம் பேசுகிறதோ? நான்கு ருதுக்களும் பேசாமற் பலகாரியங்கள் செய்கின்றனவே," என்றான்.

பிறர் உனக்கு எதைச்செய்ய விரும்புவாயோ அதையே பிறருக்கும் நீ செய்வாயாக.

அறிவை விரும்புவோன் அறிவாளி யாவான். நடத்தை யில் கருத்தைச் செலுத்துபவன் சீலனாவான். தன் மானத் தைக் காப்பதிற் கண்ணுள்ளவன் துணிவுள்ள வீரனாவான்.

தன்னைத் திருத்திக்கொள்ள முடிந்தவன் மற்ற மனி தரையும் அறிவு புகட்டியாளும் திறமைசான்றவனாவான். தன்னை ஆளத்தெரிந்தவன் தேசங்களையும் உலகங்களையும் ஆள வல்லவனாவான்.

உலகைத் துறந்தோடுவதால் மட்டும் அமைதியெய்தாது. தன்னைச் சுற்றியிருப்போரிடம் அன்புடன் பழகுவதினாலும் உலகோடு ஒத்துவாழ்வதினாலுமே நலமுண்டாகும்.

மனிதனிடத்திலிருக்கும் உயர்ந்த சக்தியைக் கண்டு பிடித்து அதை வளர்ப்பதே படிப்பின் நோக்கம்.

அறிவால் அன்புள்ளமும், அன்பால் நேரான எண்ணங் களும், அதனால் கல்வி நிறைந்த மனிதரும், அவர்களால் இன் பம் நிறைந்த குடும்பங்களும், அவைகளால் ஒழுங்கான ஜன சமூகமும், அதனால் அமைதியான உலகும் உண்டாகிறது. தோட்டிமுதல் தொண்டமான் வரையில் அனைவரும் தங் களைத் தாமே திருத்திக்கொள்ள முயலவேண்டும்.

அழகியவற்றை உண்மையாகவே விரும்பித் தீயனற்

றத்தை எப்படி வெறுக்கிறோமோ, அதுபோலவே தன்மனச் சாட்சியை விரும்பி உண்மையாக நடப்பதே அன்பான நல்ல மனம் எனப்படும்.

அமர்ந்த மனமே நேரான மனம். இன்ப துன்பங்களில் அழுந்துவது அமைதிக்குப் பகையானது. பதற்றமும் பகையும் உள்ளவன் அமைதி காணான். அமைதியற்றவனுக்கு உணவும் சுவைக்காது. கண்ணும் சரியாகக்காணாது. காதுகள் சரியாகக் கேளா.

நேரான மனத்தோடு அமைதியாய் நுட்பமான பகுத்தறிவுடன் நல்லதை யறிந்து நடப்பவனே கற்றறிவாளன்.

இத்தகைய அன்பும் நேர்மையும் மாந்தர் வாழ்வில் விளங்கினால் பிறகு உலகில் போர் ஏது? போரொடுங்கின், வேறு துயரேது? மனமே மனிதன்; மனத்தை மெய்ஞ்ஞான வனமாக்கி யின்பமுறவாழ்.

## 3. ஜாரதுஷ்ட்ரன் (Zoraster)

### கன்னி துக்தோவா

“இறைவனே! அஹுர மஜ்தனே! நீ என்னைப் பதினைந்து வயது வரையில் வளர்த்தாய்! என் வாழ்வின் செடிக்கு நல்லறிவை யூற்றினாய். என்னை ஏன் இப்போது கைவிடுத்தாய்! பேயைத் தொழுது, என் நல்வாழ்வு பிடிக்காத பெற்றோர்கள் என்னை மாயக்காரி என்றெண்ணி, அடித்துத் துரத்தினர்! என்னைச் சுற்றிலும் உள்ள உலகு அஹரிமான்

(சாத்தர்ன்) ஆட்சியில் அல்லற்படுகிறது! பில்லி சூனியமும், மாயமும், வஞ்சமும், தீவினையும், பேராசையும், பொருமையும், கொலையும், களவும், அசுரத்தன்மைகளும், உலகை நரகவிருட் குழியில் ஆழ்த்தின! என்னினத்தார் ஒற்றுமையற்று அன்பை மறந்து ஒருவருக்கொருவர் வாதமிட்டு மடிகின்றனர்! இறைவனே! உன்னை மறந்து பேய்களை வணங்குகின்றனர். மக்க ளறத்தின்மேற் காரிருள் மூடியது! இந்தியாவிலுள்ள எனது சகோதரர் ஆன்ம நெறியில் உயர்ந்து விளங்குனர். ஈரானியாவிலுள்ள ஆரியர்மட்டும் பழைய செந்தண்மைகளை மறந்திருப்பது உனது திருவுளமோ! ஏழைப்பங்காளா! உன் பாதமே துணை! பற்றுமற்றிலேன்—பேதை சுற்றத்தார் என்னை வெறுத்தனர்! குணத்திற் சிறந்த ஸ்பைதாமர் வசிக்கும் இந்த நாகா நகரில் நான் வந்ததும் உன் ஆணையே. ஏ அஹுரா! தோன்றாத் துணைவா! என் மனக்கவலையை மாற்றியருள். எனது நாட்டின் கேட்டைப் போக்கியருள்!'' இவ்வாறு புலம்பிக்கொண்டு துக்தோவா என்னும் இந்தப் பெண்மணி சோர்வுற்றாள். திடீரென ஒரு ஒளி மின்னிட்டது. "ஒழுக்கத்திற் சிறந்த துக்தோவா! நீ அஞ்சாதே. அஹுரன் உன் வயிற்றில் தனது அருட்சுடரை புகுத்தியுள்ளான். உன்வயிற்றில் ஒரு அருட்புலவன் பிறப்பான். அவனால் உலகம் இன்புறும். நல்லாய்! நீ உடனே பௌருஷாசுவனை மணம்புரிவாயாக!'' என்று ஒரு திருமொழி எழுந்தது. துக்தோவா துயர் நீங்கினாள். அன்பு பெருகினாள். இறைவனருளை எண்ணி உருகினாள். பௌருஷாசுவன் என்ற நல்லான் இக்கற்பரசியை மணந்தான். சில ஆண்டுகளுக்கு முன்னே 'இம்' என்னும் ஈரானிய மன்னன் கனவிற்கண்ட அருளாளனே தமது திரு

மைந்தனாகத் தோன்றப்போகிறான் என்ற மகிழ்வுடன் அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

## இளமை

கலி 2441-ம் ஆண்டில் (கி. மு. 660) ஒருநாள் இயற்கைத்தாய் என்றுமில்லா வனப்பெய்தினள். ஒரு பெருங் கவலை நீங்கியதுபோல நிலமகள் பொலிந்தாள். நல்லவர்கள் தமது குறைகள் அற்றதுபோல் உணர்ந்தனர். தீயோர் நெஞ்சம் திகிற்பட்டது. வானகம் ஒரு புதுமீன் காட்டிப் புன்னகைத்தது. துக்தோவாவின் வயிற்றில் தவங்கிடந்த தேவதூதனும் உலகொளியைக் கண்டான். குழந்தையின் திருமேனி பொன்னொளிர்ந்தது. பல வியன்குறிகள் அதனிடம் காணப்பட்டன. பிறந்தவுடன் இக்குழந்தை இடி இடியென்று உலகைப் பார்த்துச் சிரித்தது. அதன் மூளை விரைவாகத் துடித்தது. நற்குணங்களெல்லாம் திருவுருக் கொண்டுற்றனவெனப் பெரியோர் வணங்கினர். இக்குழந்தையை ஜாரதுஷ்ட்ரன் என்று அழைத்தனர்.

அழகு, அன்பு, பொறுமை, இரக்கம் முதலிய தன்மைகள் இயல்பில் வாய்ந்த ஜாரதுஷ்ட்ரன், ஐந்து வயதடைந்தபோதே உலகின் துயர்களை நன்கு அறிந்தான். தன்னைப் பயிற்றிய புர்ஜிங்குரன் என்ற பெரியோனிடம் அடிக்கடி உலகின் இன்னல்களைப்பற்றிப் பேசி அதைத் தீர்க்கும் வழிகளை வினவுவான். பேயை வணங்குவோரையும், நாத்திகரையும் தனது மெய்யுரைகளால் திடுக்கிடச் செய்வான். சீன ஞானி லவோத்ஸன் போல மௌனமாகத் தன் புலன்களை யடக்கி, முதலில் தன்னை வெல்லவே ஜாரதுஷ்ட்ரன் பயின்றான். தன்னைச் சுற்றி அழிநடம்புரியும் மாயங்களுக்குள்ளாகாது

மனத்தை இறைவன் மலரடியில் அன்பினல் இறுகக் கட்டி ஞன். உள்ளம் பழுத்த அருட்புதல்வன் பதினைந்து வயதி லேயே உலகப்பற்றை நீத்தான். ஆன்ம நினைப்பிலேயே ஆழ்ந்தான். தன்னறத்தை அருட்புலமையாலுணர்ந்தான். ஐரோப்பாவிற்கும், இந்தியாவிற்கும் பிரிந்துசெல்லுமுன்னர் தனது ஆரியக் குழுவினர் நடு ஆசியாவில் ஒரே கடவுளைத் தொழுது, ஒரே ஒழுக்கம்பற்றி இனிது வாழ்ந்ததை எண்ணி ஞன். வைதிக ஆரியரான மாகிகளைப் போல்வே பூணூலை யும், மாஞ்சியையும் (குஸ்தி) பூண்டான்.

## அருந்தவம்

நமது ஜாரதுஷ்ட்ரனுக்கு இப்போது வயது இருபது. உலகிலுள்ள துன்பங்களையும், மாந்தர் இருளடிமைச் சிறை யில் வருந்துவதையும் எண்ணி புத்தரைப் போன்று மனங் கரைந்தான். அவன் மனம் ஒரு மருந்தைத்தேடிப் பரபரத் தது. வீட்டில் இருக்க முடியவில்லை. வீட்டைத் துறந்தான்; காடுமலைகளில் திரிந்தான்; பசியும், பிணியும், வெயிலும், மழையும் பொறுத்தான். அரவமற்ற தனிமையில் ஊன்றி ஐம்புலன்களையும் வென்றான். சிந்தனையில் நின்றான். இப்ப டிப் பத்து ஆண்டுகள் தவம்புரிந்து, அறிவுவிழி மலர்ந்தது. சபாதன் மலை மீது தவமிருக்கையில் ஜாரதுஷ்ட்ரனின் மாசற்ற விழிகளுக்குக் கடவுட்காட்சிகள் புலப்பட்டன. ஒருநாள் தாயிநி என்னும் நதிக்கரையில் ஜாரதுஷ்ட்ரன் சிந்தித்திருந்தான். அப்போது, நல்லெண்ணத்திற்கு இறைவ ஞன வஹூமானன் முன்னல் தோன்றி அவனுக்கு ஒளி யுடலீந்து, சமாதியில் ஆழ்த்தினன். ஜாரதுஷ்ட்ரன் சமாதி நிலையில் வானுலகில் விளங்கும் இறைவன் அஹூ

ரன் காட்சியைக்கண்டான். அஹுரன் தனது அருட் குமரனை அன்புடன் ஏற்று அரியணைக் கருகே இருத்தி அற வழியை விளக்கினன். மனச்சான்றின் கட்டளைப்படி நடப்பதும், மன மொழி மெய்களில் தூய்மை யடைவதும், தூயவாழ்வும், தன்னையடைந்து இன்புறும் வழியென்று ஆண்டவன் அவனுள் அருளினன். "மனிதனுடைய மனதில் நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களும் உதிக்கின் றன. நல்லவை இறைவனுல் தரப்பட்டவை; தீயவை அஹரிமானனுல் தரப்பட்டவை. இவன் தூதனுன ஆங்கிர மானியனை (ஆங்காரத்தை) வரவொட்டாது மனத்தை இறைவனடிசேர்த்து மனிதன் அமைதி பெறலாம்; இறைவ னருளே எல்லாம் வல்லது" என்று சொல்லி, அவஸ்த ஜெந்த வேதத்தை ஜாரதுஷ்ட்ரனுக்கு அஹுரன் உபதேசித்தான். தூய சொல், தூய செய்கை, தூய நினைப்பு என்னும் விண் ணகத்தைக் காட்டினன். வஹுமானன், ஆராமதி, ஹரா வதி, ஆரியமானன், தேனு முதலியவர்கள் சூழ அஹுரமஜ் தன் கொலு வீற்றிருக்கும் காட்சிகளை உள்ளே கண்டு களித்து ஜாரதுஷ்ட்ரன் உண்மை தெளிந்து எழுந்தான்.

## அறிவுப்பணி

தான் கண்ட உண்மையைச் சென்ற விடமெல்லாம் மாந்தருள்ளத்தில் விதைத்து ஜாரதுஷ்ட்ரன் நாடெங்கும் சுற்றினன். இந் நல்லோன் மொழிகளை அப்போதுலகம் மதித்து ஏற்றுக்கொள்ளவில்லை. கயவர் கட்சிகட்டினர்.

பேயடியார் பித்தனென்றிகழ்ந்து, இந்த நற்குணக் குன் றைக் கொல்ல நாளும் வழிதேடினர். ஐயன் பேரைக் கேட் கும் பொழுதே ஆத்திரம் பொங்கிப் பல்லை நெருநெருத்தனர்.

பேயடியாரில் முதன்மைபெற்ற துரானிய மன்னன் அருளடியானைக் கொல்லக் கொலையாளிகளையும், சூனியக்காரரையும் ஏவினன். அஹுரன் அருளால் ஐயன் பிழைத்தான்.

காலால் நடந்து தன் மதக் கொள்கைகளைச் செவிட்டுக்காதுகளில் உரைத்து உரைத்து அலுத்துப்போய் ஜாரதுஷ்ட்ரன் ஒரு செல்வனிடம் தனது அருட்பணிக்கு ஆளுதவியும், பொருளுதவியும் கேட்டான். ஆணவப்பேய் பிடித்த அப்பணக்காரன் கண்கள் சிவக்கச் சீறி விழுந்து திட்டிக்கொட்டிக் கடுமையாக விரட்டி யடித்தான். ஐயன் மனம் நொந்தான். உள்ளத்திறைவன் துயராற்றினன். ஜாரதுஷ்ட்ரன் தன்னை இன்னும் பக்குவப்படுத்திக்கொள்ள 40-வயது வரையில் இந்தியா, சீனம் முதலிய நாடுகளிற் சுற்றித் தன் அறிவைப் பெருக்கிக்கொண்டான். தான் அறிந்தவற்றையும் பிறருக்கு உரைத்தான். ஆனல் இன்னும் உலகம் இருளில் உறங்குவது கண்டு ஜாரதுஷ்ட்ரன் மனந்தளர்ந்தான். கடவுளன்பையே எண்ணி ஐயன் சுடச்சுட நோற்ருன். எங்கும் கடவுட் காட்சியைக் கண்டான். உயிரிரக்கம், உயிரன்பு, ஒளி வணக்கம், உள்ளமைதி, தன்னறிவு முதலியவற்றைப் பயின்று வெற்றிபெற்று மீண்டும் ஐயன் அருட்பணி தொடர்ந்தான்.

## அஹுரிமான் வீழ்ச்சி

ஆனல் இவையெல்லாம் சாத்தானகிய அஹுரிமானனுக்குப் பொறுக்குமா? தனது அடியாரான ஆங்கிரமானியன், பூதி முதலியவர்களை ஏவி ஜாரதுஷ்ட்ரனை வாதில் மடக்கிக் கொல்ல முயன்ருன். நமது அருட்பெரியோன் "அஹுரா வைரியா" (கடவுளின் மன்மே நீதி முறை) என்று சிக்

த்து சாத்தான் தலை குனியும்படி அவன் கேள்விகளுக்கு விடையளித்தான்.

ஜாரதுஷ்ட்ரன்:—உலகை யழிக்கும் பேய்களா! உங்கள் சூட்சிகள் வீழும். அருளாட்சியே வாழும்! அஹுரன் படைத்த இவ்வுலகிலிருந்து கொண்டு அதற்கே தீங்கு நினைக்காதீர்கள்.

அஹரிமானன் :—ஜாரதுஷ்ட்ரா! நீ எதனுல் எங்களை வெல்லுவாய் ?

ஜார :—கடவுள் உரைத்த நன்மொழிகளாலும் அற வழியாலும் அன்பாலும் வெல்வேன். எல்லா வுலகிற்கும் இறைவனுன அஹுரன் ஏழைப்பங்காளன். அவன் சக்தி எங்கும் பரவி யிருக்கிறது. நான் அவனருளால் உலகை விடுவிக்க வந்தேன்.

அஹரி :—ஹே ஜாரதுஷ்ட்ரா! அரசர்க்கரிய ஆட்சியும் திருவும், உலகின்பமும் தருகிறேன். என்னை நினை. அந்த அஹுரனை மற.

ஜார :—உலகைக் கெடுக்கும் பிசாசுகளா! என் மூச்சை நீங்கள் பிரிக்க முடிந்தாலும் என்னை ஆண்டவனிடமிருந்து பிரிக்கமுடியாது. உங்கள் மாயவலையில் நான் சிக்கமாட்டேன். இந்த மண்ணுக்காக விண்ணை மாற்றமாட்டேன்! என் கண்ணுன உண்மையைப் புல்லின்பத்திற்கு விற்கமாட்டேன்.

* * *

அஹரிமானன் முகம்சுண்டி ஓட்டமெடுத்தான். இந்த வெற்றி ஒரு வீறளித்தது. பின்பும் தன் உண்மையைக் கூவிக்கொண்டு ஐயன் உலகோர் மனக்கதவைத் தட்டினுன். திறக்கவில்லை. முடிவில் மேத்யோமன் என்ற நன்றியுள்ள ஒரே சீடன் வந்து சேர்ந்தான்.

## உண்மையின் வெற்றி

அப்போது ஈரானிய அரசன் விஷ்தாசுவன் என்பான் கற்றறிவேயன்றிக் காட்சியறிவற்ற பண்டிதர்களின் வலையில் சிக்குண்டிருந்தான். இப் புத்தகப் பூச்சிகள் செருக்கும் பொறாமையும், வாதமும், முகமனும் மிகுந்து புலனை வென்ற புலவனை அறியாத குருடராகி, ஜாரதுஷ்ட்ரன்மீது குத்திரமும் கோளும் உரைத்து அரசன் மனத்திற் பகைவெறியேற்றினர்.

மஹானை மாயக்காரனென்றும் சூனியக்காரனென்றும் நம்பவைத்தார்கள். அரசன் அருளாளனைக் கடுஞ்சிறையிலடைத்தான். சிந்தையைக் கடவுளிடம் வைத்து ஐயன் சிறைச்சாலையைத் தவச்சாலையாக்கினன். அந்நாளில் அரசனுடைய அருமையான குதிரை வாதநோயால் கால் முடங்கி வருந்தியது. ஜாரதுஷ்ட்ரன் ஆண்டவன் பெயரைச் சொல்லிக் குதிரையின் நோயைத்தீர்த்தான். அரசன் இதைக் கண்டு வியந்து ஜாரதுஷ்ட்ரனை நம்பி அடிபணிந்து தன் மகன் இஸ்பேந்தியரையும் அருட்பணிக்களித்தான்; தனது பண்டிதர்களைத் தண்டித்தான். ஜாரதுஷ்ட்ரனும் அரசனுக்குக் கடவுட் காட்சியைக் காட்டினன். ஆயிரம் மின்னல் போன்று அவனுள் அறிவு புகுந்தது. அரசன் தன் குடும்பத்தோடு ஜாரதுஷ்ட்ரன் பணியில் ஈடுபட்டான். அரசனின் முதல் அமைச்சனான பிரசோஸ்திரன் தன் மகள் ஓவியை ஜாரதுஷ்ட்ரனுக்குத் தாரமாகக் கொடுத்தான்.

இதுவரையிற்பட்ட பாடுகளின் பலன் கிடைத்தது. அரசனுடன் குடிகளும் ஜாரதுஷ்ட்ரனைப் பின்பற்றினர். அரசன் சகோதரனான ஜாரிபைரி சிறந்த அருட்பணி புரிந்தான். பாரசீகம் முழுதும் தனது உண்மை பரவிற்று. பிற

நாடுகளினின்றும் பல அறிஞர்கள் வந்துசேர்ந்தனர். யூதர் பலர் தன்னைப் பணிந்தனர். தீயர் அடங்கினர். ஜாரதுஷ்ட்ரன் அருள்வலியால் குருடு, செவிடு, ஊமை, நோய் நுடங்கல் களைப் பரிவுடன் தீர்த்தான். சுடர்மணிக் கோயில்கள்பல கட்டுவித்தான். தானே வழிபாடுகளை ஆற்றி அனைவர்க்கும் ஒளி வணக்கத்தின் உயர்வைக் காட்டினான். இன்னும் பகைவர் சேட்டை ஒழியவில்லை. அவர்களை அடக்க வாள்வலி வேண்டுமென்றே உணர்ந்தான். தன் அன்பரை அந்தணர், வீரர், தொழிலாளிகளென மூன்றாகப் பிரித்தான். போர் வீரரைப் பயிற்றினான். அரசனும் ஜாரிபைரியும் இன்னும் ஆயிரக்கணக்கான வீரரும் அறப்போர் புரியக் கிளர்ந்தெழுந்தனர்.

துரானிய அரசனான அரஜாசுவன் பகைமூண்டு பேய் வெறிகொண்டு ஜாரதுஷ்ட்ரனையடைந்த விஷதாசுவனை எதிர்த்தான். விஷதாசுவனும் வீரசிகாமணியான ஜாரிபைரியும் ஏறுபோலப் போர்புரிந்தனர். துரானிய மன்னன் கை சோர்ந்து ஒரு மாயக்காரன் சூழ்ச்சியால் ஜாரிபைரியை நச்சம்பு பாய்ச்சிக் கொல்லுவித்தான். மதயானைகளுக்கிடையே உறங்கும் சிம்மம்போல், வீரமணியான ஜாரிபைரி போர்க்களத்தில் வீழ்ந்ததுகண்டு அவன் மைந்தன் பாஸ்த்வரன் போரெடுத்துப்பாய்ந்து அந்த மாயக்காரனைப் பிளந்தெறிந்து துரானிய மன்னனையும் ஒடுக்கி வெற்றிகொண்டான். பகைவரும் ஒருவாறு அடங்கினர். சில ஆண்டுகள் அமைதி நிலவியது. துரானிய மன்னன் மீண்டும் பெரிய படைகொண்டு ஜாரதுஷ்ட்ரரைத் தாக்கி இரத்தவெள்ளம் பெருக்கினான். ஒளி மந்திரங்களை இடித்தான்; அவஸ்த ஜெந்த வேதத்தைக் கொளுத்தினான். தொழுகையிலிருக்கும் அன்பரைக் கொன்

ருன். அன்பர் தங்கள் இறுதி மூச்சுப் போகும்வரை அஹுரனையே வழுத்தி இறந்தார்கள். சாவும் வியக்கும்படி அறவீரர் அஞ்சாது உறுதியுடன் நின்றார். எங்கும் கொலையும் சாவும் இரத்த வெள்ளத்தில் கூத்தாடின. உலகம் இருள் மூண்டது! அந்தோ! அரஜாசுவனுடைய படை ஒரு சுடர்மணிக்கோயிலை வளைத்துக்கொண்டது. அதற்குள், கையில் ஜபமாலையுடன் அருளாளனான ஜாரதுஷ்ட்ரன் அன்பர்களுக்கு நல்லுரை செய்துகொண்டிருந்தான். சினவெறியுடன் வரும் பகைவன் ஜாரதுஷ்ட்ரனைக் குறிவைத்தான். துர்பரதரன் என்னும் துரானியன் மனந்துணிந்து தன் வாளால் ஜாரதுஷ்ட்ரனைத் தாக்கினான். ஜாரதுஷ்ட்ரன் கீழே விழுமுன் ஜபமாலையைப் பகைவன் மீதெறிந்தான்; அதனின்று தீக்கிளம்பிப் பகைவனை யழித்தது. எடுத்த வினையுடலை உதறி ஜாரதுஷ்ட்ரன் 77-வது வயதில் இறைவனடி சேர்ந்தான்.

இப்படிப்பட்ட பெரியோன் வரலாறு இவ்வளவு கடுமையாகவா முடியவேண்டும்? ஐயனின் குருதியையுண்டு அறப் பயிர் தழைத்தது. தன் அருளாளனை இழந்த ஈரானியர், குருடன் கண்பெற்றிழந்ததுபோல வருந்தியது. ஆயினும் தனது ஆருயிர் வள்ளலைக்கொன்ற பகைவனைச் சிதைக்க வீரவெறியுடன் எழுந்து, துரானியரை முறியடித்து அறப்பகைவரை யழித்தது. ஜாரதுஷ்ட்ரன் மாப்பிள்ளையான ஜமாசுவன் குருபீடம்வகித்து, ரட்சகனின் திருவாக்குகளைச் சேகரித்து அவஸ்தா, ஜெந்தா என்னும் இரண்டு வேதபுத்தகங்களை ஆக்கினான். முதன்மந்திரி ஜாரதுஷ்ட்ரக் கொள்கைகளை எங்கும் பரப்பினான். ஜாரதுஷ்ட்ர தர்மம் தன் தலைவனைப் பலி வாங்கியபிறகு பலமாய் ஊன்

றிக் கொண்டது. அதுவே பாரசீகத்திற்கு அரச மதமாயிற்று. பிற்காலத்தில் கிரேக்கர், ரோமர், இஸ்லாமியரின் படையெடுப்பால் இம்மதம் சற்று சோர்ந்தது. ஜாரதுஷ்டரருக்கு, அன்பும், ஆன்ம ஒருப்பாடும் அடிப்படையாயுள்ள அறநாடான பாரதம் புகலீந்தது. பாரதமாதாவின் ஆன்மச் சோலையில் ஜாரதுஷ்ட்ர மைந்தர் இன்று மகிழ்ந்து உலவுகின்றனர்.

## மஜ்தாய் தர்மம்

ஈரானியர், இந்தியர், ஐரோப்பியர் மூவரும் முதலில் ஆக்ஸஸ் நதிக்கரையில் ஒரு குடும்பம்போல் வாழ்ந்தவர்களே. இவர்கள் ஒரே மொழி பேசினவர்களே. ஆரியத்திற்கும் ஜந்து மொழிக்கும் மிகப் பொருத்தம் உள்ளது. இந்திய ஆரியர் வணங்கிய தெய்வங்களையும் பழகிய ஆசாரங்களையும் சற்று திரிந்த பெயர்கொண்டு ஜாரதுஷ்ட்ரர் வழங்கினர். அவஸ்தஜெந்த வேதத்திற் காணப்படும் பல சிறப்புப் பெயர்களுக்கு நேரான ஆரியமொழிக ளிருக்கின்றன.

ஆராமதி (லக்ஷ்மி), ஹரஹ்வைதி (சரஸ்வதி), இமன் (யமன்), ஐர்யமானன் (ஆரியமான்), மத்ரா (மந்த்ரம்), தூதா (தூத:) வஹூமானன் (பிராஹ்மணன்) போன்றன.

மஜ்தாய் தர்மத்திற்கும், யூத தர்மத்திற்கும் அடிப்படையான ஒற்றுமையுள்ளது. அவ்வாறே இந்து மதத்திற்கும் மஜ்தாய் மதத்திற்கும் மிகவும் ஒற்றுமையிருக்கிறது.

ஜாரதுஷ்ட்ரர் இந்தியாவில் பிரயாணம் செய்யும்போது இந்து – ஆரியரின் பழக்கங்கள் அவருக்குப் பிடிபட்டன. அஹூரனை விஷ்ணுவைப் போலவே அவர் கருதினர். அஹூர மஜ்தன் என்பது அசுரமர்த்தனன் என்றதன் திரிபெனத் தெரிகிறது. கருத்மானன் (கருடன்) அவனுடைய

வாகனம். அவன் பத்னி ஆராமதி. ஹோம் (ஓம்) அவனுக்குகந்த மந்திரம். ஓம் என்ற இந்தப் பிரணவத்தையே கிரேக்கர் இயோ என்றும், யூதர் ஆமன் என்றும் சொல்லுகின்றனர். ஆஷேம் வாஹூ (அன்பும் ஒழுக்கமும் இன்ப நலமாம்) என்பதும், யாதா யாஹூவைர்யோ (அன்புவழியே ஆண்டவன் விருப்பம்) என்பதும், மஜ்தாயன்பரின் மூலமந்திரங்கள். மஜ்தாய்நெறி வினை வழியையே பெரிதும் ஆதரிக்கிறது. விதைத்ததே விளையுமென்னும் கொள்கை அதிற் காணப்படுகிறது. நற்செயல்களால் முத்தூய்மைபெற்று மாசற்று, நாளுக்குநாள் கடவுளிடம் மனதையுய்க்கும் அறிவை தீனு என்று அவஸ்தஜெந்துகூறும். இந்த தீனுவைத்தான் ஞானமென்றும், தீன் என்றும் வேறு மதத்தர் கூறுகின்றனர். தனுகரணபுவனபோகங்களைப் பற்றில்லாது அனுபவிப்பது ஜாரதுஷ்ட்ரரின் கொள்கை. மணம்புரிதல் நல்வினை யென்றும், பிள்ளைப்பேறே பெரும் பேறென்றும், அவஸ்தஜெந்தா கூறும்.

## ஜெந்தவஸ்த வேதம்

ஜெந்தவஸ்தா என்பதற்கு அறிவை விளக்கும் நூல் என்று பொருள். இறைவன் ஒருவன்; அவன் விதித்த படியே அனைத்தும் நடக்கிறது; சுத்தமே அவனை யடைய வழி; மனிதனிடம் இரு தன்மைகள் உள்ளன. ஒன்று தீயது; மற்றொன்று தூயது. தூய நறுந்தன்மைகள் வஹூமானனால் தரப்பட்டு நம்மைக் கடவுளிடம் சேர்க்கும். தீயன அஹ்ரிமானனால் தூண்டப்பட்டு நரகத்திற் சேர்க்கும். ஸ்பெந்தமானியனே மனச்சாட்சி. அவனே நம் வாழ்க்கையின் தெய்வீகத்தலைவன். அவனே நமக்கு நல்ல எண்ணங்களைத் தருபவன். பொறாமையும், வஞ்சமும், சூதும், கொலை

யும்; களவும், வியபிசாரமும் ஆங்கிரமானியன் ஏவலால் நடப்பன. வருந்தி மன்னிப்புக் கேட்பதே பாவங்களுக்குப் ப்ரிகாரம். புலாலுண்ணல் தீது. மனதே கட்டும் விடுதலையும் அளிப்பதால் அதை மாசின்றி வைத்துக்கொள்ளவேண்டும். பேசலும், எண்ணலும், செய்தலும் ஆகிய மூன்று ஆற்றல்கள் மனிதனுக்குத் தரப்பட்டிருக்கின்றன. கடவுளன்பாலும், உயிரிரக்கத்தாலும், ஐம்பூதங்களிடமும் வணக்கமுடன் நடப்பதாலும், பெரியோர்களை மதிப்பதாலும் வாழ்வு மாசற்றுக் கடவுட்டன்மை பெறுகிறது. ஒளி வணங்கத் தக்கது. (ஜாரதுஷ்ட்ரர் தங்கள் பிணங்களை எரித்தால் தீக்கடவுளுக்குப் பிழை செய்வதாக அஞ்சி மலைகளின் மீது தனி யிடங்களில் பறவைகள் கொத்தும்படி விட்டுவிடுவர்.) மனிதனிடம் ஐந்து தத்துவங்கள் உள்ளன :—(1) மனசாட்சி (தேனு), (2) ஸ்தூல சக்தி (அகு), (3) ஆன்மா (உர்வான்), (4) சூட்சும சக்தி, (5) ப்ரவாஷி (அந்தர்யாமி) என்பன. இவை மனித வாழ்வை மென்மேலும் உயர்த்திக் கடவுளுடன் சேர்க்கின்றன. மனச்சாட்சியே மனிதனுக்குள் ளிருக்கும் நீதிபதி. தீயர் நெஞ்சை அறுப்பதும் மனச் சாட்சியே. நல்லோர் நெஞ்சைக் களிப்புறுத்துவதும் அதுவே. நமது செயல்களை நிதானிப்பதும் அதுவே. அது மனிதனிடமுள்ள தெய்வீக சக்தி. அது ஆன்மாவுடன்கூடி, நாம் இறந்த பின்னும் இறவாதுள்ளது. ஸ்தூல சக்தி உடலின் வேலைகளைச் செய்து அதனோடு முடிந்துவிடுகிறது. சூட்சும சக்தியால்தான் மனிதன் அறிவு, தெரிவு, நினைப்பு முதலிய வேலைகளைச் செய்கிறான். மனிதன் இறந்தபின் சூட்சும சக்தி ஆன்மாவில் லயித்துவிடுகிறது. ஆன்மாவே சித்தாகி இன்பமாய் என்றைக்குமுள்ள பொருள். கடவுளுணர்விற்கு

ப்ரவாஷி என்று பெயர். ப்ரவாஷியே ஆன்மாவின் சக்தி. ஆன்மாவை ஆணாகவும் ப்ரவாஷியைப் பெண்ணாகவும் ஜெந்த வேதம் வர்ணிக்கிறது. இந்த சக்தி பஞ்ச பூதங்களிலும் உள்ளது. இந்த சக்தியே பகைவன்மைகளை வெல்வது. இதை அறிந்து தெளிந்தவர்களே உலகில் மனிதக்கடவுள ராய் மதிக்கப்படுகின்றனர். அவர்களே முழுத்தூயர்கள். அவர்களே அறக்காவலர். அவர்களுடைய தூய வாழ்வே உலகின் இருளைப் போக்கும். இத்தகைய தூய வாழ்வையே ஜெந்த வேதம் மனிதனுக்கு அறிவிக்கிறது. தூயநெறியால் தூய விண்ணிலுள்ள தூயனை யடைவதே ஜந்த வேதச்சுருக் கம்.

வாய்மை நலனோம்பு வன்றூண் டடக்கமிவை
தூயோனைச் சேருந் துணை.

# 4. ஏசுகிறிஸ்துநாதர்

"என்றுமுள்ள பொருளைத் தேடு; அதை அடையு மட்டும் அயராதே" (ஏசாய் 15 : 6) என்ற பழைய ஏற்பாட்டின் திருவாக்கை மறந்தனர். வீண் ஆடம்பரங்களும், பொய்யொழுக்கமும், பகட்டும், செருக்கும், நல்லதையுணராப் பிடிவாதமும், காமக் காரிருளும், கொலை, புலை, கள், கடுவட்டி, போலித்தொழுகைகளும் யூதர் வாழ்வைப் புல்லுருவிபோல் உறிஞ்சி வந்தன. சத்தியம் அலுத்தது. சாத்தான் கை வலுத்தது. "புறஞ் செல்" என்று சாத்தானைத் துரத்தித்

தனது அன்பு, பொறுமை, இன்சொல், அமைதி, அருட்பணி, அறிவு, பரிவு, கடவுளுறுதி, இணையற்ற ஆத்மத்யாகம் முதலியவற்ருல் அழிவினின்று யூதரை மீட்டு உண்மை இன்பவாழ்விலுய்க்கவே ஏசுபெருமான் திருவவதரித்தார்.

ஆசியச் சுடரான ஏசுபிரான் (கிறிஸ்து என்ருல் அறிவொளியடைந்தோன் எனப் பொருள்) கடவுளுண்மையே உடலெடுத்ததன்னுன். தாய் தூயகன்னி மேரி, கற்பும் கருணையும்; பரிவும், திருவும், அன்பும் மிக்காள். "ஆண்டவன் அருட்சக்தியே அவள் வயிற்றில் ஒளிவடிவாகப் புகுந்தது. அப்ரஹாம் மரபிற்பூத்த அழகன் யோசேப் என்னும் தச்சுத்தொழிலாளன் மேரியை வரித்தான். யோசேப்பின் கனவில் தேவதூதன், "அருட்கன்னியான தூய மேரியின் வயிற்றில் இறைவன் மைந்தன் ஏசுகிறிஸ்துவே கோயில் கொண்டுள்ளான்" என்று இயம்பிச் சென்ருன்.

அக்காலம் யூதநாட்டை ஏரோ தென்னும் உரோமப்ரதிநிதி ஆண்டான். அவன் கொடுமையும், அச்சமும் குடிகொண்டவன். ஒருநாள் ஏரோது, "ஜனத்தொகை எடுக்க வேண்டும்; அவரவர் தமது பிறந்த ஊர் செல்க" என்று யூதருக்குக் கட்டளை விடுத்தனன். எல்லாரும் அவ்வாறே தத்தமது சொந்த ஊர் சென்றனர். அன்னை மேரியும், யோசேப்பும் தமது சொந்த ஊரான பேத்தல்ஹாமை யடைந்தனர். அங்கு எள்ளிட இடமில்லை—கும்பல். ஒரு மாட்டுத் தொழுவத்தில் இருவரும் குந்தினர். அப்போது உலகில் ஒரு இன்பச் சிலிர்ப்பெடுத்தது; விண்ணகம் புதிய மீன் துலக்கிப் புன்னகை புரிந்தது. ஏசுநாதர் அருளொளிப் பிழம்பாக அவதரித்தார். விண்ணகத்திற் புதிய மீனைக்கண்ட முனிவர் மூவர் இதை நுண்ணுணர்வாலறிந்து அருட் குழந்

தையை நாடி ஏரோதிடம் வந்தனர். "இந்நாள், உனதரசில் திருக்குமரன் யூதர்கோன் தோன்றியுள்ளான் ; அவன் பிறந்துள்ள இடம் எது?" என முனிவர்வினவினர். "ஏரோதிற்கு வயிற்றில் இடி விழுந்தது ; சோதிடரைக் கேட்டான் ; பெத்தல்ஹாமில் யூதர்கோன் தோன்றுவான் என அவர்கள் பழைய நூல்களைப் பார்த்துரைத்தனர். "முனிவரே! நீவிர் அங்குசென்று இவ்வுண்மையை யறிந்து என்னிடம் மீண்டு வந்துரைமின் !" என்று ஏரோது பணித்தான். மனத்தில் அப்பிள்ளையைக் கொல்ல வெறிபிடித்திருந்தான்.

வழியில் ஏசுபெருமானைக் கண்டு இன்பச் சிலிர்ப்புடன் நடமாடும் இரண்டு இடையரை முனிவர் கண்டனர். அவர்களைத் துணைக்கொண்டு பெத்தல்ஹாமில் திருமைந்தனைக் கண்டு வாழ்த்தித் திரும்புகையில், ஏரோதுவின் கொலை வெறியை யறிந்து அவனிடம் செல்லாது, முனிவர் தப்பிச் சென்றனர். ஏரோதின் கொடிய எண்ணத்தை ஒரு தேவதூதன் கனவிற்சொல்ல, அக்கணமே மேரியும், யோசேப்பும் தமது இன்பச் செல்வத்தைக்கொண்டு எகிப்திற் கேகினர்.

முனிவர் வந்திலர் ; பிள்ளையும் காணிலன் ; எரிமலை போன்று கொலைவெறி யெழுந்து குமுறியது, ஒரு வயதிற் குட்பட்ட குழந்தைகளையெல்லாம் கொல்லக் கொலையாளிகளை ஏவினன் கொடிய பாதகன் ஏரோது. அந்தோ! பிஞ்சிள மதலையர் செந்நீர் ஆறாய்ப் பெருகியது. இக்கொடியனைக் காலவேடன் கொன்றான். அதன்பிறகு, புண்ணியச் செல்வனைக்கொண்டு மேரியும், யோசேப்பும் நாசரத் நகரம் சேர்ந்தனர். அங்கு மரத்தொழில்புரிந்து தேவையளவு ஈட்டி யோசேப்பு, மேரியுடன் திருக்குமரனின் இன்பம் நுகர்ந்து இல்லறங் காத்தான்.

பிஞ்சிளங் . கிறிஸ்து தொழில் மாண்பை விளக்கத் தானும் தனது தந்தைக்குத் தச்சுத் தொழிலில் துணைபுரிந் தான். அத்துடன் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எண்ணெ ழுத்துக் கற்றான். அறிவிற்கெல்லாம் அறிவு எதுவோ அவ் வறிவொளி பெற்றுவந்த அருளறிஞனுக்குப் புத்தகப் படிப் பும் வேண்டுமோ? அந்த உள்ளறிவின் ஒளியாலன்றோ நூல்களைப் பார்த்துப் படிக்கவும் முடிகிறது. உள்ளொளி யாலே விழி பார்க்கிறது. அத்தகைய ஒளி விளக்கான இளங்கிறிஸ்து, இயற்கை வனப்பில் இன்புற்றுலாவுவான். இறைவனை நினைந்து மனமுருகுவான். உயிர்களிடம் உள் ளன்பு பேணுவான். அவன் கற்றதன்பு, சொற்றதன்பு, நிற்றதன்பு, பெற்றதன்பு.

ஒருநாள் நமது இளஞ்சுடர் யார்தன் (Jordan) நதிக் கரையில் நின்றான். "வருந்துமின் பிழைகளை! வழியினைத் துலக்குமின்! மானிடர் வாழவருகுனன் எம்பிரான்!" என்ற முழக்கத்துடன் அன்பர் தொடர ஒரு அருட்பெரியோன் அங்கெழுந்தான். யோவான் (அதுவே அவன் பெயர்) ஏசு வைக் கூர்ந்து நோக்கி வணங்கினான். "அடியேனை அறிவுப் புனலாட்டுக!" என்று பணிவுடன் வேண்டினான் ஏசு, "ஐயனே! இன்றுனைக் கண்டதும் எண்ணிய தெய்தினேன்! ஆணையைப் புரிகிறேன்" என்று யோவான் மாசறு தூயனுக்கு அறிவுப் புனலாட்டினான். அப்போதே "இவன் எனது திருக்குமாரன்" எனவொரு விண்மொழி யெழுந்தது. அருட் சக்தி (ஒரு புறவடிவாக) பாலகிறிஸ்துவினுட் பாய்ந் தது. உள்ளே கனலும் அறிவு மணிவிளக்கு சுடரேறியது; தான் உலகிற்கு வந்தவினை தெற்றெனத் தெரிந்தது; சுற்று முள்ள மக்கள் கொலை, புலை, பிணி, யடிமை, கோள், பொய்,

பொறாமை, போலி நடையுடைகளால் வருந்தும் கொடுமைகள் ஏசுவின்உள்ளத்தில்உறுத்தின. அது முதல் உயிரிரக்கம் பற்றி ஆண்டவன் பரிவைக் கூவியழைப்பதே வேலையாகி, ஆண்டவன் அருளையே நம்பி, பிறமறந்து, மனைதுறந்து, 13-வது வயதில் அறிவொளி நாடிப் புறப்பட்டான் ஏசுபாலன்.

ஏசுநாதர் பரத கண்டம் வந்து, காசியில் வேதாந்தம் பயின்று, நேபாளம், இராஜபுதனம், முதலியவற்றிற் சில காலமிருந்து, இமயமலைப் பாங்கரிற் சுற்றி திபேத்தையடைந்து அங்கு புத்த தர்மம் பயின்றதாகவும், லாசாவிலுள்ள 8400 புத்தப் பெரியார் வரலாற்றுப் பட்டயங்களில் ஏசுநாதர் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுவதாகவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஏசுநாதர் திருமொழிகளில் உபநிடத-பௌத்தக் கருத்துக்கள் மிளிர்வதே இவர்கள் காட்டும் அத்தாட்சி. ஏசுநாதர் தமிழகத்திற் பிறந்து வளர்ந்து,அரபிநாடு சென்றாரென்று ஆராய்வாரும் உளர். அஃதெங்ஙன மேனும் ஆகுக.

முப்பதாம் ஆண்டில் ஏசுநாதரை மீண்டும் அரபியாவிற் காண்கிறோம். இப்போது தான் கண்ட உண்மைச் சுடர்மணிகளை மக்களுக்கு அறிவின்பச் செல்வம் பெருக வாரியிறைக்கக் கருதினார் கிறிஸ்துபெருமான். தனது அருட்பணி தொடங்குமுன் ஐயன் நாற்பது நாட்கள் பட்டினியிருந்து சுடச்சுட நோற்றான். உண்மையறத்திற்கு உடல் சிலிர்த்தது; சாத்தான் குடல் கலங்கி, ஐயோ, நமது ஆட்சிபோய்விடுமே! என்றுபதறி ஐயனைச் சோதிக்கத் தொடங்கினான். நாற்பது நாட்கள் உண்ணாவிரதமிருந்த ஏசுநாதரைநோக்கி "நீ கடவுள் மைந்தனானால் இந்தக்கல்லை ரொட்டியாக்கி யுண்" என்றான். "உணவால் மட்டும் உயிர்வாழ்வில்லை; இறைவனருள் மொழியாலே மனிதன் உயிர்ப்பது," என்றார் கிறிஸ்துபெரு

மான். ஓங்குயர் கோபுரத்தின் மீதேற்றி, அங்கிருந்து தரை மீது குதி; நீ தேவமகனுனல் தேவதூதர்கள் உன்னைக் காயப் படாது தாங்குவாரென்று சாத்திரம் சொல்லுகிறது.'' என் ருன். "கடவுளை நீ வசப்படுத்த முடியாது" என்று துணிந்து கூறிய ஏசுவை ஒரு மலைமீது ஏற்றிச் சுற்றுலகைக் காட்டி "இவ்வுலகெலாந் தருகிறேன் என்னைப்பணி'' என் ருன் சாத்தான். "பேயே பின்செல்; பணிவது பகவனை'' என்ருன் விழித்தவீரன். சாத்தான் வெட்கித் தோற் ரேடிப் பாரகர் நெஞ்சிற் பகைநெருப் பூதினுன். வானோர் வந்து வரதனை வாழ்த்தினர். உடனே ஏசுநாதர் உலகிற்குத் தனது அருண்மொழிகளைப் பேசத்தொடங்கினுர்; பலவியன் செயல்களாற்றினுர்; பிணிகளைப் போக்கினுர்; பேய்களை யோட்டினுர்; குறைகளை நீக்கினுர்; நிறைமொழி பேசினுர். இந்த அருளறிவுக்காந்தம் மாந்தருள்ளத்தை இழுத்தது. அழைத்ததும் சீடர்கள் ஓடிவந்தனர்—எல்லாரும் வணிக ரும் வலைஞரும் சாதாரண மனிதரும்—யோவான், மத் தேயு, பேதுரு, ஆந்துரு, பர்த்தலோமியன், தாமன், பில்லிப், யூதாஸ் முதலிய பன்னிருவர் அனைத்துந் துறந்து ஐயனை யடைந்தனர். தனது அருளறிவுண்மையை ஏசுபெருமான் அனைவருக்கும் விளக்கினுர்.

கலிலியில், ஒருகுன்றின்மேற் புரிந்த உபதேசமணிகளே அவர் ஞானமகுடத்தில் இன்றும் கனலும் சிந்தாமணிகள். "உலகின் விளக்குகாள்! உலவும் கோயில்காள்! கடவுள் மைந் தர்காள்! களிமின்; பொறுமின்; பூரணத் தந்தைபோற் பூர் ணம் பெறுமின்; மற்றவையெல்லாம் வந்துமைச் சேரும். வானரசுள்ளே வயங்குதல் காணீர். ஞானவானரசை நண்ணு மின் முன்னே. எளிமையும், பொறுமையும், இரக்கமும்,

அன்பும், அமைதியும், குழந்தையைப்போன்ற தெளிந்த உள்ளமும் குலவுமின்! அருள்வழிவாழுமின்! இருள்வழி நீங்குமின்! அழியா உண்மை ஆன்மா. ஆன்மசுகத்தில் அறிவுடனிருமின்! ஆண்டவனிச்சை அனைத்தும் வல்லது. உன்னலாவது ஒன்றுமில்லை. தன்னலாவது தந்தையினிச்சை. உற்றார் போல மற்றவர்க்குதவுமின்! ஒன்னார் தமையும் மன்னித்திடுமின்! கடவுளரசைக் காதலோ டழைமின்! தேடுக கிடைக்கும். தட்டுக திறக்கும்! நாடுக நல்கும்!" என்பது ஏசுநாதரின் திருமொழிச் சுருக்கம்.

இச்சமயம் தனது பிறந்தநாளன்று களிவெறியாட்டத்தில் மயக்குண்ட இரண்டாவது ஏரோது, சிறைகாக்கும் யோவான் சிரத்தைக் கிள்ளினன். ஏசுநாதர் இச்செய்தி கேட்டு உள்ளுடைந்து, சீடருடன் காடடைந்து வருந்தினர். அன்றிரவு ஐந்தப்பத்தைச் சீடரனைவருக்கும் பசி நீங்கும்படி பங்கிட்டார். "நாட்டில் பகையும், களியாட்டங்களும் கொலையும் முற்றின. இனி நமது அன்புண்மை நெறியைப்பரப்பி நலம்புரிவாம்; எழுந்திருங்கள்; ஆண்டவனை நம்பி அருட்பணி புரியுங்கள். வேறு கவலை வேண்டாம்" என்று தனது சீடரை நாற்புறமும் அனுப்பித் தானும் எருசலம் ஏகினன் எம்பிரான். அக்கடவுட்கோயில் பாரகர் அட்டூழியங்களால் பெருமையிழந்தது; அங்கு போலித்தொழுகையும், புலால்முடையும், வட்டிக்கடையும், வட்டாட்டங்களும், விறலியர் கூத்தும், வீண்வழக்காடலும், அழிநடம் புரிந்தன. அறத்துணிவுடன் கிறிஸ்துபிரான் பாரகச்செல்வரின் பழி பாதகங்களை ஆவேசமாக எடுத்துக்கூறினன். வஞ்சச்செல்வர் வன்மொழி பேசினர்; தூற்றினர்; கண்ட கேள்விகளைக்கேட்டனர். ஐயன் உண்மையைத் துணிந்து

கூறினன். செருக்கும் அழுக்காறுஞ் செறிந்த பாரகர் ஐய னைக் கொல்லச் சூட்சிசெய்தனர்; "மன்னகோ! இத் தச்சன் மகன் தன்னை யூதமன்னனென்று வாய்ப்பறையடிக்கிறான்; பணக்காரரைப் 'பாம்புகளா' என்று கூவுகிறான்; எமது பழைய வழக்கங்களை இகழுகின்றான். இத்திமிர்பிடித்த வனைச் சும்மாவிட்டால் நாடு நின்னதில்லை; குடி முழுகிப் போகும்; அவன் எல்லார் மனத்தையும் வசப்படுத்துகிறான். அவன் பின்னே மாந்தர் மோகித்து ஓடுகின்றனர். மன்னகோ! இவனை உடனே ஒழிக்கவேண்டும்" என்று ரோமன் அதி காரியான போந்தியோ பிலாத்தனிடம் கூக்குரலிட்டனர். "அத்தகையோனை யழைத்து வருக" என்று அதிகாரி வாயசைத்தவுடனே கொள்ளிப்பேய்கள் போலக் கிளம்பி னர் பாரகர். யூதாஸ் எனும் சீடனை முப்பது வெள்ளி யீந்து வசப்படுத்தினர்.

ஐயன் அனைத்தையும் அறிந்தான்; தன் சீடருடன் இறுதியுண்டி இராவினிற் கொண்டான்; "அன்பர்களே! எனது உண்மைக்கு உயிர்தரும் காலம் வந்துவிட்டது! இதோ என்னைப்பிடித்துச் செல்லப் பாரகர் வருகுனர்; நம் முள் ஒருவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்; பாரகர் இவ் வுடலைச் சிலுவையிலிடுவர்; மூன்றுநாள் முன்போலெழுந்து எனது தந்தையிடம் செல்வேன்; காணீர்" என்றுரைத்து ஐயன் தியானத்தமர்ந்தான். "தந்தையே! இவ்வுடலும் உயிரும் உன்னதே; நினைப்பும் செயலும் நினதே; எய்தும் பயனெல்லாம் நினதே. இறைவா! என்னுள்ளும் புறமும் உயிர்க்குயிராய் உள்ளவா! உன்னிச்சையாகுக!" என்று இறைஞ்சுகையில் தடதடவென்று காவலாளருடன் பாரகர் நுழைந்து மேகப்படலம் போலச் சூழ்ந்தனர். யூதாஸ் தன்

குருவைத் தழுவிக்காட்டினன். உடனே பகைவர் ஐயனைப் பற்றிக் கட்டிச்சென்றனர். அப்போது சீமோன் எனும் சீடன் ஒரு பகைவனை வாளால் வீழ்த்தினன். இன்னொரு சீடன் வாளுருவினன். எம்பிரான் அவனைத்தடுத்து "அன்பனே! என் உண்மையை உண்மையாக்கும் காலம் உற்றது. எனது தந்தையின் கட்டளை இது. உண்மைக்காக என் குருதியைச் சிந்துகிறேன். தம்மைத்தாமறிந்த தூயவர் எதற்கும் அஞ்சிலர். உள்ளது ஆன்மா; உதிர்வது உடலே. சாவெனப்படுவது சட்டை மாற்றமே. ஒன்னாரிடும்பை உடலினுழமே. புன்னகையுடனே பொறுப்பதே வெற்றி" என்று அமைதிகூறி ஆண்டவனிச்சை யாகுகவென்று பகைவருடன் சென்றார். ஐயனைப் பகைவர் காபாமுன் நிறுத்தினர். புலிகளிடையே பொன்மான் போல ஏசுநாதர் பாதகப் பாரகரிடை நின்றார். அந்தப் பண்படா முரட்டுப் பாவிகள் ஐயனை ஏசினர்; கண்டபடி பேசினர்; அடித்தார், மிதித்தார், துப்பினர், கட்டினர், கொட்டினர்; கவர்னர் பிலாத்தின்முன் கொண்டு தள்ளினர். கவர்னர் மனைவிக்கு இம்மஹானின் பெருமை விளங்கியது. அதை நாதனிடம் சொன்னாள். பொந்தியோ, இதனால்வரும் பழி என்னதல்லவென்று பொறுப்பை உதறிக் கைகழுவி விட்டான். பச்சிளஞ் சேயைச் சுற்றும் படுகொலைப் பேய்கள் போன்று அருட்பெருமானை இருட்கொடியர் சுற்றி வளைத்துக் கொடுமை செய்ததை எண்ணும்போது மனம் வெடிக்கிறது! பெருத்த ஆரவாரத்துடன் தேவகுமாரனைப் புண்ணீர் பீறப் புடைத்து, முண்முடி சூட்டி, மூங்கிற்கோலீந்து, செவ்வுடை யுடுத்தி, துப்பித் தூற்றி, அப்பமாய் வீங்க அடித்து மிதித்துக் கல்வரியில் (calvary) சிலுவை யிட்டனர் கொடும்பாவிகள். நெற்றி, கை, கால்களில் ஆணி

யடித்துப் பாதகர், சித்திரவதை செய்து சிலுவையேற்றியும் பொறுமைப்பிரான், "செய்வதின்னதென் றறியார்; அவர் பிழை மன்னித்திடுக தந்தையே!" என்று பாவிகளுக்கும் பரிவுகாட்டி எதுவும் எதிர்பேசாதிருந்தார். "அப்பனே! உன் திருக்கரத்தில் என் ஆவியைக் கொடுத்தேன்" என்று ஏசு நாதர் ஆவியானார். அப்புண்ணிய உடலை அன்பர் மூன்று நாட்கள் பாறைப் பொந்தில் புதைத்து வைத்திருந்தனர். மூன்றும் நாள் கிறிஸ்து எழுந்து சீடர்க்குக் காட்சியீந்து, அடியாரை வாழ்த்தி அருட்பணி புரியக் கட்டளையிட்டு விண்ணேறி, மின்னென மறைந்தார். ஏசுநாதரின் அன்பும், தியாகமும் இன்று கோடிக்கணக்கான மக்களிடை வளர்ந்து அருஞ் செயல் புரிவதைக் காண்கிறோம். ஆனால் கிறிஸ்து தர்மம் வாதமிட்டுப் பிளவுபட்ட பல பல சர்ச்சு மதங்களாக மாறியு தொழிந்து, அன்பர் கூட்டம் திருவருளுறவில் ஒன்றுகூடி, வேற்றுமைகளை ஒழித்து, அமைதியும், அன்பும், அறமும் நிலவும் வானரசாட்சியை நாட்டுக நன்கு!

உள்ளத்தைப் பண்ப டுத்தி
யுண்மையை நட்டு ஞானத்
தெள்ளொளி பாய்ச்சி யன்புத்
திறமைய்யி னுரமிட் டாங்கு
கள்ளைக்கா மாதி வாராக்
கண்விழித் திருந்து காக்கின்
விள்ளருங் கடவு ளின்ப
வியன்கனி பழுக்கு மன்றே!

# 5. கிறிஸ்துமதத் தியாகிகள்

## பிரான்ஸிஸ் முனிவன் (1182-1226)

சுமார் 750 ஆண்டுகளுக்கு முன் இத்தாலியாவில், அஸ்ஸாஸி என்னும் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவனுக்கு பிரான்ஸிஸ் என்னும் ஒரு மைந்தன் இருந்தான். பிரான்ஸிஸ் திருவும் பொலிவும் நிறைந்தவன். அவன் தனது வாலிபத்தை இடம்பத்திலும், அற்ப இன்பங்களிலும், விளையாட்டுத்தனமாகப் போக்கினுன். தந்தையின் பணத்தைக் கண்டபடி வீணுக்கினுன். பெரிய இளவரசுகளைப்போல் இடம்பச் செலவு செய்தான். ஆனுல் கடவுள் தன்னை விளையாட்டிற்குப் படைக்கவில்லை என்றதை மட்டும் அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தது. ஒரு நாள் ஒரு விண்மொழி "பிரான்ஸிஸே! என் உன்னுடைய உயர்ந்த வாழ்வை விளையாட்டுத்தனமாக வீணுக்குகிறுய்? உலகிற்கு மேலான அறிவைத் தரவன்றே நீ யுதித்தாய்! விழி, எழு; உண்மையான கிறிஸ்தவ வாழ்வைக் கடைப் பிடித்தொழுகு!" என்று எழுந்தது. பிரான்ஸிஸ் தன் வீணுட்களுக்கு வருந்தினுன்; உயர்ந்த உடைகளினும் தூய அற வாழ்வே உயிருக்கணி; பொருளினும் அருளைப் பெருக்குவதே நிலையான களிப்பு; என்று அறிந்தான். அன்று முதல் மாசற்ற கிறிஸ்தவ வாழ்க்கையைக் கடைப்பிடித்தான். எளிய களுக்கு மனதாற ஈந்தான்; வெகுநாளாகப் பாழாய்க்கிடந்த

ஒரு கோயிலைப் புதுப்பிக்க வீட்டிலுள்ள பணத்தைச் செலவிட்டான். தன் குதிரையையும் விற்றுக் கோயிற் பணியிற் போட்டான். வணிகனான தகப்பனுக்கு இவற்றைக்கண்டு கடுஞ்சினமெழுந்தது. தன் மகனைப் பகைத்துப் பைத்திய மென்றும் எண்ணினான். தனது செல்வத்தை வாரி இறைத்துத் தனக்குப் பெரிய கேடு விளைவித்ததற்காக வெகுண்டு அவ்வூர்ப் பாதிரியிடம் முறையிட்டான். பாதிரியார் பிரான்ஸிஸை வினவிக் கண்டித்துத் தகப்பன் சொற்படி நடக்கும்படி வற்புறுத்தினார். பிரான்ஸிஸோ 'பெரியோய்! ஊனப்பன் என்னப்பனல்ல. எனது உயிரப்பன் கடவுள். என் உடலப்பன் கொடுத்த ஆடைகளெல்லாம் இதோ கழற்றி எறிகிறேன். எனக்கு இச்செல்வமும் வேண்டாம். அதன் கட்டும் வேண்டாம்' என்று அனைத்தையும் உடனே உதறி எறிந்து துறந்து, வெளியே கிளம்பினான். வறுமையும், வெறுமையும், அன்பும், தூய்மையும், அணிந்து நமது பிரான்ஸிஸ் ஒரு தனிக் காட்டிற்குச் சென்றான். அங்கு அவனது கட்டற்ற உள்ளத்திற் கவியூற்றெழுந்தது. தன் ஆவியின் அன்பைக் கவியாகக் கொட்டினான். அவன் மனத்தில் ஒரு இன்பக்கடல் பொங்கியது; புட்கள், விலங்குகள், பூச்சிகள் அனைத்தையும் "என துடன்பிறந்த செல்வர்களா! என்றழைத்து அருளன்பு பேணினான். கடவுளின் கைத்திறனைக் காட்டும் இவ்வழகிய உலகெலாம் தனது அன்புப்பெருக்கைப் பாய்ச்சினான். அனைத்திற்கும் இனியனானான்; எந்தப் பிராணிக்கும் தீங்கிழைப்பதை அஞ்சி வெறுத்தான். பணமும், இடம்பமும் அவனுக்கு அற்பமாகத் தோன்றின. எல்லாப் பொருள்களும் சகோதரர், கடவுளே தந்தை என்று நம்பிக் களித்தான். இயற்கையில் இறைவனைக் கண்டான்.

நமது பிரான்ஸிஸ் தான் முன்னே தொடங்கிய கோயிலைக் கட்டி முடிக்கவுறுதிகொண்டு ஒவ்வொரு கல்லாகக் கொண்டு சேர்த்தான். அவனுக்கு ஒருவரும் உதவிசெய்யவில்லை. அன்பே அவன்றுணை. கந்தையுடுத்திக் கல்பொறுக்கித்திரியும் பிரான்ஸிஸைக் கண்ட அனைவரும் பெரும் பைத்தியக்காரனென்றே எள்ளியிகழ்ந்தனர். முடிவில் நமது பிரான்ஸிஸ் தான் எண்ணிய கோயிலைக் கட்டியே தீர்த்தான். இதுகண்ட மாந்தர் வியப்புற்றனர். பிரான்ஸிஸின் அறிவும் துறவும் அன்பும் கண்ட மூன்று செல்வர் தமது பொருளுடன் அவன் சீடரானர். பிரான்ஸிஸ் ஒரு சங்கம் ஏற்படுத்தி, எளிய வாழ்வையும் பெருகிய நோக்கையும் புகட்டி ஐரோப்பாவிற்கு அரிய அறத்தொண்டியற்றினன். 'நாம் பரவங்களினின்று விடுபட்டுப் புனிதராக முடியும். கிறிஸ்துவைப்போல் ஆகமுடியும். அன்பைப்பெருக்குங்கள். கடவுளன்பையே எங்கும் பரப்புங்கள்' என்று பிரான்ஸிஸ் உபதேசித்தார். அவர் பிரான்ஸிற்குச் சென்று அங்குள்ள ஆரவாரப்புலவர்களைத் தனது இனியஅன்புமொழிகளால்வென்று தன் வழிப்படுத்தினர். கிறிஸ்துபக்தி மேலிட்ட பிரான்ஸிஸ் முனிவர் ஏசுநாதர் சிலுவையிற்பட்ட துயரைத் தனதாக வுணர்ந்து வருந்துவார். அப்போது அவருடலில் இரத்த வேர்வையரும்பும். எளிமை, வாய்மை, துறவு, தூய்மை இவற்றின் இலக்காக வாழ்ந்த இம்முனிவரை எண்ணிறந்த சீடர்கள் பின்பற்றினர். இன்றும் இவர் பெயரும், இவர் பெயரிய தான மதச்சங்கமும் வெண்ணாட்டில் சிறந்துவிளங்குகின்றன.

## கிறிஸ்தாபர் முனிவர்

ஒரு காலத்தில் ஆபரோ (Offero) என்ற ஒரு பலவீரன் இருந்தான். அவன் உருவிலும் வலுவிலும் மிக்கான். சீறு

வயது முதல் முரட்டு வேலைகளில் மகிழ்ச்சிகொண்டான். அச்சத்தை வெறுத்தான். எந்த விளையாட்டிலும், பந்தயத்திலும் முதலிலிருப்பான். ஆனால் அவற்றிலெல்லாம் அவன் மனம் களிப்படையவில்லை. அவனுள்ளேயிருந்து ஏதோ ஒரு சக்தி அவனை முன்னேயுந்தியது. தனது அங்கியையும், வாளையும் எடுத்துக் கிளம்பி ஒரு பெரிய மன்னன் மனைக்கு வந்தான். அந்த மன்னன் சாத்தானின் பேரைக் கேட்டால் நடுங்கித் தன்முகத்தில் சிலுவையடையாளஞ் செய்து கொள்வான். அவன் அஞ்சும் சாத்தானைத் துணிந்து எதிர்க்க வேண்டுமென் றுறுதிபூண்டு ஆபரோ சாத்தானுடைய தர்பாருக்கு வந்து "தாங்கள்தானா உலகில் அஞ்சாதவர்?" என்று சாத்தானைக் கேட்டான். அஞ்சாதவன் தானே என்றான் சாத்தான். ஒருநாள் இருவரும் வெளியே போய்க் கொண்டிருக்கையில் ஒரு மரச்சிலுவை தென்பட்டது. அதைக்கண்டு சாத்தான் அஞ்சி விலகினான். "தாங்கள் ஏன் ஒரு மரத்துண்டைக் கண்டு அஞ்சுகிறீர்கள்? இதுதானா தங்கள் வீரம்" என்று ஆபரோ கேட்டான். "நான் அந்தச் சிலுவைக்கு அஞ்சவில்லை. அதில் ஒரு காலத்தில் தொங்கினவனுக்கே அஞ்சுகிறேன்" என்றான் சாத்தான். அப்படியானால் அந்தச் சிலுவையிற் கிடந்தவனைக் காணச்செல்லுகிறேன்" என்றுசொல்லி ஆபரோ ஒரு முனிவரையடைந்து, அவரிடம் தன் வரலாற்றைச் சொன்னான். அம்முனிவர் ஏசுகிறிஸ்து நாதரின் திருவரலாற்றைச் சொன்னார். உடனே கிறிஸ்து நாதரின்மீது ஆபரோவுக்கு அளவற்ற அன்பு பிறந்தது. தனது வாளை வானளவுயர்த்தி "கிறிஸ்துவிற்கே இனி ஊழியம் செய்யப்போகிறேன்" என்று உறுதி கூறினான். அதற்கு அம்முனிவர் "கிறிஸ்து நாதர் வாள் கொண்டு

போர் செய்யச் சொல்லவேயில்லை. அன்பாலும், வழிபாட்டாலும், அருட்பணியாலும் தீமையை வெல்லச்சொல்லுகிறார்" என்றார். "அது நலந்தான். ஆனால் கடவுள் எனக்குத் தனிச வலுவைத் தந்திருப்பது அவருக்காகப் போர் செய்ய வன்றோ?" என்று கேட்டான் ஆபரோ. அதற்கு முனிவன் "பிறர்க்குதவவே ஆண்டவன் நமக்கு வலுவீந்தான். உன் உரனுக்கேற்ற ஒப்புரவைச் சொல்லுகிறேன்; வா" என்று அவனை ஒரு வேகமான ஆற்றிற்கு அழைத்துப் போய் "இந்த நதிக்கரையில் ஒரு குடிலமைத்து வசித்து வா. நதியைத்தாண்ட விரும்பும் ஏழை மக்களை உனது தோளில் ஏற்றித் தாண்டுவி" எனப்பணித்தார். ஆபரோ அப்படியே விருப்புடன் செய்துவந்தான்.

ஒரு நள்ளிரவில் ஆறு கடுமையான வேகத்துடன் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு ஏழைக்குழந்தை அந்நதியைக்கடக்கவேண்டுமென்றது. ஆபரோ உடனே அக்குழந்தையைத் தோளிற் சுமந்து நதியைக் கடக்கத் தொடங்கினான். அக்குழந்தை வரவர மிகவும் கனக்கத்தொடங்கி ஆபரோவைத் தளரவைத்தது. அக்கரை சென்றதும் குழந்தையைக் கீழிறக்கி, "குழந்தாய்! நீ பார்ப்பதற்கு இவ்வளவு சிறிதாயிருக்கிறாய். தூக்கினால் ஏன் இவ்வளவு கனக்கிறாய்?" என்று வியந்து வினவினான். "நான் கனமாகவேயிருக்கிறேன். ஏனெனில் நான் உலகிலுள்ள பாபங்களையும் துயர்களையும் சுமக்கிறேன். நான் தான் ஏசுகிறிஸ்து. நீ எளியவருக்கு அருட்பணி செய்ததனாலும், என்னைச் சுமந்ததாலும் உனது அன்பைமெச்சினேன். இன்றுமுதல் கிறிஸ்தாபர் (Christopher) என்ற திருப்பெயருடன் உலகில் விளங்குவாயாக," என்று சொல்லி அந்தத் தெய்வக் குழந்தை மறைந்

தது. கிறிஸ்தாபர் பேரின்பத்தில் மூழ்கித் தன் வாழ்வைப் பெரிய பொதுநலத்திற் கழித்து மறுவற்றவனானன்.

## உருசூலா

பிரித்தானியா மன்னனுக்கு உருசூலா ஒரே பெண் குழந்தை. உருசூலா, அன்புக் கடல். அழகிற்கு ரதி. தென்றல் போன்ற மென்மொழியுள்ளவள். அவள் அழகும், எழிலும், நடையும் உள்ளங் கவர்ந்தன. கானன் என்னும் பிரித்தானிய இளவரசு காதல் மிகுந்து அவள் கையை விரும்பினான். "உமது அரசினின்று எனக்குப் பத்து உத்தமிகளைத் தரவேண்டும்; ஒவ்வொருத்தியும் பதினாயிரம் சேடிகளுடன் என்னிடம் மூன்று ஆண்டுகள் இருக்கவேண்டும்; அப்படியானால் உம்மை விரும்புவேன்" என்றாள் உருசூலா. உருசூலாவின் மனப்படியே பெண்கள் தரப்பட்டனர். எல்லாப் பெண்களுக்கும் உருசூலா நன்னெறியைப் புகட்டினாள்; தன்னை விரும்பிய இளவரசனையும் பைபிளில் மனஞ் செலுத்தத் தூண்டித் தனது அன்பர் குழாத்துடன் பிறநாடுகளுக்குப் புறப்பட்டாள். கானன் இளவரசும் துறவுபூண்டு பல துறவிகளுடன் அவளோடு நன்னெறியிற் காலங் கழித்தான். உரோமாபுரியிலுள்ள போப்பும் அவளைப் பின்பற்றினான். போனவிடமெல்லாம் ஏசுநாதரின் அன்பு நெறியைப் பரப்பிக் கொண்டே உருசூலா நாடுதோறும் சுற்றினாள். தான் கானனோடு மணவாழ்க்கையில் சிற்றின்புறுவதினும் கடவுளால் தனக்களிக்கப்பட்ட பெருங்கடமை ஒன்றுள்ளதென்று உருசூலா எண்ணிப் பணிசெய்தாள்.

இப்படிப் போகும்போது ஓரிடத்தில் தங்கள் மன்னனால் ஏவப்பட்டு, சில கொடியர் உருசூலாவின் அன்பர்கணத்

தைத் தாக்கிக் கொன்றனர்; கானனும் கொல்லப்பட்டான். ஆனால் கொலையாளிகள் உருசூலாவின் அன்பிலும் அழகிலும் மயங்கி அவளைக் கொல்லக் கையெழாது அவ்வூர் மன்னன் முன் அழைத்து வந்தனர். மன்னன் அவளைத் தன் காதலுக்கு இணங்கும்படி வேண்டினான். "நீ ஒரு பெரிய கொலைக்காரன். ஆண்டவன் அன்பரை ஆயிரக்கணக்காய்க் கொன்றாய். அன்பரின் இரத்தத்தில் தோய்ந்த உனது பாவமான கையை நான் பற்றமுடியாது. வேண்டுமானால் நானும் உனது வாளிற்கு இரையாகிறேன்" என்று துணிந்து கூறினாள். தன்னைக் கண்டித்துப் பேசிய உருசூலாவை அக்கொடிய மன்னன் கணையாற் கொன்றான். தன் மதத்திற்காகவும் கடவுளுக்காகவும் உருசூலா புன்னகையுடன் உயிரைக் கொடுத்தாள்.

## காதரைன்

நான்காவது நூற்றாண்டில் காதரைன் என்பவள் அலெக்சாந்திரியாவில் ஒரு உண்மையான கிறிஸ்து பக்தையாக விளங்கினாள். அவள் எகிப்திலுள்ள பெண்களனைவரினும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்தவள். அப்போது அவளைச் சுற்றியிருந்த மாந்தரெல்லாம் கிறிஸ்தவரல்லாதார். அவ்வூருக்கு அரசன் மாக்ஸிமினியஸ் (Maximinieus) என்பான். தான் வழிபடும் ஒரு விக்கிரகத்திற்கு ஏழைகளையும் அடிமைகளையும் பலிகொடுத்து வந்தான். இக்கொடுமை காதரைனுக்குப் பொறுக்கவில்லை. அவள் அரசன் முன்னே துணிந்து சென்று, "மன்ன! ஆண்டவன் அன்பில் ஆருயிர் பிறந்தது. தகப்பனுக்கோ பிள்ளைகளைப் பலியிடுவது? இதைக் கடவுள் தாங்கமாட்டார். இது கொடுமை. இந்த

நிறுத்துக". என்று நீதியுரைத்து வாதாடினாள். தான், அவளை வாதில் வெல்லமுடியவில்லை; கற்றறிஞரைக்கொண்டு அரசன் வாதாடினான். அவர்களையும் காதரைன் வென்றாள். பலர் அவளை வியந்து கிறிஸ்தவரானார். அரசனுக்குக் கோபக்கனல் எழுந்தது. அவளை இரண்டு சக்கரங்களுக்கு இடையே கொடுத்துச் சித்திரவதை செய்யும்படி அரசன் கட்டளையிட்டான். சக்கரத்திற் கட்டிச் சுழற்றும்போது ஒரு தேவதூதன் தோன்றி சக்கரத்தைத் தகர்த்தான்; அவளைத் துன்புறுத்திய பலரையும் தண்டித்தான். இதைக் கண்ட மக்கள் ஆண்டவன் அருளை வியந்தனர். ஆனால் மன்னன் இதைக்கேட்டு இன்னும் ஆத்திரம் பொங்கி, எப்படியாவது காதரைனைக் கொல்லத் துணிந்து, அவளைச் சவுக்கால் அடித்தான்; இருட்டறையில் அடைத்தான்; பன்னிரு நாட்கள் பட்டினி போட்டான். காதரைன் தனது துயரையெல்லாம் கடவுள் பெயரால் பொறுத்தாள். அவள் புண்களை ஒரு தேவதூதன் ஆற்றினான். ஒரு புறு அவளுக்கு நாடோறும் உணவு கொண்டுவந்து கொடுத்தது. இன்னும் காதரைன் களிப்போடிருப்பதைக்கண்ட மன்னன் முடிவில் அவளைத் தன் உடைவாளுக்கிரையாக்கினான். தனது சமயத்திற்காகக் காதரைன் உயிர்கொடுத்தாள். அவள்மீது இரக்கமும் அன்பும் மேலிட்டுப் பலர் அவள் கொள்கைகளைப் பின்பற்றினார்.

## பெனிதிக்து முனிவன்

பெனிதிக்து என்பவன் இத்தலியில் ஒரு செல்வனின் செல்லப் பிள்ளை. அவன் அழகும், அறிவும், அன்பும் மிக்கவன். பெற்றோர்கள் தமது அருமை மகன் ஒரு நீதிபதியாக வேண்டுமென விரும்பி, சட்டப் படிப்பிற்காக உரோமா

புரிக்கு அனுப்பினர். எளிய பழக்கங்களில் கருத்துள்ள பெனிதிக்துக்கு உரோமாபுரியின் ஆரவாரம் பிடிக்கவில்லை. இடம்பமும், பகட்டும், வம்பும், வீணும் நிறைந்த நகர வாழ்வை அவன் வெறுத்தான். சட்டங்களைப்பற்றி நினைப்பதற்குப் பதிலாக நகர வாழ்வின் தீமைகளையே எண்ணி வருந்தினன். உரோமாபுரியில் தான்கண்ட கொடுமைகளைத் தாங்காது பெனிதிக்து அனைத்தையுந் துறந்து ஒரு மலைக்கு ஓடித் தனியே கடவுளை வழிபட்டுக்கொண்டிருந்தான். அவனை வளர்த்த வயது சென்ற தாதி அவனை உடனிருந்து பாதுகாத்தாள். தனக்காக அக்கிழவி சமைத்துப் போட்டுப் பணிவிடை செய்வதை எண்ணி இரங்கி மனம் பொறுது பெனிதிக்து அவளுறவையுந் துறந்து மலைநடுவே ஒரு குகையில் தன்னந்தனியே யமர்ந்தான். இப்படியிருந்தும் அவனுடைய ஆசை யடங்கவில்லை. மறுபடியும் ரோமுக்குப் போகவேண்டுமென்ற அவா வுண்டானது. அந்த ஆசையைப் போக்க பெனிதிக்து ஒரு முட்புதரிற் படுத்துத் தன்னை தண்டித்துக் கொண்டான்.

இப்படி பெனிதிக்து தனியாக மலைக்குகையில் வழிபட்டும் ஜனங்களுக்கு எப்படியோ இவனுடைய பெருமை வெளிப்பட்டது. நூற்றுக்கணக்கானவர் அக்குகையில் அவனைப் பார்க்க வந்தனர். அவனுடைய உபதேசங்களைப் பெரிய ரிஷிகளும் பின்பற்றி நடந்தனர். சில துறவிகள் அவனைத் தங்கள் தலைவனயிருக்கும்படி வேண்டினர். பெனிதிக்து இவ் வேண்டுகோளுக்கு இணங்கினன். அத் துறவிகளின் வாழ்வைத் திருத்தக் கடுமையான ஒழுக்கங்களை விதித்தான். இதைப் பொறுக்காது சிலர் பெனிதிக்தைக் கொல்லத் தண்ணீரில் நஞ்சுகலந்துகொடுத்தனர். அதைக் குடிக்குமுன் அவன்

பன் சிலுவையடையாளஞ் செய்தான். உடனே அவ்விஷக் கோப்பை கீழே விழுந்து உடைந்தது. துறவிகளின் மோசத்தை யறிந்த பெரியோன் இனி இவர் கூட்டம் வேண்டா மென்று பழையபடிக்கே தனது தனிக்குகைக்குச் சென்றான். அங்கு பல துறவிகள் அவன் வகுத்த நெறிப்படி "வறுமை, தூய்மை, பணிவு" மூன்றையுங் கடைப்பிடித்தொழுகினர். தங்கள் கைகளால் உழைத்தே தேவைகளை அடைந்தனர்; ஏழைகளுக்கு வேண்டிய உதவி செய்தனர். ஒரு நாள் காயலாயிருந்த ஒரு ஏழைக்குச் சிகிச்சை செய்யும் போது பெனிதிக்துக்கும் கடுமையான சுரங்கண்டது. தன்னை ஒரு கோயிலுக்குள் கொண்டுபோகச் சொன்னான். கடவுட் சந்நிதியில் கடவுட்சிந்தையுடன் அவனாவி கடவுளடி சேர்ந்தது.

## கிறிஸ்பன் முனிவர்

இத்தாலியாவில் சாயிஸன்ஸ் என்ற ஊரில் கிறிஸ்பின், கிறிஸ்பினியன் என்ற இரண்டு உத்தமர் இருந்தனர். அவர்கள் கிறிஸ்துபக்தி மீகுந்து, அனைத்தையுந் துறந்தனர். ஆனால் அவர்கள் தமது உணவிற்காக ஒருவரையும் இரக்க விரும்பவில்லை. செருப்புத் தைக்கும் தொழிலால் இருவரும் ஜீவித்தனர். பணக்காரரிடமே அவர்கள் கூலி வாங்குவார்கள். ஏழைகளுக்கு இனமாக வேலை செய்வார்கள். தங்கள் வேலையூடு வந்தவர்களுக்கெல்லாம் கிறிஸ்து தர்மத்தைப் புகட்டுவர். அவர்களிடம் பலர் அன்பு பூண்டு திருந்திக் கிறிஸ்தவராயினர். அவர்களுடைய புகழ் எங்கும் பரவியது. ஆனால் அவ்வூரை ஆண்ட நாஸ்திக அரசன் வெகுண்டு அவர்களைப் பிடித்துச் சித்திரவதை செய்தான். அவ்வன்பர்கள் தங்கள் ஆவியை மதத்திற்காகவே உறுதியுடன் ஈந்தனர்.

## நிக்கலாய் முனிவன்

ஒரு ஊரில் இரக்கமும், அன்புமே உருவான ஒரு சிறுவன் இருந்தான். அவனது தந்தை தக்க செல்வன். நிக்கலாய் என்ற பெயருடைய அப்பையன் பரிவுடன் உதவவே கடவுள் பணத்தைக் கொடுத்தார் என்று நம்பினான்.

நிக்கலாய் ஒருநாள் தெருவழியே போம்போது ஒரு வீட்டில் பசிவருந்தும் ஏழைகளைக் கண்டான். தான், மறைந்து நின்று அவர்கள் பேசுவதை உற்றுக்கேட்டான். அவ் வீட்டிலுள்ள பெண்டிரும் பிள்ளைகளும் பட்டினியால் துடித்துக் கொண்டிருந்தனர். ஒரு மகள் 'தந்தையே! இன்றாயினும் நாம் தெருவில் போய் பிச்சையெடுத்துண்போம். இல்லேல் இன்று இறந்துபோவோம்' என்றாள். தகப்பனோ 'இன்னும் பொறுப்போம். நம்மைத் தாங்குவது கடவுளின் பாரமன்றோ? இன்றிரவாயினும் அவனருள் வராதா என்று பார்ப்போம். எனது மக்களைக் காப்பாற்ற மீண்டும் கடவுளிடம் முறையிடுகிறேன். எங்களை ஐயம்புகும் இழிவினின்று தடுக்கும்படி அவனை வேண்டுகிறேன்' என்று வழிபட்டான்.

இதைக் கேட்டு மனமிரங்கி நிக்கலாய் வீடு சென்று மூன்று தங்கக் கம்பிகள் இருப்பதைப் பார்த்தான். உடனே ஒரு கம்பியை அன்றிரவே கொணர்ந்து அந்த ஏழையின் வீட்டுச் சாளரவழியாக ஓசைப்படாது போட்டுப்போனான். அதைக் கொண்டு அவ்வேழை பிழைத்தான். மறுநாள் இரவும் நிக்கலாய் இன்னொரு தங்கக் கம்பியை இரகசியமாகப் போட்டான். மூன்றாவது நாளில் தங்கக் கம்பியைப்போடப் போகும்போது அந்த ஏழை நிக்கலாயைப் பார்த்துவிட்டான். உடனே தன் பூசிப்பிணியை அவ்வளவு இரக்கத்

துடன் தீர்த்த அன்பனைக் கும்பிட்டு வாழ்த்தினன். நிக்கலாய் "கடவுளுக்கு வந்தனை செய்யுங்கள். அவனே என்னை உங்களிடம் அனுப்பினன். அவனே என்மனதில் இரக்கத்தையும் அன்பையும் பெருக்கினன்" என்றன். இம்மாதிரி பலதடவை நிக்கலாய் விளம்பரமின்றி அன்பு புரிந்தான். அவன் அன்பின் பெருமையை வியந்தே இன்னும் உலகு அவனை நிக்கலாய் முனிவனெனப் போற்றி வணங்குகிறது.

## அகாதா என்னும் பெண்மணி

ஸிஸிலித்தீவில் அகாதா என்னும் தூய பெண்மணி இருந்தாள். ஏசுநாதரிடம் உறுதியான அன்புள்ள அகாதா, உடல் பொருளாவியை யெல்லாம் தேவகுமாரன் பணிக்கே அர்ப்பணித்தாள். அவளை அத்தீவின் தலைவன் விரும்பினன். அவனுக்கு மதவுணர்ச்சியே கிடையாது. அகாதா பெருமையும் அன்பும் வாய்ந்தவளாதலின் அந்த நாத்திகனை விரும்பாது ஓடிவிட்டாள். அகாதா கிறிஸ்து பக்தை எனத்தெரிந்ததும் அத்தலைவன் அவளைப்பிடித்துத் தன்னெதிரே கொணர்வித்துப் பல துயரிழைத்தான். கொள்கையை விட்டுவிடும்படி வற்புறுத்தினன். அகாதா கடவுளையே இன்னும் உறுதியாக வழிபட்டாள். குவிண்டியானன் என்ற அத்தலைவன் அவளைச் சிறையிலிட்டான். தசை பிதிர்ந்து வரும்படி கயிற்றுற் கட்டி இறுக்கினன். இன்னும் அகாதா தன் கிறிஸ்தவ வழிபாட்டை விடாதாற்றினள். பிறகு அப்பாதகன் தனது வாளால் அவளை வெட்டிக் காயப்படுத்தி இருட்சிறையில் எறிந்தான். அகாதா தன் துயரைப் பொறுத்துக் கடவுளையே வழுத்தித் தன் ஆவியை அவனடியில் சேர்ப்பித்தாள். கடவுளுறுதியைக் கைவாள் சிதைக்குமா?

## சேஸிலியா

ஒரு காலத்தில் ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் மிகவும் கொடுமையாகக் கொல்லப்பட்டனர். அப்போது வலேரியன் என்ற ஒரு வீரன் செஸிலியா என்ற ஒருபெண்ணை மணந் தான். செஸிலியா கிறிஸ்தவ மதத்தினள் என்று தெரிந்ததும்,வலேரியன் தன் மணத்திற்காக மிகவருந்தி அவள் மேல் வெகுண்டான். "நான் உனது மனைவி. ஆனால் நான் ஏசு நாதரின் உடைமை. எனது வாழ்வை அவருக்கே ஈந்துள் ளேன். நீ ஒறுப்பாயானல் தேவதூதன் என்னைக் காப் பாற்றுவான்" என்று செஸிலியா கூறினள். அவள் துணிவைக்கண்ட கணவன், "உனது தேவதூதனைக்காண்பி" என்றான். "உன் மனத்தில் கடவுளன்பு எழுந்தால் அவனைக்காணலாம்" என்றாள் செஸிலியா. "கடவுளன்பு பிறக்கும்படி செய்வாயாக" என்றான் கணவன். செஸிலியா தன் கணவனை அருவன் என்ற ஒரு முனிவனிடம் அழைத்துச் சென்றாள். அம்முனிவன் திருக்குமரன் பெருமையையும் மனிதக் குழந்தைகளுக்குக் கடவுளே தந்தையெனவும் எடுத்துரைத்து வலேரியனை அறிவுநீ ராட்டினன். வலேரியன் சகோதரருடன் அன்பணுகி இன்புற்றான். அனைவரும் அரிய ஆருயிர்ப் பணிபுரிந்தனர். செஸிலியா இன்பமாக ஆண்டவன் புகழைப் பாடக் கேட்டோர் அன்பினல் உருகினர்.

குடும்பத்தோடு கிறிஸ்தவரான அன்பரை வெகுண்டு, உரோமாபுரித் தலைவன் தன்முன் விசாரித்தான். தங்கள் மதத்தில் வைர வுறுதியோடிருக்கக் கண்டு இவர்களைத் தலைவன் கொன்றான். செஸிலியா மட்டும் மிகவும் தைரியத்துடன் தலைவனுடைய குற்றத்தையும், கொடுமையையும், நாத்திகப் பாழையும் எதிர்த்து நின்றாள். "நீ எத்தகைய

பெண்? உனது பெயரென்ன?" என்று தலைவன் கேட்டான். "நான் உரோமநாட்டுப் பெண். மனிதர் என்னை செஸிலியா என்பர். ஆனால் என் பெயர் கிறிஸ்தவள்" என்று தைரியமாகச் சொன்னாள் செஸிலியா. தலைவன் அவளைக் கொதிக்கும் தண்ணீரில் அமிழ்த்தி, வேகவைத்து வெட்டிக் கொன்றான். செஸிலியா கடவுளைப் பாடிக்கொண்டே தன் இடர்களைத் தாங்கினாள்; தனது பொருள்களையெல்லாம் ஏழைகளுக்கீந்தே உயிர்நீத்தாள். இப்படி மதத்திற்காக எண்ணிறந்த அன்பர் களிப்புடன் உயிர்நீத்ததன் வரலாற்றை எம்மதத்திலும் காண்கின்றோம். இவ்வன்பர்கள் தமது கருத்தைக் கடவுளிடமும், கையை அவன் பணியிலும் வைத்து உடலை மறந்து தொண்டு செய்தனர்.

மடமைச் செருக்காற் கொடுமை செய்தோர் மண்ணாயினர். அன்பர் பெயர் என்றும் நின்று நிலவுகிறது.

# 6. முகம்மது நபி

(571-632)

மோசேயும், ஏசா இஸ்லாமும் விளங்கிய அரபி நாட்டை மீண்டும் இருட்படலங்கள் கவர்ந்தன; ஆசையாணவப்பேய்கள் மீண்டும் மாந்தர் வாழ்வைச் சிதைக்கலாயின. பொய், கொலை, நிறைமுறைகெட்ட களவொழுக்கம், நரபலி, பல சாமிச்சச்சரவு முதலிய புல்லுருவிகள் மாந்தர் வாழ்விற் படர்ந்தன. "ஆண்டவன் தந்தை; மாந்தர் மைந்தர்; அனை

வர்க்கும் அன்பு பேணுக" என்ற ஏசுநாதர் மொழிகளை மறந்தனர். நாட்டின் நிலைமை மற்ருெரு அருட்புலவனைக் கூவியழைத்தது. ஆண்டவன் நபிமணியை உலகிற்கனுப்பினன். கடவுளருளின் வெற்றி விளக்கான மாசற்ற முகம்மது நபிமணி, ஹிஜாஸில், குரைஷியர் வகுப்பிற் பிறந்தார். குரைஷியரில் முதன்மை பெற்ற முத்தலீப்பின் மைந்தன் அப்துல்லாவே நபியின் தந்தை; தாய் மாசற்ற அமீனு; அமீனு வயாவுற்றிருக்கும்போதே அப்துல்லா விண்ணண்டந்தார். ஆறு வயதுப் பிள்ளையைவிட்டுத் தாயும் வான் சென்ருள். பெட்புடன் போற்றும் பெற்ருேரையிழந்த முகம்மது முதலில் பாட்டனிடமும் பிறகு மாமன் அபூதாலியிடமும் வளர்ந்தான். அபூதாலி வியாபாரி. அவன் ஒட்டகங்களை முகம்மது மேய்த்துவந்தான்.

முகம்மதின் உள்ளம் இயல்பாகவே ஆண்டவனன்பிற் பதிந்திருந்தது. சுற்றிலும் விரிந்தவான், செங்கதிர், பரந்தவெளி, நிவந்தமலைகளில் ஆண்டவன் அருட்பெருமையைக் கண் டுருகிநிற்பான்; வாணிபத்திற்காக ஷாம், சிரியா முதலிய விடங்களுக்கு அடிக்கடி செல்லும்போது உலகியல்பையும், மாந்தர் சீர்கேட்டையுங் கண்டு, "ஆண்டவனே! அனைத்துயிர்க்கும் அப்பனே! உனது உலகச்சேய்கள் உன்னை மறந்து, பழிபாவ வினையிருளில் அழிவதேனே! அறக்கோட்டை இடிந்தது; அரிவையர் பெருமை அழிந்தது. எல்லாம்வல்ல கடவுளே! நின்னை மறந்து கற்களை வணங்குகின்றனர். வறுமை, மடமை, இருளடிமையால் மாந்தர், இருந்தும் இறந்தவர்போல ஏக்கம்பிடித் தலைகின்றனர். ஐயனே! இவர்கள் திருந்தி இன்புற ஒரு வழி காட்டு; உன்னருட் கதவைத் திற!" என்று கசிந்துருகுவான்.

25 வயதுடைய இந்த அதிசய வாலிபனின் கட்டழகும், கருணையுள்ளமும், உண்மையுரையும், மாசறு நடையும், வினைத்திறனும், கடவுளன்பும் கதிஜா எனும் செல்வியின் மனத்தைக் கவர்ந்தன. தூயநடையும், இளமை மாறாத இனிய தோற்றமும், அன்பும் பொருந்திய கதிஜா தனது வாணிபப் பொறுப்பை முகம்மதுவிற்கு ஈந்தாள். அதன்பின் தனது உள்ளத்தையும் உயிரன்பையும் ஈந்து முகம்மதுவைத் திருமணம் புரிந்தாள். இருவரும் மனமொத்து மறுவற்று இயற்றிய இல்லறம் பத்திமா என்னும் செல்வியை ஈன்றது. அபூதாலியின் மகன் அன்பிற் சிறந்த ஆலி பத்திமாவை மணந்தான்.

தலைக்குட நங்கைபோலும், தண்ணுளே ஆமைபோலும், கழைக்குடக் கூத்தன்போலும் முகம்மது உலகவாழ்விலிருந்தும் மனத்தை ஆண்டவன் திருவடியிலேயே வைத்திருப்பான். தாரத்தோடிருக்கும்போதும் தயாபரனோடிருப்பான். நீரிற் படகுபோல ஒட்டாது உலகில் வாழ்ந்தான்; அடிக்கடி ஹிராக் குகைக்குச் சென்று கடவுட் காதலில் அழுந்தித் தனித்து உடலையும்; உலகையும் மறந்திருப்பான். வருந்தும் உலகிற்கு மருந்து தேடி இரவுபகலின்றி ஆண்டவனிடம் முறையிடுவான்! இந்த ஆர்வங் கொழுந்தேறியதைக்கண்ட கதிஜா வாணிபப் பொறுப்பினின்று கணவனை விடுவித்தாள். நபிமணி கடவுளன்புடன் ஆருயிரன்பு வெள்ளமும் பெருகி, வறியோர்க்கும், திக்கற்றவர்களுக்கும், கதியற்ற கைம்பெண்களுக்கும் நற்றுணைபுரிந்து அல் அமீன் என்று அனைவரானும் கொண்டாடப்பெற்றான்.

ஒருநாள் முகம்மது ஹிரா மலைக்குகையில் தியானஞ் செய்து ஆண்டவன் அருளைவேண்டிக் கதறினார்:—“ தந்

தையே! உனதடியே தஞ்சம்; நீயே சிந்தை; அயுலறியேன்; மன்மலர்ந்து இரக்கங்கொண்டருள்! பெருமானே! உனது மானிலச்சேய் இருள்வஞ்சக் கானகத்தில் அழுங்குகின்றதே! எங்கும் களவும், பொருமையும், காமவெறியும், போலி வணக்கங்களும், பொய்நடையும் இரத்த வெறியெடுத்தலேகின்றனவே! ஆண்டவனே! உலகுயிர்கள் ஒரு குலமாய் வாழவேண்டும்; பல ஜாதிச் சச்சரவு ஒழியவேண்டும்; செருக்கும், இறுமாப்பும், விலே, புலே, கொலே வாழ்வும் நலியவேண்டும். உன்னருளும், பெருமையும், உண்மையும், அமைதியும் எங்கும் நிலவ வேண்டும்; அருள்புரிக தந்தையே!"

இந்த முறையீட்டை ஆண்டவன் கேட்டுத் தனது தேவதூதனே அனுப்பினன்; ஒளிப்பிழம்பாக தேவதூதன் முன்னின்று, "முகம்மது! ஆண்டவன் உனது முறைக்கு அருள்புரிந்தார்; இதோ அவரது அருள்மொழி" என்று காட்டினன். "யான் எழுத்தறியேன்!" என்ருன் அருட்புலவன். "அல்லாஹு அக்பர்! முகம்மது! இன்று நீ நபிமணியாயினே; ஆண்டவன் அருள் உன் உள்ளத்தில் விளங்கும்; உன்னுள் தீனுலிஸ்லாம் உதிக்கும். அன்பும், அறமும், அமைதியும், ஈகையும், நோன்பும், தொழுகையும், இன்பமும் பெருக உலகிற்கு அந்த அருள்மொழிகளே வழங்குவாயாக!" என்று தூதன் மறைந்தான். தன்னுள் அருட்சக்தி இறங்கிற்று; மெய் சிலிர்த்தது; புத்துணர்வெய்தியது; இன்பம் துளிர்த்தது. கதிஜாவிடம் நடந்ததை யுரைத்தான் நபிமணி. "ஆண்டவன் அருள் உம்முள் இறங்கப் பெற்றீர்! உலகை உய்விக்க எழுந்த நபியாயினீர்" என்று கதிஜா போற்றி செய்தாள்.

நபிமணி தன்னுள் அரும்பிய அருளுண்மைகளை மாந்தர் மனவிருள் மாறும்படி அள்ளிக் கொடுத்தான். கதிஜா, ஆலி, அபுபக்கர், உமர், உஸ்மான், அமிஜா முதலியோர் அன்புறுதி வாய்ந்த சீடரானார். அன்பர் அத்திருமொழிகளைத் தொகுத்தெழுதி எங்கும் பரப்பினர். அறிந்த நல்லோர் ஆண்டவன் தூதன், நபிமணி எனப் போற்றினர். அறியா முரட்டுக் குரைஷியர் சாத்தான் கைப்பாவையாகி, நபிமணியைக் கண்டபடி தூற்றினர்.

"அல்லா பெரியோன்; எல்லாம் வல்லான்; அவன் அறிவொளி; அருளூற்று; அவனருள்விரிவே ஆருலகெல்லாம்; அவனை யடைமின்; அவன் பணியாகவே யனைத்தும் புரிமின்; புலனடக்குமின்; பொறுமை பூணுமின்; உயிர்களுக்கிரங்குமின்; பிறமதத்தோரைக் குறைபடப்பேசேல்; பசிக்கொருதொழிலும் பரனிடம் உள்ளமுங்கொண்மின்; இடம்பம், வஞ்சம், இடும்பை, காமவெறி, சினம், அகந்தையின்றி எளிமையும், ஈகையுந், தொழுகையும், தூய்மையும், வாய்மையும், வழுவாவுறுதியுங் கொண்டு வாழுமின்" என்பது நபிமணி வாசகம். அன்பர் இவற்றைப் பின்பற்றி நலமெய்தினர். குரைஷியர் கொடுமையிழைத்தனர்; உயிருக்கும் உலை வைத்தனர். பிறந்தவூர் நபிக்குப் பெருமை மறுத்தது. இவர்கள் தொல்லையின்றி அபிஸீனிய மன்னன் நெகசன் ஆதரவிற் சிலகாலம் நபிநாயகம் சீடருடனமர்ந்து தொழுகை நடத்தினர். நெகசன் அன்பைக்கலைக்கப் பகைவர் முயன்றும் முடிந்திலர். இச்சமயம் தனக்கு வலக்கரம் போன்ற கதிஜாவும் அபூதாலியும் விண்ணடைந்தனர். காப்பிரியர் கொடுமை வலுத்தது. பொறுமைக்கணிகலமான முகம்மதுநபி தாயிபு சென்றார். கன்மனப்பகைவர் கல்லால்

அடித்தனர். புனிதத்திருமேனி புண்ணீரொழுகியது. கற்களையும் மலரெனக்கருதி தன் அருளுரையை அமைதியுடன் பொழிந்துவந்தார் ரஸூல்ஸல்லம். ஹஜ்ஜுயாத்திரைக்கு வருபவர் இம்மொழிகளைக்கேட்டு நல்வழிப்பட்டு நன்மாணுக்கராயினர். "இயற்கையிற் காணீர் இறைவன் பெருமை—புவியெலாம் இறைவன் பொலிவது காணீர்; கடலிற் கருணையை, சுடரிற் சோதியை, வானில் விரிவை, மழையிற் கொடையை, மலரில் முறுவலை, மதியில் அமைதியைக் காணீர்!' அவனடியடைமின், ஐந்தையடக்குமின், ஐம்பிழை தவிர்மின்" என்று நபி பெருமான் அன்பர்க்கு இன்னுரை மொழிவான். இந்த அறிவு முத்துக்களின் விலையறியாத காப்பிரியர் மென்மேலும் பழித்துக் கேடுசூழ்ந்து இந்த அருளாளன் ஆவியை வாங்கவே முயன்றனர்.

நபிமணி அமைதியாக அருட்பணி புரிய அன்பர் வாழும் மதீனத்திற்குப் புறப்பட்டார். கண்ணற்ற கல்மனப் பகைவரும் பின்தொடர்ந்து பொன்னன மேனி புண்ணுகக் கல்லை வீசினர்; இரத்தத் துளிகள் மண்மீது சொட்டச் சொட்ட ஓடி முகம்மதுஸல்லம் அபுபக்கர் எனும் பேரன்பனுடன், "தௌரி"யில் ஒளிந்தார். அங்கும் பகைவர் ஆத்திரக் கூக்குரலுடன் தேடிவந்தனர். அப்போது அபுபக்கர், "ஆ! ரஸூல்! கடுங்கொலைக் காப்பிரியர் தேடிவருகின்றனரே; தனித்த நாமிருவர் என்செய்வோம்?" என்று முறையிட்டார். முஸ்தபா முகம்மதுஸல்லம் அமைதிப் புன்னகையுடன், "அன்பனே! நாம் தனியரல்லோம்; யாவும் வல்ல ஆண்டவன் நம்மை நீங்காதுள்ளான்; அஞ்சேல்" என்று துணிவுறுத்தினர். குகையைப் பகைவர் அண்டினர்; ஆண்டவன் அருள் அன்பரைக் காத்தது; மூன்று சிலந்தி வலைகள் பிரியா

திருந்தன. "இங்கே ஆள் நுழைந்திருக்கமாட்டான்" என்று சொல்லிப் பகைவர் திரும்பிப் போயினர்.

மூன்றுநாட் சென்று நபிநாயகம் மதீனத்தையடைந்தார். அத்துடன் ஹிஜ்ரி ஆண்டு தொடங்கியது. ஆண்டவன் அருளுண்மை வென்றது. யாத்திரேப்பர் (மதீனத்தார்) ரஸூல்ஸல்லத்தைப் பேரன்புடன் வரவேற்றுப் போற்றி வணங்கினர். அங்கு ஒரு பள்ளிவாசலைக் கட்டி முகம்மதுநபி இஸ்லாமியக் குடியரசை நாட்டினர். உள்ளத்தூய்மையும், உண்மையொழுக்கமும், கடவுளுறுதியும், அன்பும், ஈகையும், இரக்கமும், அருட்பணியுங்கொண்ட நன்னெறியில் அன்பரை பயிற்றியுய்வித்தார்; அகதிகட்கு அன்னைபோல் உதவினர்; எளியவர்க்கு வலிய துணையானர். இவ்வாறு அனைவர் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் உயிராயிருந்த நபிபெருமானைச்சுற்றி ஒருவலிய அறப்படைசேர்ந்தது. அதைக்கொண்டு நபிநாயகம் வஞ்சப் பகைவரை ஒடுக்கினர்; மக்கத்தைப் பொருதினர். பதுர் எனுமிடத்தில் பெரும் பகைவர் சூழ்ந்தனர். அப்போது இடியும் புயலும் எழுந்தது; பகைவர் சிதைந்தோடினர். மக்கம் நபியின் வசப்பட்டது. அருட்பெருமான் பகைவரை மன்னித்தார்.

இப்போரில் ஆண்டவனின் தோன்றாத்துணை நன்கு புலனானது. ஒரு போரில் அலியின் மார்பில் அம்பு பாய்ந்தது. அதை எடுக்க முடியாது முகம்மதிடம் அன்பர் முறையிட்டனர். "மாலை நிமாஸ் செய்யுங்காலத்தில் மெய்மறந்திருப்பான்; அப்போது அதை வெளியேற்றுங்கள்" என்றார் முகம்மது. அப்படியே அலி மெய்மறந்து தொழும்போது வலியின்றி அம்பு வெளியேற்றப்பட்டது.

ஆண்டவன் அருளிச்சையால் நபிமணிக்கு எங்கும் வெற்றி எய்தியது. சீடர் நாற்புறமும் இஸ்லாமியக் கொடியை நாட்டினர்; திருக்குரானின் தேன்மொழிகளைப் பரப்பினர். வந்த பணி நிறைவேறியது. முஸ்தபா முகம்மது ஸல்லம் ஹஜ்ஜு மாதத்தில் அரபாத்து மைதானத்தில் கஸ்வா என்னும் தனது ஒட்டகைமீது 175000 மெய்யன்பர் புடைசூழ விளங்கினர். அதுவே இஸ்லாமியர் குர்பானி பெற்ற ஈதுல்லாஹ் திருநாள். "இறைவன் ஒருவனே; அவனே பெரியவன்; இறைவனை நம்புமின்; அன்புடன் பணிமின்; அவனருளில் ஒன்றி ஒருகுலமென வாழுமின்; ஒற்றுமையைக் கைவிடன்மின்; ஆணும் பெண்ணும் அறிவை வளர்மின்; அறவழி நில்லுமின்; அருட்பணி புரிமின்; வேற்றுமை, பகை, பொறுமை, சிறுமைகளை யொழிமின்; சைத்தானுக்கு இடந்தரன்மின்; அனைத்துயிர்கட்கும் அன்பே புரிமின்; ஏழைக்குதவுமின்; பிறரை வெளவன்மின்; தொழுகையும் நோன்பும் தூய்மையும் போற்றுமின்; குர்ஆன் ஷெரீபை யுளங்கொண்டொழுகுமின்" என்று திருவாய் மலர்ந்து, "இஸ்லாம் அன்பர்களே! ஆண்டவன் கட்டளையை யான் இனிது நிறைவேற்றினேனோ? என் பணி நன்றோ?" என்று வினவினன் திருவருட்பெருமான். "ரஸூலல்லாவே! நபிநாயகமே! இறைவனருள் விளக்கே! தங்கள் அரிய அருட்பணி வெற்றிபெற்றது" என்று அனைவரும் புகழ்ந்து போற்றினர்.

தனது இறுதிநாட்களை நபிமணி காபாவில் தொழுகையிலும், அறவுரையிலும் கழித்தார். ஒருநாள் அலி மீதும் பஸல் மீதும் சாய்ந்துகொண்டே, "உள்ளன்பர்களே! யான் யாருக்கேனும் பிழை செய்தேனோ? எவர்க்கேனும் யான் தர

வேண்டியதுண்டோ? எனின் இப்போதே ஈடுசெய்வேன்" என்றார் அருட்பெருமான்.

"எங்கள் உள்ளத்தை அள்ளும் அன்புப் பெருமானே! நபிமணியே! தாங்கள் எல்லையற்ற நலியாத நலமே புரிந்தீர்; தங்களிசை நீடுழி வாழ்க!" என்றனர் அன்பர்.

"செருக்கறுமின்! பிறர்க்கினிதே செய்மின்! இன்னலை விடுமின்! அன்பே விளைமின்! உண்மையான விண்ணின்ப மெய்துவீர்" என்று இறுதியாகத் திருவாய்மலர்ந்து நபி பெருமான் தொழுகையிலிருந்தபடியே இறைவன் கழலடைந்தார்! இஸ்லாம் வாழ்க! அல்லாஹு அக்பர்!

## 7. ஸூபி ஸாதி

ஸூபி ஸாதி என்பவர் ஒரு சிறந்த பாரசீகக் கவி. இவர், "குலிஸ்தான்" என்னும் சுவையுள்ள பாமாலையைத் தொடுத்திருக்கிறார். தனது நீண்ட வாழ்க்கை யனுபவங்களையே ஸூபி ஸாதி இப் பாமாலையிற் பாடியுள்ளார். இவர் நூற்றுப்பத்து ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். திருக்குரானை நன்கு ஆராய்ந்து, அதன்வழி நின்று இவ்வறிஞர் தன் வாழ்வைத் தூய்மை யுறுத்தினார். இவர் உண்மையான இஸ்லாமியர்; விரதத்திலும், தவத்திலும், வழிபாட்டிலும், பக்தி கானங்களிலும், தன் வாழ்க்கையை நடத்தி, அத்யாத்ம வாழ்வு வாழ்ந்தார். பதின்மூன்றாவது நூற்றாண்டில் தார்த்தாரியர், பாரசீகத்தைப் படையெடுத்து அழித்ததும், நமது

ஸாதி தன் நாட்டை விடுத்து, இந்தியா, அரபியா, ஸிரியா முதலிய விடங்களிற் சுற்றி உலகியல்பைக் கற்ருர். துருக்கியில் இவர் எல்லா இடங்களையும் பார்த்து, மாந்தர் வாழ்வை நன்கறிந்தார். டெமஸ்கஸ் என்னுமிடத்திற் சில ஆண்டுகள் தங்கி, அங்கு, தன் நீண்ட அனுபவங்களைத் தனது தூய வாக்கால் பாடிக்கொண்டு துறவியாயிருந்தார். தன் முதுமையில், ஒரு அழகான ரோஜாத் தோட்டத்தில் இவ்வறிஞர் சாந்தமாக வாழ்ந்தார். இங்கேதான் இவருடைய தூய மனத்தினின்று, குலிஸ்தான் (ரோஜாத் தோட்டம்) என்னும் அருமையான, என்றும் வாடாத அறிவுப் பூக்கள் பூத்தன. குலிஸ்தானின் உயர்ந்த கருத்துக்கள், படிப்பவர் மனதை மாசறுக்கும். அவை, வாழ்வை யுயர்த்தும் மருந்து. கேட்போருக்கு அவை நல்லறிவு கொளுத்தும்; பேரின்பந் தரும். இக்கவி, குலிஸ்தானை உலகிற் கீந்து, 1292-ம் ஆண்டு ஆண்டவன் திருவடியை யடைந்தார். அவருடைய மொழியமுதில் சில சொட்டுக்களை நுகர்வாம்:—

எல்லாம் வல்ல இறைவன் அறவடிவோன்; அவன் பெரிய நீதிபதி. நன்மையே புரிபவருக்கு நற்பயன் விளைகிறது; தீய முயற்சியாளருக்குத் தீய அனுபவங்களே யர்கின்றன.

ஒரு மதயானையை யெதிர்த்துப் போர் புரியும், வீரனைக் காட்டிலும், தன்னைப் பிறர் கடுத்தாலும், முகங் கடுக்காது நிதானமாகப் பேசுவோனையே உண்மை வீரனகப் பெரியோர் மதிப்பர்.

ஒரு சிறு பாயில் பத்துத் துறவிகள் அமைதியாகப் படுத்துக் கொள்வார்கள். ஆனல் ஒரு பெரிய நாட்டில் இரண்டு மன்னர்கள் முரணின்றி அமைதியாயிருத்த லரிது.

பொறுமைக்காரர்களே! நீங்கள் இல்லாவிடில் உலகிற்கு நலம். ஏனெனில், பொறுமை என்பது சாவோடுதான் சாகும்.

கொடுங்கோலரசன் ஒரு சமூகத்தாரை அழைக்கியாளவொண்ணாது. ஏனெனில், ஒரு ஓநாய் ஆட்டிடையன் வேலையைப் பார்க்க இயற்கையில் ஏற்பட்டதில்லை. ஒரு கொடுங்கோல் மன்னன் தன் ராஜ்யத்தின் மதிலைத் தானே யிடிக்கிறான்.

ஓ மன்னனே! எளியவருக்கு இரங்கு; இல்லாவிடில், ஒரு வலிய சத்துருவினின்று போரை எதிர்பார்ப்பாய். கொடுங் கைகளாலும், உன் பலத்தாலும் ஏழைகளையும் திக்கற்றவர்களையும் துன்புறுத்தாதே. அவர்களை அட்டைபோல் உறிஞ்சாதே.

ஆத்ம சுயேச்சை யடைந்தவனிடம் பணமும், காதலர் மனதில் பொறுமையும், மடைவாயில் தண்ணீரும் நிலைக்காவாம்.

பகல் தீவட்டி போடுவோன் இரவில் எண்ணெ இல்லாது விழிப்பான்.

ராஜசேவை கடல் யாத்திரையைப்போல லாபமுள்ளது. ஆனால் அபாயமானது. அதனால் உனக்குப் பொன் கிடைத்தாலும் கிடைக்கலாம். கடுஞ் சாவு நேர்ந்தாலும் நேரும்.

நமது வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைவும் குறைவும் உள்ளதாய், வனாந்தரக் காற்றுப்போற் செல்லுகிறது.

சந்நியாஸமென்பது காவியுடையிலில்லை; அது உள்ளத் துறவிலும் எளிமையிலும் இருக்கிறது. ஒரு வீரனே வீர

வுடைகளை அணியத் தக்கவன். ஒரு பயங்காளி அதற்குத் தக்கவனுகா னன்ருே?

நீ நல்லவனு யிரு. பிறர் உன்னைத் தூற்றினும் பொறு. நீ கெட்டவனுக இருந்து உன்னை மற்ருேர் பொய் யாகப் புகழ்வதினும், நீ நல்லவனுக இருந்து மற்ருேர் உன் னைத் தூஷிப்பதே நலம்.

சூரியனுடைய அழகையும், ஒளியையும் நலத்தையுங் கண்டும் பொதுவாய் ஜனங்கள் ஆர்வமுறுவதில்லை. ஏனெ னில், அவன் வழக்கமாகத் தினந்தோறும் வருகிருனன்ருே?

பணத்தாசை யுடையவன் துறவி யல்ல. துறவி பணத் தாசை யுடையவனல்ல.

நீ தூசியாகு முன் தூசி போலத் தாழ்மையுட னிரு.

ஆயிரம் பாரம் கல்லைச் சுமப்பவன், ஒரு வசவைத் தாங்க மாட்டானுகில் என்ன பலன்?

சுதந்திரத்தின் சக்தி கொடுங்கோலினும் வலியது.

ஏ பணக்காரர்களே! உங்களுக்கு நியாய உணர்ச்சியும், எங்களுக்குத் திருப்தியும் ஏற்பட்டால், உலகின் துயர்கள் நீங்கும்.

ஓ திருப்தியே! நீயின்றி ஒருவரும் செல்வனுக முடி யாது. பொறுமை யின்றி யாரே ஞானியாக முடியும்?

நமது தேவைகளைப் பிறரிடம் சொல்லி யாசிப்பதினும், இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வது நலம். பணக் காரனிடம் ஒரு புத்துடைக்காகக் கெஞ்சுவதினும், தனது கந்தையைத் தைத்துடுத்துவதே சிறந்தது. இரப்பதினும் பட்டினியோடிருப்பது மேல்.

கடவுளைப்பற்றி எண்ணித் தோத்திரம் செய்து உயிர்க் கவே நாம் உண்ண வேண்டியது. வழக்கமாகவே, உலகில்

பல இடர்களை அனுபவிக்கும் மனிதன் எந்த இடர் வரினும் வெல்லுகிறான். கண்டபடி தின்று கொழுத்து, இடும்பக் கூத்தாடுவோன், சிறிது துன்பம் வரினும் தாங்க முடியாதவனாகிறான்.

மானங் கெட்டு வாழ்வதினும் மானமாய் இறத்தலே நலம்.

வனாந்தரத்தில் பசியால் தவிக்கும் ஒருவனுக்குத் தங்கமும் மண்ணும் ஒன்றுதான்.

பாரசீகத்தில் அகப்படும் கந்தகத்தை சீன தேசத்திற்கும், சீனத்து மண் பாண்டத்தை கிரேக்க நாட்டிற்கும், கிரேக்கின் பண்டங்களை இந்தியாவிற்கும், இந்தியாவில் மிகுந்த எஃகை அலப்போவிற்கும், அலப்போவிலிருக்கும் கண்ணாடியை யாமினுக்கும் நான் கொண்டுபோய் வியாபாரம் செய்வேன்.

என் குற்றங்களை யெல்லாம் குணமெனவும், என் குறைகளை யெல்லாம் நிறைகளெனவும் புகழும் நேசரை நான் விரும்பவே யில்லை. அவர்கள் முட்களை ரோஜாக்களென்றும் மல்லிகையென்றும் வர்ணிப்பவர். என் குறைகளை யெல்லாம் உரக்கக் கூவும் எதிரி எங்கே? அவனே என் அன்பன்.

ஒரு விலங்கிற்கு நீ பேசக் கற்பிக்க முடியாது. ஆனால் அதனிடத்தினின்று நீ மௌனத்தைக் கற்றுக்கொள்.

அறிவை அடைந்து அதன்படி நில்லாதவன் நிலத்தை நன்றாக உழுதும் விதைக்காதவனுக்குச் சமானமாவான்.

எவ்வளவு படித்திருப்பினும் அதன்படி நில்லாதவன் ஒன்றுந் தெரியாதவனே; அப்படிப்பட்டவன் வேதாந்தியு

மல்ல, துறவியுமல்ல; புத்தக மூட்டையைச் சுமக்கும் ஒரு விலங்கே யாவான்.

ஒரு பொருள் கோரோஜனை என்பதை அதன் மணமே காட்டும். ஒரு மனிதன் கலையில் நிபுணனென்பதை அவன் திறமையே காட்டும்.

பணம், சேர்ப்பதற்கு ஏற்பட்டதல்ல; அனுபவிப்பதற்கே ஏற்பட்டது.

உன் சத்துருக்களோடு உறவாடும் நண்பனை ஒதுங்கி வாழ்.

ஏ துறவீ! நீ பூமியைப் போலப் பொறுமையா யிருக்கப் பழகு. உன் புத்தகப் படிப்பை யெல்லாம் பூமிக்குள் ஆழமாகப் புதைத்து விடு.

காமம் நரகத் தீ போன்றது; அதில் மூழ்கிவிடாதே.

ஒரு அறிவீனன் அறைபறை போன்று சத்தம் போட்டு, உள்ளே வெறுமையாயிருக்கிறான்.

சுறுசுறுப்பில்லாத பண்டிதன், பணமில்லாத காதலன் போலாவான். அறிவில்லாத பிரயாணி, இறகில்லாத பட்சி போல்வான். அனுஷ்டானமில்லாத வேதாந்தி, பழமில்லா மரத்தைப் போல்வான்; கல்வி யில்லாத பக்தன், கதவில்லாத வீடு போல்வான்.

தரித்திரம் அனுபவித்தவனுக்கே செல்வத்தின் சுகம் தெரியும்.

ஏ அரசே! உன் படத்தை அந்தச் சுவற்றில் மாட்டி வைத்தால் யாவரும் பயத்தால் அதனருகே செல்லமாட்டார்கள். உனக்கு மோக்ஷத்தில் ஒரு இடம் கிடைத்து, இருப்பாயாகில், எல்லோரும் நரகமே சுகமென்று போய்விடுவார்கள்.

ஏ கிழவி! உன் வெளுத்த கூந்தலைக் கறுப்பாக்கினாலும் உன் வளைந்த முதுகை நிமிர்த்த முடியாது.

கழுதையை மெக்கா யாத்திரைக்குக் கூட்டிப்போனாலும் அது கழுதையாகவே திரும்பிவரும்.

தீர்ப்பு நாளில் கடவுள், "உன் வேலைகள் எங்கே?" என்று கேட்பாரேயொழிய, "உன் தகப்பன் யார்?" என்று வினவார்.

கருமியானவன் பூமிக்குள் புதைந்தால்தான் அவன் பணம் பூமியைவிட்டு மேலெழும்பும்.

ஒரு வனாந்தரத்தின் மணல் முழுதும் தங்கமும் முத்துமானாலும், ஒரு பேராசை பிடித்தவன் களிப்பது சந்தேகம்.

முள்ளில்லாத ரோஜாவும், மயக்கமில்லாத கள்ளும் இல்லை. முத்தெடுக்குமிடத்தில் ஆட்களைக் கொல்லும்படியான பெரிய மீன்களும் இருக்கின்றன. புதைத்து வைத்தால் அப்பணத்தருகே காலகோடி சர்ப்பம், வாய் திறந்து நிற்கிறது. உலக அனுபவம் என்ற தேனோடு தேனீக் கடியும் சேர்ந்திருக்கிறது. நமக்கும் மோக்ஷத்திற்கும் நடுவே சாத்தான் இருக்கிறான்.

வெறுப்போடு பார்க்கும் கண்களுக்கு மன்மதனும் அழகற்றவனாய்த் தோன்றுகிறான். விருப்போடு பார்ப்போனுக்கு அரக்கனும் அழகனாகிறான்.

மெதுவாக விடாது நடப்பது, விரைவாக ஓடி மத்தியில் விழுந்து விடுவதினும் மேல். கொஞ்சதூரம் தாவியோடிக் களைத்துப்போகும் அரபிக் குதிரையினும், சேர்ந்தாற்போல நிதானமாய் நடக்கும் ஒட்டகம் வனாந்தரத்தை எளிதில் தாண்டுகிறது.

ஒரு பிரயாணியின் மடியிலிருக்கும் தங்கம், கள்ளர் கையில் படுகிறது. அல்லது, வழியில் செலவழிந்து போகிறது. ஆனால், ஒருவன் மனத்திலுள்ள அறிவு நிலையாயிருக்கிறது.

"ஏழ்மை எனது பெருமை" என்று ரஸூல் சொல்வதைக் கவனியுங்கள்!

கடவுளை நம்பினவனுக்குக் கடவுளே எல்லாமாகிறார்.

# 8. அப்துல் பஹாய்

தற்காலம் நின்று நிலவும் ஸமரஸ இயக்கங்களில் பஹாய் இயக்கம் பெயர்பெற்றது. இதைப் பற்றிக் கணக்கற்ற நூல்கள் அரபி, பாரசீகம், ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் உள்ளன. இதன் சீடர்கள் உலகெங்கும் அரிய அருட்பணி புரிகின்றனர். இதை முன்னறிவித்தவர் பாப் (Bab) என்றவர். அதன் பொருள் "வாயல்." மீர்ஜா ஆலி முகம்மது என்ற பிள்ளைத் திருநாமங் கொண்ட பாப் 1819-ல் தென் பாரசீகத்திலுள்ள ஷிராஜில் (Shiraz) பிறந்தார்; குழந்தைப் பருவத்தில் தந்தையை யிழந்து மாமனிடம் வளர்ந்தார். இவர் சிறிது பாரசீகம் கற்று மாமனின் வியாபாரத்தை கவனித்தார். இவர் இயல்பிலேயே தூய்மையும் வாய்மையும் இனிமையும் தியானமும் வாய்ந்து 23-5-1844-ல் கடவுளின் ஆதேசம் பெற்று, 18 சீடர்களுக்குத் தனது உபதேசங்களைத் திருவாய்மலர்ந்து அவர்களை நாடெங்கும்

அனுப்பித் தன் ஸமரஸ தர்மத்தைப் பரப்பினர். மெக்கா வில் லக்ஷம் பேர்முன் தன் உபதேசத்தை நடத்திப் பலர் அன்பைப் பெற்ருர். பல அறிஞர் அவர் மதத்திற் சேர்ந்த னர். எஸ்பஹானிலுள்ள கிறிஸ்தவ அதிகாரியும் இவரது அடியாரானர். இந்த அன்பர் இறந்தபின் பாப் மதவெறி யாளரால் பட்ட இடர்கள் கொஞ்சமல்ல. ஆனல் அவரியக் கம் அதன் தர்ம பலத்தால் காட்டுத் தீப்போல எங்கும் விரைந்து பரவிற்று. தெஹிரானைவிட்டு பாபு நாடு கடத்தப் பட்டார். பாபின் அன்பர்கள் தங்கள் உண்மையைக் கடைப் பிடிக்கப் பட்டதுன்பம் கொஞ்சமல்ல. பாப் மதம் மக்க ளிடை பரவும் வேகத்தைக் கண்டு அஞ்சிப் பாரசீக அதி காரிகள் பொய்மதம் புனைந்தவரென்று அவரைச் சீவுக்கடி கொடுத்து "சிரிக்" என்ற கோட்டையிற் சிறையிட்டு, பாப் அன்பர்களைக் குத்திக்கொன்று இமிசித்தனர். இதனல் பாப்மதவேகம் பின்னும் விரைந்து பரவிப் பொதுமக்களின் வீராவேசத்தைக் கிளப்பவே, பாரசீக மந்திரியின் தீர்ப்பால் 9-7-1850-ல் தாப்ரிஜில் (Tabriz) பாப் சுட்டுக்கொல்லப் பட்டார். இவர் தன்பின் கடவுள் அருளைப் பெற்றுவரும் பஹோல்லாவைப்பற்றி முன்னரே ஜனங்களுக்கு அறிமுகப் படுத்தினர்.

மிர்ஜா ஹுஸேன் ஆலி எனும் பஹோல்லா 12-11-1817-ல் தெஹிரானில் ஒரு செல்வக் குடும்பத்திற் பிறந்து, இள மையில் தந்தையை இழந்து, குடும்பப் பொறுப்பை வகிக்க வேண்டியவரானர். ஞானமும், தியானமும் இயல்பினமைந்த பஹோல்லா பள்ளிக் கல்வியின்றிக் கல்லாக் கல்விமானனர். பாப் கொள்கைகளை ஆதரித்து இடைவிடாது கடிதம்மூலம் பாபுடன் உறவாடி அன்பைப் பெருக்கிவந்தார். பாப் வதைக்

கப்பட்டபின், அன்பர்கள் அரசாங்கத்தாரால் தூக்கிடப்பட்டும், துரத்தப்பட்டும், கொல்லப்பட்டும் வருந்தினர். இப்போதே பஹோல்லா துணிந்து முன்வந்து இயக்கத்திற்கு ஆக்கங்கொடுத்தார். அரசாங்கத்தார் இவரை பாக்தாதில் (Bagdad) காவல் வைத்தனர். இங்கும் அரபியா, பாரசீகத்தினின்று அன்பர் குழுமினர். கடவுளரசையும் சர்வ ஸமரஸத்தையும் நாட்ட அவதரித்தவரே பஹோல்லாவென நம்பினர். அன்பர் அதிகரிக்கக் கண்ட அதிகாரிகள் மீண்டும் அவரை கான்ஸ்தாந்திநோபிளுக்கு அனுப்பி, அங்கிருந்து ஐந்தாண்டு அத்ரியாநோபிளில் (Adrianople) காவல் வைத்தனர். அங்கிருந்து பஹோல்லா அரிய கடிதங்கள் மூலம் தனதன்பர்க்கு உபதேசித்து வந்தார். அன்பர் தொகை மென்மேலும் வளரவே, முடிவாக 1868-ல் பஹோல்லாவை அக்கா (Akka) என்னும் கோட்டையில் இரண்டு ஆண்டுகள் கடுங்காவலில் வைத்தனர். இம்மஹான் சிறைத் தனிமையில் தனது அரிய உபதேசமணிகளைக் கோவை செய்து உலகெங்கும் அனுப்பினார். தோல்ஸ்தாய் கூட இவரை வியந்து போற்றினர். நாளடைவில் அதிகாரிகளுக்கும் இவர் பெருமையும் நன்மையும் நன்கு தெரிந்து, அக்கா நகரில் சுயேச்சையாக வாழ உத்தரவீந்தனர். தனது திருவாக்குகளை எழுதியும் அன்பர்கட்கு உபதேசித்தும் பஹோல்லா 40 ஆண்டுகள் ஸமதர்மத்திற்காகப் பாடுபட்டு, 1892-ல் மஹா ஸமாதியடைந்தார். பஹோல்லாவின் மூத்த பிள்ளை 75 வ்யதுள்ள அப்துல்பஹா (கடவுளடியான்) தந்தையின் உபதேசங்களைச் செயற்படுத்தி உலகெங்கும் பஹாய் சங்கங்களை ஏற்படுத்தினர். பள்ளிப்படிப்பின்றியே தந்தைபோல அப்துல்பஹா அருளறிவு பெற்றார். இவர்,

தனது தந்தைக்கும் பஹாய் அன்பர்க்கும் அரும்பெரும் பணி புரிந்தார். அரசாங்கம் இவரைக் கடலில் ஆழ்த்தவும் முயன்றது. இவரைச் சிலகாலம் காவல் வைத்துப் பிறகு அரசாங்கத்தார் விடுதலை செய்தனர். அப்துல் பஹா கட்டழகன், அன்பு மயம், கருணை வடிவு. ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் இவர் பலவாறு உதவினர். மிக மிக எளியவாழ்வை மேற்கொண்டு, இடம்பமின்றி "குரு" என்ற பட்டத்தையும் மறுத்துக் குழந்தைபோன்ற தெளிவுடன் அப்துல்பஹா அன்பரிடையே பயின்றார். 1893-ல் சிக்காகோ சர்வமதசங்கத்தில் பஹாய் தர்மமும் முழங்கிற்று. அப்துல் பஹா ஜெர்மனி, பாரிஸ், அமெரிக்கா முதலிய இடங்களில் தன் தர்மத்தைப் பரப்பினர். நூற்றுக்கணக்கான வெண் சீடர் இவரைப் பின்பற்றினர். இவர் மனைவி மக்களுடன் மனையறத்தை வாழ்வாங்கு வாழ்ந்து உலகிற்கு உதாரணங் காட்டி 1922 வரை ஜீவித்திருந்தார்.

ஆண்டவன் அனைவர்க்கும் பொதுத் தந்தை; 'வணக்கமும், விரதமும், தூய்மையும், வாய்மையும் அவனையடையும் வழி. வெளிவேடங்கள், பூச்சுகள், புரோகிதர், கருமாதிகள் இன்றிக் கடவுளை ஒவ்வொருவரும் உள்ளத்தில் உன்னியடையலாம். உடலை உறுதி செய்க. தூலாதாரம் இன்றியமையாத கருவி. ஆணும் பெண்ணும் சம உரிமை பெற்ற இல்லறம் நல்லறமே. ஒழுக்கம் விழுப்பம். அபின், குடி, ஜீவ ஹிம்ஸை, பிச்சை வாங்கல், அடிமைத்தனம், வாதம், பேதம், சண்டை, விலை வாழ்வு இவற்றை அடியோடு ஒழிக்க வேண்டும். எல்லா மதங்களின் வேரும் ஒன்று. சர்வமத ஒற்றுமை, ஸர்வஜன சமரஸம், அகில தேசீய ஒற்றுமை, அகில சமுதாய ஒற்றுமை, அகில சுதந்திரம், அகில ஸமத்

வம், உலக அமைதி அனைத்தையும் பாரமார்த்திகத்தில் அமைத்து உலகில் கடவுளரசை இலக்குக; கிழக்கும் மேற்கும் பொருந்துக; என்பது பஹாய் தர்மம். "யாபஹா அல் அல்லாஹ்!" (ஆண்டவன் அருட்பெருமை விளங்குக!) என்பது பஹாய் அன்பர் செய்யும் ஜபம். ஒவ்வொரு பஹாய் அன்பனும் ஜபமாலையில் இம்மந்திரத்தை ஜபிப்பான். அவர்கள் அறிகுறி 9. அரபியில் ஒவ்வோரெழுத்திற்கும் எண்ணுண்டு. ப=1; அ=2; ஹ=5; பஹா=9. பஹாய் இயக்கத்தில் ஒரு சிறந்த கொள்கை ஒவ்வொரு ஊரும் மஷ்ரக்-எல்-அஸ்கர் (Mashrak-el-Azcar) ஆக அமையவேண்டும் என்பது. அதாவது எல்லாரும் தொழும் ஒரு கோயில்; அதில் அனைவரும் கூடி தியானமும் ஜபமும் தோத்திரமும் முறையாகச் செய்யலாம். சத் விஷயங்களைப்பற்றி அதில் போதனை செய்யலாம்; அதை நடுவாகக்கொண்டு மனித வாழ்விற்கு வேண்டிய கலாசாலை, வைத்தியசாலை, புத்தகசாலை முதலியவை அமைத்தல், கோயிலைச் சுற்றி அழகிய நந்தவனங்கள் அமைத்தல், உள்ளத்தில் கடவுளும் கையில் உழைப்புமாக ஒவ்வொருவரும் அதைச் சுற்றி சுகாதாரப்படி வீடு கட்டி பஹாய் தர்மப்படி ஒற்றுமையாக வாழுதல். இத்தகைய கோயில் நகரம் எங்கும் அமைக்க பஹாய் அன்பர் முயன்றனர். இது அநேகமாக ராதாசாமி சத்சங்கம் போன்றது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா கண்டங்களில் சில ஊர்களில் இத்தகைய மஷ்ரக்-எல்-அஸ்கர் அமைக்கப்பட்டுள்ளது. இகவாழ்விலேயே ஆன்ம பூரணம் பெறவேண்டுமென்பது பஹாய் அன்பர் முயற்சி. உள்ளத்தில் கடவுளன்பை யூக்குவதே அற்புதச் செயல் (Miracle) அன்றி, வேறு சித்தாடுதல் பஹாயர்

சம்மதமல்ல. ஒற்றுமையுறுமின்; ஒருவனைப் பணிமின் ; உள்ளன்பு வளர்மின்; உழைமின்; உழைப்பை வழிபாடாக்குமின்; எல்லாரும் ஒரு கடவுள் மைந்தராக வேறுபாடின்றி வாழுமின்என்பதுவே பஹாய் தர்மத்தின் சுருதி மொழி. பஹாய் தலைநகர் இப்போது ஹைபாவிலுள்ளது.

# 9. மஹாத்மா ஸொக்ராத்தன்

“அதிநியர்களே! என் நண்பர்களே! என்மீது குற்றஞ் சாட்டியவர்களே! நான் உங்களை அன்புடன் மதிக்கிறேன் ; ஆனால் உங்களைவிட நான் ஆண்டவனையே பணிவேன் ; எனக்கு உயிரும், வலிவும் உள்ளமட்டும் ஆண்டவன் எனக்கீந்த அறிவுண்மையை எதிர்ந்தோர்க் கெல்லாம் தெளிவாக விளக்காது வாளா இரேன். என்னை ஆண்டவன் இதற்கே உங்களிடையனுப்பினார். நண்பரே ! மற்றவர்களைப்போல நானொரு மனிதன் ; எலும்பும் தசையுங்கொண்ட ஒரு உயிர் ; எனக்குக் குடும்பம் உள்ளது ; மூன்று மைந்தர்கள் உள்ளனர் ; ஒருவன் விவரம் தெரிந்தவன் ; மற்றிருவரும் சிறுவர் ; இருப்பினும் என்னை விடுவிக்க மனுச்செய்யும்படி அவர்கள் யாரையும் யானிங்கு அழைக்கமாட்டேன். வேறு எனது நண்பர்களையும் நற்சாட்சி சொல்ல அழைக்கமாட்டேன் ; எனதுரை உண்மை ; மேலதன் சொல்வது பொய் ; என்று அவர்கள் நன்கறிவார்கள். நியாயவாதிகளே ! சாவை யான் அஞ்சவில்லை ; சாவைப்பற்றி மகிழுங்கள் ; இது

உண்மை ; இருக்கும்போதும், இறந்த பிறகும், நல்லோனுக்குத் தீங்கெதுவும் நேராது ; ஆண்டவன் அவனையும் அவனைச் சேர்ந்தோரையும் கைவிட மாட்டான்."

ஆத்மவீரத்திற் பொங்கியெழுந்த இந்த வுண்மையுரைகளே ஸொக்ராத்தனை உலகின் உள்ளத்தில் என்றும் வாழும் மஹாத்மாவாக்கியது. தன்னறிவு, தன்னம்பிக்கை, கடவுளுறுதி, உண்மை, அஞ்சாமை இவையே ஸொக்ராத்தனின் வடிவு. இவையே ஸொக்ராத்தனை ஆத்மதீரமென்னும் சஞ்சீவி மலைமீதெரியும் அறிவுமணி விளக்காக்கின. மாந்தருக்கு வழிகாட்டியாக விளங்கிய அருட்பெரியார்கள் கற்றறிவு, சுட்டறிவினின்று பேசவில்லை, எழுதவில்லை ; உள்ளெழுந்த அருளறிவினால், அந்த அருள்வழி வாழ்வினால், உலகோர் ஈந்த இடர்களையெல்லாம் பொறுத்து, உலகிற்கு நல்வழி காட்டிச் சென்றனர். ஏசுநாதர், நபிநாயகம், குருநானகர், பரமஹம்சர் முதலியோர் கற்றறிவினின்று பேசினர்? இல்லை ; அவர்கள் கையில் எழுதுகோலை ஏந்தவில்லை. ஆண்டவன் ஊக்கிய அருள்வழியில் வாழ்ந்தனர் ; தம்மைச் சுற்றியுள்ளவர்களின் இருளொழிய அருளறிவைப் பொழிந்தனர் ; அதுபோலவே ஸொக்ராத்தனும் உள்ளத்தெழுந்த அருளாற்றைச் சொற்பெருக்காகப் பாய்ச்சி உண்மையறிவுப் பயிரை வளர்த்து அதற்கே தனதுயிரையும் வார்த்தான். ஸொக்ராத்தன் எதுவும் எழுதி வைக்கவில்லை ; தன் வாழ்வையே அறிவுமணி விளக்காக்கினான். அவ்விளக்கினின்று எத்தனையோ மணிவிளக்குகள் ஏற்றி விளங்குகின்றன. ஞானத் தந்தை ஸொக்ராத்தன் ; அத்தத்துவ மைந்தர் பிளாதனும் அரிஸ்தோதிலனும். மற்றவர்களெல்லாம் பேரப்பிள்ளைகளே. காந்தே, ஹெஜெல், ஷோபன்ஹார்,

பெர்க்ளி முதலிய அனைவரும் இந்த மூவருக்கும் கடன்மைப் பட்டுள்ளனர்.

மேனாட்டின் ஒப்புயர்வற்ற அருளறிவுத் தந்தையான ஸொக்ராத்தன் ஆதன்ஸ் நகரில் கி.மு. 468-ல் பிறந்தான்; அவன் தந்தை ஸோஃப்ரோநிகன் (Sophroniscus) எனும் எளிய சிற்பி; தாயார் ஒரு மருத்துவச்சி; ஸொக்ராத் அறிவுக்கனலுடன் பிறந்தான்; பிள்ளைப் பருவத்திலேயே வருங் காலப் பெரியோனைக் காட்டினன். ஆதன்ஸ் சிறுவர்களை இளம் ஸொக்ராத்தனின் அன்பும், இனிமையும், மாசற்ற வாழ்வும், அறிவு மொழிகளும் மின்சாரக் காந்தம்போ விழுத் தன. ஸொக்ராத்தன் பெரும்பாலும் தன்னுள் ஆழ்ந்து சிந் தித்திருப்பான்; அக்காலத்தில் பல அறிவாளிகளும், அருங் கலைவாணரும் ஆதன்ஸ் நகரை அலங்கரித்தனர். அறிஞர் பேச்சுகளை அவன் ஆர்வமுடன் கேட்பான். அக்காலத்தில் பெயர்பெற்று விளங்கிய *அனெக்ஸகோரன் (Anaxagoras) கி.மு. (500-429) என்ற அணுவாதி (Atomist), அர்ஷலன் (Archelaus) போன்ற அறிவாளிகளின் சொற்பொழிவை ஸொக்ராத் கருத்தூன்றிக் கேட்பான். அப்போது இச்சிறு வனின் கூரறிவையும் கனல்விழிகளையும் வியந்த ஒரு செல் வன் தனது பொருட்செலவில் தத்துவஞானம் பயிற்றுவித் தான்.

---

* அனெக்ஸகோரன்:—ஐயோனாவிற் பிறந்தான். பொருள் கள் அணுத்திரள்களால் ஆகி அணுப்பிரிவால் கலைகின்றன. இவ்வணுக்களை இயக்கும் ஒரு அறிவான சக்தியுள்ளது என்பது இவர் கொள்கை. புத்தர் கொள்கைகளைக் கொண்ட பிதா கரன் (Pythagorus), இரத்தமே உயிரெனும் எம்பிடாகிள்ஸ் (Empidocles) முதலியோர் அக்காலத்து அணுவாதிகள்.

இயலறிவுடன், நூலறிவிலும் தேர்ந்து நிகரற்ற அறிவாளியாக விளங்கியதுமட்டுமன்றி, ஸொக்ராத்தன் ஒரு வீரனுகவும் விளங்கினுன். கி. மு. 432-ல் ஆதன்ஸ் குடியரசை எதிர்த்த போதிதோ முற்றுகையில் ஸொக்ராத் வீரப்போர் கொடுத்தான். அப்போரில் இடர் பலதாங்கித் தனது அரிய அன்பரான அல்ஸிபியாதன் (Alcibiades), ஜெனுபன், அம்ஃபிபோலன் முதலியோர் உயிரைக் காப்பாற்றினுன். மற்றும் இரண்டுமுறைகள் ஸொக்ராத்தன் தனது நாட்டிற்காக வாட்பணி புரிந்தான். ஆனுல் இவற்றினும் உயர்ந்த ஒரு அறிவுப்பணி தனக்குள்ளதென ஸொக்ராத்தன் உணர்ந்தான். மனசாட்சி தன்னை "அரசியற் பணி உனக்கு வேண்டாம்" என்று மறுத்து, அடிக்கடி ஏதோவொரு அறிவுப்பணியின்பால் இழுப்பதை யுணர்ந்தான்.

பர்னுஸ் மலையடிவாரத்தில் தெல்பிக்கோயில் இருந்தது. அதிலமர்ந்த தேவதை, அன்பர் வணக்கமுடன் கேட்ட கேள்விகளுக்கு அசரீரியாகப் பளிச்சென்று விடையளித்து வந்தது. ஒரு நாள் ஸொக்ராத்தனின் நண்பன் ஷார்பன் தெல்பி சன்னிதி முன்னிருந்து 'தெய்வமே எனக்கொரு திருவாக்களிக்க வேண்டும். ஸொக்ராத்தனைவிட அறிவாளி உண்டா?' என்று குறிகேட்டான். "ஸோக்ராத்தனைவிட அறிவாளி யாருமில்லை" என்று வாக்கெழுந்தது. கேட்டான் ஸொக்ராத்தன்; "என்னே, நான் ஏழை; அறிவாளியல்லேன்; தெய்வம் இப்படிச் சொன்னதென்னே!" என்று வியந்தான். அக்காலத்தில் இசைபெற்ற அறிவாளிகள், கவிகள், கலைஞர் அனைவரையும் தனது இயலறிவாற் சுண்டிப்பார்த்தான். நூல்களையோதி அறிவாளி என்று தம்மைச் செருக்குடன் மதிப்பவரைக் கண்டானே யொழிய, உள்ளாழ்ந்த உண்மைடி

யறிவாளிகளைக் காணிலன். தன்னுள் ஊறும் அருளறிவை அப்போது கண்டான். அதைக்கொண்டு தனது நாட்டினரு ருக்கு ஆன்மவுண்மையை விளக்க முற்பட்டான்.

காலநிலை ஸொக்ராத்தனைக் கூவியழைத்தது. கனல்வாதம் பேசிச்சென்ற † எராக்ளிதனுக்குப் பிறகு பல இயற்கை வாதிகள் கிளம்பினர்; எபிகூரன் (Epicurus) போன்ற விஷயவாதிகளும், பைரோ (Pyrrho) போன்ற நம்பாதாரும் (Sceptics), கற்றறிவைக்கொண்டு கடகடப்பவரும், வீண்வாதிகளும் நிரம்பியிருந்தனர்; இவர்களுடைய ஆரவாரத்தினின்று உண்மையறிவன்னை வெகுதொலை ஒதுங்கி நின்றனள். இவர்களுடைய வீண்மையினின்று நாட்டினரைத் திருப்பி உண்மையை விளக்கவே ஸொக்ராத்தன் தனது வாழ்வை யீந்தான்; இதுவே கடவுள் தனக்கீந்த அருட்பணியெனக் கண்டான்; தனது வீடு, வாசல், சொந்த நலம், அனைத்தையும் மறந்தான். சொல்லொணுத இடர்கள் வந்தன; அவற்றைப் பிள்ளை விளையாட்டெனப் பொறுத்தான்.

ஸொக்ராத்தன் பரம ஏழை; மிகச் சிறு வீட்டில் அவனது மனைவி மக்கள் வசித்தனர். இச்சிற்றில்லைக்கண்டு பலர் நகைப்பர்; அதைப்பற்றி ஒரு பாட்டுண்டு. "உண்மை நண்பர் இவ்வீட்டில் வேண்டிய இடங்காண்பர்" என்பான்

---

† Heraclitus (கி. மு. 535--475) கிரேக்கஞானி; காணும் பொருள்களெல்லாம் கனலிற்போந்து கனலிலியங்கிக் கனலுக்கே மீள்கின்றன; உலகம் இரு விகாரப் போர்க்களம்; சத்தும் அசத்தும் இணைபிரியாதன; எல்லாம் என்றும் மாறுவன என்பது இவருடைய விகார வாதம் (Doctrine of Perpetual Change).

ஸோக்ராத்தன். இச்சிறு வீட்டில் நமது அருளறிவாளன் ஒரு வெற்று நாற்காலி போட்டு வைத்திருந்தான். இது எதற்கென நண்பர் கேட்டனர். "இதில் உட்கார ஒரு நண்பனைத் தேடுகிறேன்; கிடைக்கவில்லை; "நண்பன்" என்ற பெயர் எங்கும் முழங்குகிறது; ஆனால் உண்மை நண்பன் அரிது" என்றான். வீட்டில் வறுமை யோர்புறம்; அறியாதார் சிறுமையோர்புறம்; இத்துடன் மனைவி ஜாந்திபி இவரை உலகியலறியாத வேதாந்தக் குடுக்கையென்று செய்த அவமதிப்பு கொஞ்சமல்ல. இவருடைய போதனை அவளுக்குத் தலைவேதனையாயிருந்தது. ஒருநாள் இம்மஹானை மனைவி வாயாரத் திட்டினாள்; அனைத்தையும் பொறுத்துத் தனது அறிவுப் பணியாற்ற வெளியே வந்தார் மஹான். ஆத்திரங் கொண்ட ஜாந்திபி அழுக்கு நீரை அவர் மீது பெய்தாள். கண்டோர் சிரிக்கின்றனர். பொறுமையின் எல்லையைக்கண்ட அருட்புலவன் என்ன சொன்னான்? "அப்போது இடியிடித்தது! இப்போது மழைபெய்தது!" என்று புன்னகை புரிந்து தனது அருட்பணியை நோக்கினான். ஸொக்ராத்தை ஆதன்ஸ் நகரின் வீதிகளிற் காணலாம். அழகிற்கும் ஸொக்ராத்தின் உருவிற்கும் வெகு தூரம்—சப்பைமூக்கு; முட்டைக் கண்கள்; இடுப்பில் ஒரு கந்தல்; ஆனால் அக்கண்களில் அறிவுக்கனல் பொறியும். அவர் நாவில் அருளமுதம் சுரக்கும். பொய்யும், போலித்தனமும், பகட்டும், செருக்கும், அவ்வெளிய வடிவின்முன் நடுநடுங்கும். அவன் போடும் நுட்பக் கேள்விகள்முன் கல்விச்செருக்கு கலங்கித் தலை குனியும். பொன்னே, பெண்ணே, மண்ணே, போகமே என ஓடும் அக்காலப் போலிகளையும், வீண்வாதிகளையும் தனது அருளறிவுக் கணையால் வீழ்த்தும்போது ஸொக்ராத்தன்

உரைகள் கனல்மலர்கள் போன்று பொறியும். ஆமாம், ஆமாம் என்பதைத் தவிர அவற்றிற்கு எதிர்மொழி கிடையாது. ஸொக்ராத் குணமலை; இனிமைக் கரும்பு; பொறுமை வடிவு; அறிவுச்சுடர்; அன்புக் காந்தம். எவரையும் புண்படுத்தமாட்டார்; உண்மையை உள்ளபடி அவரவர் மனத்தில் உதிக்கும்படியே கேள்வி போடுவார். "உலகைக் கிண்டாதே; உன்னை ஆராய்ந்தறி; தன்னறிவே பொன்னறிவு; மனிதன் ஆன்மா. அவனுள் அவ்வுண்மைப் பொருளுள்ளது. இக்கருப்பொருளை வெளியேற்றும் அத்யாத்ம மருத்துவச்சியே நான். நினைமின்; அறிமின்; நலந்தெரிமின்; மடமையை விலக்குமின்; மாயவலைகளை யறுமின்; அழகு, உண்மை, அஞ்சாமை, அறிவு, ஆன்மவுறுதி, நன்னெறி இவற்றை வளர்மின்; மனச்சான்றை நம்புமின்; பல கற்பனைத் தெய்வங்கள் வேண்டாம்; ஆன்மக் கடவுளை வழிபடுமின்!" என்று நாடோறும் உள்ளதைச் சொல்லவே அக்காலப் போலிகளுக்கு உடம்பெரிச்சலாயிருந்தது. அவர் மீது பொல்லாங்குகள் புனைந்தனர். அரிஷ்டவாணர் என்பவர் நாடக மேடைகளில் எல்லாரும் இம்மஹான்மீது அருவருப்படும்படியான புனைசுருட்டுகளை ஜோடித்தார். ஸொக்ராத்தன், அரசாங்கம் நம்பும் பழைய தெய்வங்களை நம்பாத நாத்திகன்; வாலிபரை மயக்கிக்கெடுக்கிறான். ஐயையோ! இவனை இப்படி விட்டால் குடி கெட்டுப்போகும் என்று அதிகாரிகளிடம் கூக்குரலிட்டனர். அநீதன் என்றதோல் வாணிகச் செல்வன் மகனை ஆன்மவழியில் திருப்ப முயன்றாராம் மஹான். இந்த அநீதனும் (Anytus), மெலதன் (Meletus) எனும் கவிராயனும் வாதியாகி ஸொக்ராத்தனை சுமார் 50 பேர் அடங்கிய நீதிமன்றத்தின் முன் நிறுத்தினர்.

இவன் நாத்திகன் என்று மெலதன் வாதித்தான்; இளை ஞரைக் கெடுக்கிறான் என்றான் அநீதன். ஸோக்ராத்தன் தனது உண்மையைத் துணிந்து கூறினான். ஸோக்ராத் தன் நீண்ட பேச்சின் சாரத்தையே இங்கு தருகிறோம்:—

"என்மீது பகைவர் பலர் ஒரு சார்பாகவே நெடுநாட் களாகப் பழி சுமத்துகின்றனர்; இவர்கள் கூற்று கலப்பற்ற பொய்; இவர்களை நான் வெறுக்கவில்லை; ஆனால் உண்மை யைத் துணிந்து கூறுகிறேன். இளைஞர்களுக்கு நல்லறிவு புகட்டி அவர்களை நல்வழியில் நடத்தும் பெரியோர்கள் அரிது; அக்கடமையே யான் செய்துவந்தேன். அதீனியர்களே! யான் ஆண்டவன் அருளாணையைப் பின்பற்றியே நடந் திருக்கிறேன். மடமைச் செருக்கில் மூழ்கியிருப்போருக்கு உண்மையறிவை விளக்கினேன். எல்லாமறிந்துவிட்டதாகச் செருக்குற்ற பண்டிதர்கள், உண்மையறிவில்லா திருப்பதை எடுத்துங் காட்டினேன். செல்வாக்குள்ளவர்களெல்லாம் என்னைப் பகைத்து வெறுத்துப் பொய் கட்டிவிட்டனர். இப் பழிகளைப் பாராட்டாமலும், எனது வறிய மனையைக்கூட கவனியாமலும் யான் இறைவனாணையால் உண்மையறிவைத் துணிந்து கூறிவந்தேன். நான் பரம்பொருளை நம்புகிறேன். என்மீது பழி சுமத்துவோரைவிட, எனக்குப் பன்மடங்கு கடவுளுறுதியுண்டு. உலகில் இது புதுமையல்ல; அறியா மக்கள் எத்தனையோ அறிஞரை இவ்வாறு பழி சுமத்திக் கொன்றார்கள்; எனக்குப் பிறகும் பெரியார்கள் தர்மத்திற் காக பலியாகப் போகிறார்கள். நண்பீர்! நான் அறத்தை உயிரினும் மதிக்கிறேன். நான் நம்பும் அறவழியில்தான் நடப்பேன். எதுவரினும் பொறுப்பேன். சாவுவரினும் செய்யுங்கடமையைச் செய்தே தீருவேன். அறியாதவர்

களுக்கு அறிவொளி புகட்டும் என் கடனை இறுதிமட்டும் இயற்றியே தீருவேன். இறப்பை அஞ்சிலன்; இறப்பை அஞ்சுதல் மடமை; ஆற்றும் பணியை அச்சத்தாற் கை விடேன். "வீண்பொருள் மயக்கமொழிந்து உண்மைப் பொருளைத் தேடு" என்று ஒவ்வொருவனையும் தூண்டித் தூண்டி வேண்டுவேன். என்னைத் தள்ளினும் கொள் கையை விடமாட்டேன். என்னைக் கொல்வதால் என் ஆன் மாவிற்கு இம்மியும் உங்களால் தீங்கிழைக்க முடியாது. என் னைக் காத்துக்கொள்ள நான் இவ்வளவு பேசவில்லை; ஆண்ட வன் உங்களுக்குக் கொடுத்த ஒரு அரும்பெரும் பொருளை மறுத்து, பின்னே பழிப்புறுதீர்கள் என்றே எடுத்துரைக்கி றேன். ஆண்டவன் கட்டளை யில்லாவிடின் அல்லும்பகலும் எனது உடலையும் மனையையும் கருதாது ஒவ்வொருவரிட மும் சென்று "அப்பா! ஆன்மா பெரிது; அறம் பெரிது; அறிவைத் தேடு; உண்மையை நாடு. வீண்மயக்கில் வீழாதே" என்று யான் ஏன் எடுத்துரைக்க வேண்டும்? உமக்கும் எனக்கும் நல்லவழியை இறைவன் அறிவான். ஆண்டவன் இச்சை நடக்கட்டும்."

சொக்ராத்தன் குற்றவாளியெனத் தீர்மானித்து மரண தண்டனை விதிக்கின்றனர். அதை ஏற்று மஹான் மொழி கிறார்:—

"உங்கள் தீர்ப்பிற்காக நான் வருந்தவில்லை. நான் எவ ருக்கும் அறிந்து பிழைசெய்யவில்லை. "ஆன்மாவைப்பற் றிச் சிறிது கவலையெடுத்துக்கொள்ளுங்கள்" என்றேன். உங்களுடைய நலத்திற்கே உண்மையாகப் பாடுபட்டேன். என்னுயிரைக் காத்துக்கொள்ள ஆசைப்படவில்லை; சிறை யில் அடிமையாகப் பிழைத்திருக்கவும் விரும்பிலேன்; இத்

தள்ளாத வயதில் என்னை ஊர்கடத்தினுல் ஊரூராகத் திரிந் தலையவும் வேண்டேன். யான் ஏழை; அபராதம் கொடுக்க வும் வகையில்லேன்; என் அறிவுப்பணியும் விடகில்லேன்.''

''அதீனியர்களே! என்மீது மரணதண்டனை விதித்தீர் கள். எழுபது வயதுக்கிழவன் இன்னும் சிலநாட்களில் இயல் பாகவே இறந்திருப்பேன். இப்போது 'அதீனியர் அறிஞன் ஸோக்ராத்தனைக்கொன்றனர்' என்று உலகம் உங்கள்மீது பழி சுமத்தப்போகிறது. எனக்குப்பின் என்னைக் கொலை செய்த நீங்கள் இதைவிடப் பன்மடங்கு அதிகமான தண் டனையடையப்போகிறீர்கள். உங்கள் பிழைகளைக் காட்டிய தற்காக என்னைக்கொன்றீர்கள்; எனக்குப் பிறகு இன்னும் கடுமையாக உங்கள் குற்றங்களை எடுத்துக்காட்டும் பெரியோர் வருவர். இம்மரணம் ஆண்டவனிச்சை; அதை அவர் என் னுள் தடுக்கவில்லை. நியாயவாதிகளே! சாவைக்குறித்து மகி ழுமின்! நல்லோனுக்கு வாழ்விலும் சாவிலும் பொல்லாங்கு வராது. இறைவன் கைவிடான். ஆனுல் என் மைந்தர் வயது வந்தபிறகு நன்மை கடைப்பிடிக்காது பொருளையும் மீற்றதையுமே குறித்தலைந்தார்களாயின், உள்ளே வெறு மையாயிருந்து ஏதோ தெரிந்ததுபோலப் பகட்டினுரேயா யின் அவர்களையும் தண்டியுங்கள். நான் சாகப்போகிறேன்; நீங்கள் வாழப்போகிறீர்கள்! எது நலமென்று இறைவனே யறிவான்!''

இதன்பின் ஸோக்ராத்தன் சிறையிலடைக்கப்பட்டான். அப்போது ஆதன்ஸிற்கு ஒரு மாதம் நோன்புக்காலம். நோன்புக்கப்பல் கிரேக்க கோயில்களைச் சுற்றிவந்ததும் குற்றவாளியைக் கொலைசெய்வது வழக்கம். அதற்குள் ஸோக்ராத்தன் தனது சீடர்களுக்குச் செய்த உபதேச

மணிகள் மிகவும் அருமையானவை. ஸொக்ராத்தனைத் தப்புவிக்கச் சீடர்கள் எவ்வளவோ அழுது மன்றாடினர்; மஹான் அமைதியாக இறுதிநாளை எதிர்பார்த்திருந்தார். கிரிதன் என்னும் முதிய அன்பன் எதுவரினும் ஐயனைச் சிறையைவிட்டுத் தப்புவிக்கச் சித்தமாயிருந்தான். இறைவனிச்சையைப் பின்பற்றுவோம். சட்டத்தீர்ப்பை அவமதித்து ஓடுவது பேதமை என ஒரு பெரிய சம்பாஷணை செய்து கிரிதரின் எண்ணத்தைப் போக்கினார். இறுதிநாள் வந்தது; தன்னடி நிழலில் மனந்தளர்ந்து வீற்றிருக்கும் சீடர்களுக்கு மஹான் அரிய அறிவுமணிகளையணிகிறார். "ஆண்டவன் ஆணையில் யான் இருந்தேன்; இவ்வுடல் வீழ்ந்தபின் அவர் காப்பிலேயே யிருப்பேன். அறிவாளியின் மனம் உடலிற் கட்டுப்பட்டிராது. அது ஆன்மாவிற் கலந்திருக்கும். அன்பர்களே! ஆன்மாவைக் கருதுங்கள். ஆன்மசுத்தி பெறுங்கள்" என்று பலவாறு அருமையாக அரிய உண்மைகளைப்புகட்டினார். நேரம் வந்துவிட்டது. மஹானுக்கு விஷபானம் தரப்போகிறார்கள். அதற்காக ஏற்பட்ட அதிகாரி வினயமாகக் காரியத்தைத் தெரிவிக்கிறான். "எத்தனை தடவை வேண்டுமானாலும் விஷபானம் தாருங்கள்." என்று புன்சிரிக்கிறார் மஹான். மனைவி ஜாந்திபி மக்கள் மூவருடன் வந்து அடித்தலறுகிறாள்; அவளைச் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அனுப்புகிறார். சிறை அதிகாரி ஒரு கிண்ணத்தில் நஞ்சைத் தருகிறான். அவனை வாழ்த்தி அதைப் புன்னகையுடன் வாங்கி ஒரே மடக்கில் குடிக்கிறார் ஞானி. பிறகு சற்று உலாத்துகிறார். கால் மரமரக்கிறது; தலைகிறுக்குகிறது; உடனே படுக்கிறார். "அமைதியாயிருங்கள்; அழாதீர்கள்; எனக்காக ஆண்டவனுக்கு ஒரு வழிபாடு செய்யுங்கள்" என்று அன்பரை அன்

புடன் நோக்குகிறார். விஷம் தலைக்கேறி அதன் வேலையைச் செய்தது. வினையுடலின் வேலையும் முடிந்தது. ஸொக்ராத்தன் சுத்தான்மநிலை யெய்தினான். காலக்கொடுமை உடலைக் கொன்றது; உண்மையான ஸொக்ராத்தன் காலதேசக்கட்டின்றி என்றும் உலகவுள்ளத்தில் வாழுகிறான்.

ஸொக்ராத்தன் அருள்வாக்குகள் காலப்பாறையில் வைரமணிகளால் இழைக்கப்பட்டு உலகெங்கும் விளங்குகின்றன. *ஜனபன், ப்ளாத்தன், அரிஸ்தோதலன் முதலிய அறிவுச்சுடர்கள் ஸொக்ராத்தனின் அறிவொளியை எங்கும் பரப்பினர்.

# 10. ப்ளாத்தன்.

(கி. மு. 428—349)

ஸொக்ராத்தனின் சுடர்மொழிகளை நூல்களாக்கி உலகிற்கு அரிய அறிவுப்பணி செய்த புலவன் ப்ளாத்தன். இவர் கி. மு. 428-ல் மேமாதம் ஒரு செல்வ மனையிற் பிறந்து எண்பதாண்டுகள் வாழ்ந்தார். இவர் தகப்பன் அரிஸ்தன் அதீனிய மன்னர் வழிவந்தவன்; தாய் பெரித்தினாள் (Perictione) செல்வச்சீமாட்டி. பிளாத்தன் கல்வியறிவில் முற்றி உண்மையான உள்ளறிவில் ஆர்வங்கொண்டிருந்தான். தனது பதினெட்டாவது வயதில் மஹான் ஸொக்ராத்தன் உறவு கிடைத்தது. 26-வயது மட்டும் ஸொக்ராத்தனின் உபதேசங்களைப் பருகி அவ்வுள்ளம் பக்குவப்பட்டது. அறத்திற்

* ஜனபன், ஒன்றே பொருள்; அது அசைவற்றது; முதலீறற்றது; மாசற்றது; அதுதானே தானானது; அதன் விரிவே எல்லாம் என்று உபதேசித்தான்.

காக உயிரீந்த அருளறிஞன் என்று ஸொக்ராத்தனை ப்ளாத்தன் போற்றினன். ஆதன்ஸ் அதிகாரிகள் ஸொக்ராத்தனுக்கிழைத்த கொடுமைகளால் மனம் நொந்து பிளாத்தன் அரசியலை முற்றும் விலகி ஆன்மவாராய்ச்சியில் ஈடுபட்டான். ஸொக்ராத்தனுக்குப் பிறகு அவனுடைய நண்பரும் சீடரும் வெளியூர்களுக்குச் சென்று சிலகாலம் வசிக்கவேண்டியிருந்தது. முதன்மையாக பிளாத்தன் ஸொக்ராத்தனை நன்மதித்த மெகரா எனும் ஊருக்குச்சென்று சிலகாலம் வசித்தான். இக்காலத்தில் அவன் இத்தலி, கார்த்தாகம் முதலிய நாடுகளுக்குச்சென்று நல்லறிவாளர்களைச் சந்தித்தான்; ஆங்காங்கு மனித வியல்பையும் கண்ணுற் கற்றறிந்தான். ஸொக்ராத்தனின் மொழிமணிகளைக் கோவைசெய்தான்; அவற்றை நன்கு சிந்தித்துத் தனதாக்கிக்கொண்டு தான் அனுபவத்திற்கண்டதையும் கூட்டித் தனது சித்தாந்தத்தைத் தனியே அமைத்துக்கொண்டான். கி. மு. 388-ல் 40-வது வயதில் ப்ளாத்தன் ஆதன்ஸில் ஒரு பெரிய கல்வி மன்றம் அமைத்துப் பல இளைஞருக்கு இயலறிவு நூலும், கணக்கும், ஆன்ம ஞானமும், சிறந்த தூய நடையும் பயிற்றி அரிய பணிபுரிந்தான். இச்சமயம் பல அரிய நூல்களை எழுதி முடித்தான். அறிவாளிகளுடன் தான் பேசியவற்றையெல்லாம் கோவையாகக் குறித்துவைத்தான். இவை சுமார் 36 நூல்களாகத் தொகுக்கப்பட்டு இன்றும் விளங்குகின்றன. இவற்றுள் ஸொக்ராத சம்பாஷணைகளும்(Socratic dialogues) வீதர் (Phaedo) குடியரசு (Republic) என்னும் நூல்களும் மிகவும் இசைபெற்றவை. ஆன்மா அழியாமை, தூயவாழ்வு, பெண்களுடன் மாசற்றவுறவு, மெய்யறிவு, கடவுட்சிந்தனை, நன்னெறி, அழகின் இனிமையும் தூய்மையும் முதலிய

அரிய பொருள்களைப்பற்றி இந்நூல்கள் அமைந்துள்ளன. ஆன்மாவும் யாக்கையும் சேர்ந்தே மனிதன். புலனாற்காண்பது மாறக்கூடியது ; ஆன்மா கடவுளுண்மை. உயர்ந்த நன்மையும் கடவுளும் ஒன்றே (God and the highest good are the same). ஆன்மா என்றுமுள்ளது ; உடல் அழிவது. இறைவனே முழுவுண்மை. அவனை யடைவதே நன் முயற்சி. வாடா அழகு உள்ளத்துள்ளது. இன்பம் அகத்தே யுள்ளது; புறத்தேயில்லை. பணிவும் துணிவும் அறிவும்பூண்ட தொழிலாளர், வீரர், அறிஞர் இவர்களே நாட்டின் முக்கண். தூய்மை, ஒழுக்கம், நல்லறிவு, நற்கல்வி, நீதி, ஆன்மவுறுதி, நன்னினைவு இவையே வாழ்வின் அணிகலம். சிறுவர்களுக்கு 3-வயதுமுதல் 6-வயது மட்டும் நீதிக்கதைகள் புகட்டல், 10-வரையில் உடற்பயிற்சி, 13-வரை எழுதப்படிக்கக் கற்பித்தல், 16-வரை பாட்டும் கவிதையும், 18-வரையில் கணக்கும் இயலறிவும், 20-வரை ராணுவப்பயிற்சி, அதன்பின் அரசஆழியம், 30-ல் தத்துவப்பயிற்சி அளிப்பது நலம். ஒரு நாட்டில் ஆத்மஞானிகளுக்கே உயர்ந்த சிறப்பீதல்வேண்டும். என்பன பிளாத்தோபதேசங்கள். தூய நன்னெறி வாழ்வையே ப்ளாத்தன் வற்புறுத்தினன். பிளாத்தோபதேசங்களைப் பலர் பின்பற்றினர். எகிப்திய ஞானி ப்ளோதனு (Plotinus) (கி. பி. 204—270) என்பவர் புதிய பிளாதேயம் (Neo Platonism) என்று ஒரு மதம் கண்டார். இவர் 50 வயதுமட்டும் எதுவும் எழுதாது பிறகு கடவுட்காட்சி பெற்று நான்கு நூல்களை எழுதிச்சென்றார். கடவுளுணர்வில் வாழ்வதே உயர்வு ; உள்ளறிவே உயர்வு; கடவுளின்பத்தின் முன் உலகின்பம் தூசிபெறாது ; தியானத்தாற் கடவுட் கலப்பெய்துக என்பது இவருடைய உபதேசம்.

# 11. அரிஸ்தோதலன்

(கி. மு. 384—322)

அரிஸ்தோதலன் ப்ளாத்தனின் தலைமாணுக்கன். தந்தை நிகமாகன் (Nicomachus) மாஸிதோனிய மன்னன் அமந்தனுக்கு (Amyntus) அரசாங்க வைத்யனு யிருந்தார். அறிவிற் சிறந்த தந்தை அரிஸ்தோதலனைப் பதினுறு வயதுமட்டும் கருத்துடன் பயிற்றிக் காலஞ்சென்ருர். அதன் பிறகு அரிஸ்தோதலன் அறிவை வளர்க்கப் பெரிதும் ஆர்வங்கொண்டு, ஆதன்ஸில் ப்ளாத்தக் கல்விச் சாலையிற் சேர்ந்தான். "எனது கல்வி மன்றத்தின் மூளை" என்று ப்ளாத்தன் அவரைப் புகழ்ந்தார். ப்ளாத்தனை அரிஸ்தோதலன் மிகவும் நேசித்தான். அதைவிட உண்மையை மிக மிக விரும்பினன். ஒரு நாள் தனது பிரசங்கத்தில் அரிஸ்தோதலன் ஒருவனே இருந்தான். "அரிஸ்தோத்தலன் இருந்ததே போதும்—ஆதன்ஸில் நல்லபாதி (Better-half) எனத் சொற்பொழிவைக் கேட்டதாக மகிழுகிறேன்" என்ருன் பிளாத்தன். பிளாத்தன் காலஞ்சென்றபின் கி. மு. 324-ல், அரிஸ்தோதலன் அலெக்ஸாந்தர் மன்னனுக்கு ஆசிரியரானுன். சிக்கந்தர் இப்பெரிய அறிவாளியை நன்கு போற்றினர். சிக்கந்தர் காலஞ்சென்ற பின், பகைவர் நாத்திகக்குற்றஞ்சாற்றிக் கொல்லமுயன்றனர். இதையறிந்து தானே ஈபோ (Euboea) என்ற தீவையடைந்து அங்கே அரிஸ்தோதலன் காலமானுன்.

பிளாத்தன் ஊகமும், கலைவளமும், நடையழகும் உள்ள வன்; அரிஸ்தோதலன் அனுபவஞானமும், அளவற்ற கல்வியும், நுண்மாண்புலமையும், உலகறிவும், உள்ளறிவும் ஒருங்கே வாய்ந்தவன்; உடலுக்கும் உயிருக்கும் உறுதிதேடச்சொல்லுவோன். அவனே அநுமான நியாயத்தை (Deductive Logic)வகுத்தான். அதனின்றே பேகன் (Bacon) அநுமிதி நியாயத்தை (Inductive Logic)த் தொகுத்தான். தற்கால இயலறிவாளர் (Scientists) அணுவாதத்தை (Atomism)க் கருவியாகக் கொண்டதுபோல, கிறிஸ்து தத்துவப்புலவர் அரிஸ்தோதலன் முறையைத் தழுவுகின்றனர். அவனது மொழிகள் பைபிளுடன் போற்றப்படுகின்றன. ஆதன்ஸில் தனது சொற்கூடத்தில் (Lyceum) உலவிக்கொண்டே இவர் உபதேசிப்பதால் இவருடைய மாணவர்களுக்கு உலவிப் பயில்பவர் (Peripatetics) என்று பெயர் வந்தது. வீட்டு நலம் நாட்டு நலம்; அறிவும், ஆற்றலும், அன்பும், உடலுறுதியும், உள்ளொளியும், பூரணவாழ்வும், அழிவற்ற ஆன்மவுணர்வும் . பெறுக; மனிதான்மா விலங்கிற்கும் கடவுளுக்கும் இடை நிலை; கடவுட்டன்மையின் பால் அதை உயர்த்துக; வாழ்வும் ஆத்மானுபவமும் இணைக என்று இவர் உபதேசித்தார். இவர் "அரசியல்" என்ற தலைப்பில் எட்டு அரிய நூல்களையாக்கியுள்ளார். மனை வாழ்வை ஒழுங்குறுத்தலே மாநிலவாழ்வு நேராகும் வழியென அவர் அதில் வற்புறுத்துகிறார்.

வீடுகளி னீட்டம் விரிநாடா மாதலினால்
வீடென்றே நாட்டை விரும்பு.

Kesari Printing Works, Madras.

146

57